

கல்கி
KALKI
9-10-1961
30 காச



'இப்படியாப்பட்ட புள்ளேயோட ஈடுகுடுக்கறதுன்னு... கைகொள்ளாத வேலேதான் போங்க. பயலேப் பளிச்சுன்னு சுத்தமா வெச்சுக்கணும்னு, எப்பப் பாருங்க, துணிதொவக்கற வேலேதான்... நல்ல வேளை, ஸன்லேட்தான் தெனம் காப்பாத்துது. வளப்பமா நுரை... துப்புரவாத் துணி வெளுக்குது தொல்லேயில்லாம. சுத்தமான சோப்புக்கு அடையாளமே அதானே!'

புது டில்லிவாசியான ஸ்ரீமதி கமலா வாத்வானி கூறுகிறர்: 'ஸன்லேட்டுக்குஈந்தசோப்பும் ஈடாகவே ஆகாது!'

ஸன்லேட்



ஸன்லேட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!

S. 31-X52 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்

பிலவ, ஐப்பசி 13

கல்கி

அக்டோபர் 29, 1961

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சிகரெட் உற்பத்திக்கான ஆள்பலம், நிதி, பொருள் நிறைவு ஆகிய எவ்வளவோ வசதிகள் நம் நாட்டுக்கு உள்ளன. எனினும் பாரதத்திலே, சிகரெட்டுத் தொழில் தனக்குரிய உயர்நிலையை இன்னும் எய்த முடியவில்லையென்றால், அது இந்திய மூலதனம் கணங்கிப்போயிருக்கிறது என்பதனாலோ, அல்லது தேர்ச்சிவாய்ந்த தொழிலினம் இல்லாமையாலோ அல்ல. ஆனால் இந்தியாவில் வாணிபக் கூட்டுறவு அமைந்த அந்நியர்களின் ஏகபோக உரிமையாட்சியினால்தான்.

புகையிலையின் வரலாறு... 9



பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT 709 TM

Greens' Advtg.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 13

என் கோபத்துக்குக் காரணம்

ராஜாஜி

ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு அவர்கள் நான் ஏன் இவ்வளவு கோபமாகப் பேசுகிறேன் என்று கேட்கிறார். என் வருத்தத்தை அவர் கோபம் என்றே கருதட்டும்; ஆனால் நான் ஏன் 'கோபம்' கொண்டிருக்கிறேன் என்பதை அவர் ஊகிக்க முடியாதா, என்ன? நல்ல அளவில் நேர்மையும், தெய்வபக்தியும் கொண்டிருந்த நம் மக்கள் இன்றைய சர்க்கார் அமுல் செய்யும் கொள்கைகளால் நேர்மை இழந்தவர்களாகவும் துராசைக்காரர்களாகவும் ஆகிவிட்டதை அவர் காணவில்லையா? நீதி உணர்ச்சியும், யோக்கியமும், சேவை மனப் பான்மையும் கொண்ட சர்க்கார் ஊழிய வர்க்கத்தினர் இன்று முதுகெலும்பை இழந்து, மந்திரிகளை முகஸ்துதி செய்பவர்களாகவும், கட்சி மனப்பான்மை உடையவர்களாகவும் ஆகிவிட்டதை அவர் உணரவில்லையா? இவையெல்லாம் கண்டு நான் வருந்துகிறேன். அதோடு மக்களில் பெரும்பான்மையினர் மீது பயம் என்னும் கனத்த விஷப் பனி படிந்திருப்பதையும் நான் காண்கிறேன்.

ஜனங்களின் இதயத்தில் ஆண்டவன் இருக்க வேண்டிய இடத்தில் இன்று பணப் பேயானது குடிகொண்டிருப்பதை நான் காண்கிறேன். இதற்கு முக்கிய காரணம் காங்கிரஸ் ஆட்சியின் செயல்களும் பிரசாரமும் என்பதையும் காண்கிறேன். எல்லாவற்றிலும் பிரவேசித்து அனைத்தையும் ஆளப் பார்க்கிறது சர்க்கார். அதன் காரணமாகத் தனி மனிதர்களின் ஒப்புரவும் ஈகையும் அவற்றை மையமாகக் கொண்ட மற்றப் புராதனப் பண்புகளும் மறைந்து போய் வருவதைக் காண்கிறேன்.

தாய்நாட்டின் நலனுக்குகந்த முறையில் வாணிபமும், பெரும் ஆக்கத் தொழில்களும் புரிந்து அவற்றில் வெற்றி பெற்றுத் தம் தகுதியை நிரூபித்துக் காட்டியவர்களை விஷயஞானமற்ற உத்தியோகஸ்தர்களும் ஞான சூனியத்தோடு ஆணவமும் சேர்ந்த மந்திரிமார்களும் அலட்சியமாகக் கருதி அவர்கள்மீது அதிகாரம் செலுத்துவதை நான் தினமும் பார்க்கிறேன்.

காங்கிரஸ் சர்க்காரின் காரியங்களால், கிராம மக்களுக்கு வழிகாட்டியாயிருந்த பெரிய பண்ணையார்கள் பட்டணக்கரைக்குக் குடிபோய் விட்டார்கள். அதன் காரணமாகக் குடியானவர்கள் ஆயன் இல்லாத மந்தைகளாகி விட்டார்கள். மக்களுடைய சொத்துக்களைச் சர்க்கார் ஆர்ஜிதம் செய்தால் உரிய நஷ்ட ஈடு கிடைக்கும் என்ற நம்பிக்கை போய் விட்டது. நஷ்ட ஈடு என்பது ஒரு மோசடியாகிவிட்டது. கோர்ட்டுக்குச் சென்று நியாயம் பெற முடியாதபடி நீதிமன்றங்களின் கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன.

எல்லாத் துறைகளிலும் தன் ஆதிக்கத்தைப் பரப்ப வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கும் நேரு சர்க்கார்தான் இவற்றுக்கெல்லாம் காரணம் என்று நான் உணருகிறேன்.

சர்க்கார் காரியாலயங்களில் அகந்தையும், லஞ்சமும், அநீதியும் நிறைந்திருப்பதை நான் காண்கிறேன். பயமோ, வெட்கமோ இல்லாமல் மந்திரிமார்கள் காங்கிரஸ் கட்சிக்குத் தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பணம் திரட்டுவதைப் பார்க்கிறேன். நடுநிலைமையில் நின்று எல்லாக் கட்சிகளுக்கும் பணம் தருவது பிசகு என்றும் அப்படித் தருபவர்களிடம் தாம் பணம் பெறுவதைப்பற்றி வெட்கப்படுவதாகவும் பிரதமர் சொல்லியதையே வைத்து இந்தப் பலவந்த வசூலில் ஏகபோக உரிமையும் கொண்டாடப்படுகிறது. வெட்கப்பட்டு வாங்கும் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவுமில்லை. இது போன்ற நடவடிக்கைகளை முன்னாட்களில் யாரும் நினைத்ததுகூட இல்லை. அத்துடன் இன்று நடக்கும் அநீதியை ஒப்பிட்டுக் காணும்போது ஏன் கோபம் வராது?

கம்யூனிஸத்தைப் பயிர் செய்வதற்காக இன்று உழவு நடப்பதை நான் காண்கிறேன். அதனால் சுதந்திரம் என்பது சர்வநாசமாகி விடும் என்பதும் எனக்குப் புலனாகிறது. கடன் வாங்கிய பணத்தை வாரி இறைத்து விரயம் செய்வதெல்லாம் பார்க்கிறேன். விமானந்தாங்கிக் கப்பல்கள் நமக்கு என்னத்திற்கு? அணுசக்தி நிலையங்கள் இந்த நாட்டுக்கு வேண்டுமா? இந்த நாட்டு சர்வாதிகாரியை மேல்நாட்டு மோகம் ஆட்கொண்டிருக்கிறது; அது அவரைத் தவறான வழியில் இட்டுச் செல்கிறது; அவரைச் சூழ்ந்துள்ள இச்சகம் பாடுபவர்கள் அந்த வழியில் அவரை மேலும் ஊக்குகிறார்கள். இதனால் நமது அந்நியக் கடன் மலையாகக் குவிந்து வருகின்றது. கௌரவமான முறையில் அதைத் திருப்பித் தருவதற்குத் திட்டம் ஏதும் கிடையாது; அது சாத்தியமும் இல்லை. ஊழல்கள் அங்கீகாரம் பெற்ற ஒரு சம்பிரதாயமாக ஆகிவிட்டன.

இதையெல்லாம் காணும் நான் துயரப்படாமலிருக்க முடியுமா? நான் இத்துணை துயரப்பட்டாலும் முழுதும் மனம் தளர்ந்து விடவில்லை; இவற்றை எதிர்க்கிறேன். ஆனபடியால் என்னுடைய கிலேசம் நேருஜிக்குக் கோபம் போலத் தோன்றுகிறது.

அணுச்சோதனையும் அகச்சோதனையும்

அணுகுண்டு யுத்தம் மூண்டால் மனித குலம் முழுவதும் ஓரிரு நாட்களில் வேரோடு நாசமாகி விடும் என்று அபயப் பிரதானம் அளித்திருக்கிறார் அணு விஞ்ஞான நிபுணர் ராஸ்ப் லாப். யுத்தத்தின் பயங்கரம் இவ்வளவு குறுகிய காலத்தில் முடிவுறும் என்பது ஆறுதலளிக்கும் விஷயம்தானே?

ஆனால் தனக்கே உலை வைத்துக் கொள்ளும் பஸ்மாசுரச் செயலில் எந்த வல்லரசும் நேரடியாக இறங்காது; அதற்குப் பதிலாகச் சோதனை என்ற பெயரில் அணு குண்டுகளை வெடித்து உலகச் சூழல் முழுவதையும் நச்சுமயமாக்கி, மக்களை அணு அணுவாகக்கொல்வதில் அவை முனைந்துள்ளன. இந்தக் கொடுமையில் ருஷியா தலை தெறிக்க முன்னேறி வருகிறது. உலக ஜனத்தொகையில் எண்பது சத விகிதத்தினரைக் கதிரியக்கக் கொடுமைகளுக்கு ஆளாக்கக் கூடிய ஒரு ராட்சத அணுகுண்டை வெடிப்பதாக அது முடிவு செய்திருக்கிறது. அவ்விதம் அது செய்தால் தானும் அணுகுண்டுகளை வெடிக்கப் போவதாக எதிர் மிரட்டல் போடுகிறது அமெரிக்கா. ஏதோ இந்த உலகம் முழுவதும் இந்த இரு நாடுகளின் சொத்து போலவும் அதனைப் பாழாக்கத் தங்களுக்குப் பூரண உரிமை இருப்பது போலவும் இவை கருதுவது அதிர்ச்சிதரும் அதிசயமாகும். எனினும், இதே சமயத்தில், அடுத்த முப்பது நாட்களுக்குள் தான் ருஷியாவுடன் அணுச்சோதனைத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயாரெனவும் அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்த அறிக்கையில் காணும் விஷமத்தை மறந்து, விஷயத்தை மனத்தில் வாங்கிக் கொள்ள வேண்டியது ருஷியாவின் கடமை. 'கிழக்கு ஜெர்மனியுடன் தனி ஒப்பந்தம் செய்து கொள்வேன்' என்று பயமுறுத்திய குருஷேவ் அவர்கள் அதற்கான கால வரம்பைத் தள்ளிப் போட்டதால் சமீபத்தில் தான் உலகின் பாராட்டுதலைப் பெற்றார். அந்தப் புகழை அவர் இவ்வளவு சீக்கிரம் இழக்கலாகாது. அணுச் சோதனைகள் மூலம் உலக மக்கள் யாவரையும் பாதிப்பதற்குத் தமக்கு என்ன உரிமை இருக்கிறது என்று அவர் தம் மனத்தை ஆராய்ந்து பார்த்துக் கொள்வதற்கு அவர் நம்பாத அந்தக் கடவுள்தான் அருள் புரிய வேண்டும்!

விடிவு நாள் என்று வரும்?

ஈழத்தில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வில் இருள் நீங்கும் நாள் தள்ளிக் கொண்டே போகிறது.

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த தமிழர்கள் பிரஜா உரிமை பெறாததைக் கண்டோம்; தமிழ் மொழி உரிய இடம் பெறாததைக் கண்டோம்; இப்போது இலங்கையின் மலைத் தோட்டத் தமிழ் தொழிலாளிகளின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் ஏற்பாட்டில் இலங்கை அரசாங்கம் இறங்கியுள்ளது. மலைத் தோட்டத் தொழிலாளர்களில் ஒரு குறிப்பிட்ட சத விகிதத்தினர் சிங்களவர்களாகவே இருக்க வேண்டும் என அது முடிவு செய்திருக்கிறது.

கடைசியாகப் பேரிடி போல் ஒரு செய்தி வந்திருக்கிறது. தாங்கள்

கள்ளக் குடிகள் என்று ஐயுறும் யாரையும் சோதிக்கவும், கைது செய்யவும், காவலில் வைக்கவும் ராணுவத்துக்கு அதிகாரம் அளிக்க உத்தேசித்திருக்கிறது இலங்கை அரசாங்கம். கள்ளக் குடியேற்றம் முறையானது என்று யாரும் கூற மாட்டார்கள். ஆனால் அதைத் தடுப்பதற்கு வேறு வழிகள் உண்டு. இன்றைய இலங்கைத் தமிழர் நிலையை அந்தச் சர்க்கார் பிரசாரம் செய்தாலே போதும்! 'இவர்கள் கள்ளக் குடிகள்' என்று சர்க்கார் நிரூபித்து யாரையேனும் வெளியேற்றினால் அது நியாயமாகும். ஆனால் நீண்ட நாளைய குடிகளும் தாங்கள் கள்ளக் குடியேற்றம் செய்தவர்கள் அல்ல என்று நிரூபித்துக் காட்டுமாறு உத்தரவிடும் முறையை என்னென்பது?

'பற்பல நினினும் பரவி இவ்வெளிய
தமிழச்சாதி.....
வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும்
செய்தியும்
......கேட்டும் எனதுளம் அழிந்திலேன்;
தெய்வம் மறவார்; செயுங்கடன்
பிழையார்;
ஏதுநான் செயினும், ஏதுநான்
வருந்தினும்,
இறுதியில் பெருமையும் இன்பமும்
பெறுவார்
என்பது என் உளத்து வேர்
அகழ்ந்திருத்தலால்'

என்று பாரதியார் நம்பியது போலவே, நம் தமிழ் சகோதரர்களின் நேர்மையானது, இறுதியில் அவர்களுக்குப் பெருமையும் இன்பமும் ஈட்டித் தரும் என்று நாமும் நம்ப வேண்டியதுதான்!

சபாஷ், ராமராவ்!

ஆட்சி நலன்களையோ, சுய முன்னேற்றத்தையோ கருதாத பெருமக்கள் வரவேற்கும் ஓர் அரசியல் கட்சி இந்தியாவில் உண்டென்றால் அது சுதந்திரக்கட்சிதான். வெளிப்படையாக அவ்விதம் வரவேற்பளித்து இந்தக் கட்சிக்கு வலுவளித்திருக்கும் ஸ்ரீ பெனகல் ராமராவ் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மேதா விலாசத்துக்குப் பெயர் பெற்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராமராவ் அவர்கள் ரிஸர்வ் பாங்கின் கவர்னராகவும், அமெரிக்காவில் இந்தியாவின் தூதராகவும் பணி புரிந்தவர். உள்ளது உள்ளபடி கூறுவதில் புகழ்பெற்றவர். இன்றைய காங்கிரஸ் கட்சி காந்தியத் தத்துவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட சர்வாதிபத்திய இடது சாரி கட்சியாகிவிட்டது என்று அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறி யிருக்கிறார். எனவே வலதுசாரி எதிர்க் கட்சியினரை வளர்ப்பதே இந்நாடு உடனடியாகச் செய்ய வேண்டிய காரியமாகும் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்.



வியாபார சமூகம், படிப்பாளிகள் இவர்கள் மீது சுதந்திரக் கட்சி பெற்றுள்ள அபரிமிதமான செல்வாக்கைப் பற்றிக் கூறியுள்ள ஸ்ரீ ராமராவ் அவர்கள், எண்ணிக்கையைக் கொண்டு மட்டும் இக்கட்சியின் பலத்தை நிர்ணயிக்கக் கூடாது என்று கூறியிருப்பது கட்சிக் கொள்கைகளின் தரத்துக்கு ஒரு புகழ்மாலையாகும். வாயடைத்துப் போயிருந்த இந்நாட்டுப் பத்திரிகை உலகை மனம் விட்டுப் பேசவைத்தது சுதந்திரக் கட்சிதான் என்று அவர் பாராட்டுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, காங்கிரஸ் கட்சியானது கூட்டுப் பண்ணையிலிருந்து சேவைக் கூட்டுறவு என்ற சுயேச்சை அமைப்புக்கு மாறியிருப்பதற்கு (அதன் அந்தரங்க சுத்தம் எப்படியாவது போகட்டும்!) சுதந்திரக் கட்சி தான் காரணம் என்கிறார் அவர். சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை ஆட்சியாளர்கள் ஏற்பதால் இக்கட்சி தேர்தலில் பிரயோகிப்பதற்குப் பலமான அஸ்திரமில்லாமல் போய்விடும் என்றும், எனினும் காங்கிரஸின் போக்கு மாறினால் அதுவே சுதந்திரக் கட்சிக்கு ஒரு வெற்றியாகும் என்றும் ஸ்ரீ ராமராவ் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரக் கட்சி தனது தேர்தல் வெற்றியைப் பற்றிக் கவலைப்படவில்லை. தர்மம் வெற்றி பெறுவதில் தான் அது அக்கறை கொண்டிருக்கிறது. எனவே காங்கிரஸ் கட்சியானது சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைப் பின்பற்றி வெற்றி

யடையுமானல் அதில் சுதந்திரக் கட்சி மட்டற்ற மகிழ்ச்சியே அடையும். 'எனக்கு எந்தத் தனி காங்கிரஸ்கார ரிடமும் வெறுப்பில்லே. இன்று நேரு ஜியோ, காமராஜரோ சுதந்திரக் கட்சிக் கொள்கைகளை ஏற்க முன்வந்தால் அவர்களிடம் இந்த ஸ்தாபனத்தை ஒப்புவித்து விடுவேன்' என்று முன்பொரு சமயம் ராஜாஜி கூறிய வாசகங்களே இதற்குச் சான்று. ஆனுல் சேவைக் கூட்டுறவு போன்ற கொள்கைகளைக் காங்கிரஸ் ஏற்பதாகச் சொல்லிக் கொள்வது சந்தர்ப்பவாதம்தான். தேர்தலில் பட்டா பெற்ற பின் அதன் சுயரூபம் வெளியாகக்கூடும் என்ற நியாயமான சந்தேகம் தீராத வரையில் சுதந்திரக் கட்சியின் போராட்டம் மிக அவசிய மானதே! இதை உணர்ந்தே தான் ஸ்ரீ ராமராவ் அவர்களும் இந்தக் கட்சிக்கு உரமூட்ட வேண்டியதன் அவசியத்தை ஆணித்தரமாக வலியுறுத்தியிருக்கிறுர்.

வீடும் விளக்கும்

"வீட்டின் எல்லா அறைகளிலும் விளக்கு போட வேண்டுமென்று நான் சொல்கிறேன்; கூடத்திலேயே எல்லா விளக்குகளேயும் போட வேண்டுமென்று காங்கிரஸ் சொல்கிறது'' என்று ஒரு முறை ராஜாஜி கூறினர். அதிகாரங்களே மத்திய சர்க்காருக்கும் ராஜ்யங்களுக்கும் ஊர் ஆட்சி மன்றங்களுக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற தமது கருத்தையும், எல்லா அதிகாரங்களேயும் தில்லியிலேயே குவித்து வைத்துக் கொள்ளும் காங்கிரஸ் கொள்கையையும் இந்த உவமை மூலம் அவர் விளக்கினுர்.

சமீபத்தில் மத்திய சர்க்கார் நிதிகளே ராஜ்யவாரியாகப் பங்கிடு செய்வது பற்றி நிதிக் கமிஷனிடம் ஒவ்வொரு ராஜ்யமும் தனது கோரிக்கையை வெளியிட்டபோது இந்த உவமைதான் நினைவுக்கு வந்தது.

முன்பு ராஜ்யங்கள் வசூலித்து வந்த வரி இனங்களில் அநேகம் இன்று தில்லியின் கைக்கு மாறி விட்டன. இவற்றையும், முன்பே மத்திய சர்க்கார் வசூலித்து வந்த வருமான, எக்சைஸ் வரிகளையும் எந்தச் சத விகிதத்தில் ராஜ்யங்களுக்குத் தருவது என்பதுதான் இப்போது பிரச்னே. இவ்விஷயத்தில் நிறைய வரி அளிக்கும் பணக்கார ராஜ்யங்கள் அதிகப் பங்கு கேட்கின்றன. தமிழ்நாடுபோன்ற ஏழை ராஜ்யங்களோ 'இப்படிச் செய்வது நிதி நிலைமை செழிப்பாக உள்ள ராஜ்யங்களுக்கே மேலும் பண உதவி அளிப்பதாகும்; எனவே, ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் அதன் ஜனத்தொகையை அநுசரித்தே நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்' என்று விரும்புகின்றன.

குறிப்பாகத் தமிழ் நாடு, இந்த ராஜ்யத்திலிருந்து கிடைக்கும் வருமான வரியில் எழுபத்தைந்து சத விகிதத்தைத் தனக்கு அளிக்க வேண்டும் என்றும், எக்சைஸ் தீர்வைத் தொகையை ஜனத்தொகை அடிப்படையில் பிரித்துத் தர வேண்டுமென்றும் கோருகிறது. அப்போதுதான் மூன்ருவது திட்ட காலத்தில் நேரவிருக்கும் பற்ருக்குறையைச் சரிக்கட்ட முடியும் என்கிறது.

இரண்டாம் திட்டத்தில் விதிக்கப்பட்ட வரி இலக்காகிய பதின்மூன்று கோடி ரூபாயைப் போல், தான் இரு மடங்கு வரி போட்ட சாமர்த்தியத்துக்குத் தானே சபாஷ் போட்டுக் கொண்டு, இதனே மெச்சித் தனது பங்கைத் தில்லி உயர்த்தவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறது. அதோடு மத்திய, ராஜ்ய சர்க்கார் ஊழியர்களின் ஊதியத்திலுள்ள வேறுபாடுகளே நீக்குவதானுல் அதற்கு நான்கு கோடி ரூபாய் தேவைப்படும் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது. நம் ராஜ்யத்திலுள்ளவர்களுக்கு இந்தக் கோரிக்கைகள் மிகவும் நியாயமானதாகவே தோன்றும். எனினும் மற்ற ராஜ்யங்கள் இதற்கு ஒப்புக் கொள்ளுமா என்பது மிகவும் சந்தேகமே. இதனுல் ராஜ்யங்களுக்கிடையே மனக் கசப்பு ஏற்படக் கூடும். எல்லாவற்றுக்கும் ராஜ்யங்கள் தன்னே எதிர்பார்க்க வேண்டும் என்பதற்காக மத்திய சர்க்கார் செய்த சில தீர்மானங்களின் விளேவே இது.

இதே சமயத்தில் ஸ்தல ஸ்தாபன மத்திய கவுன்சில் கூறியிருக்கும் ஒரு சிபாரிசையும் கவனிக்க வேண்டும். ஸ்தல ஸ்தாபன ஊழியர்களின் சம்பள உயர்வுக்காகத் தேவைப்படும் தொகையையும், வருமான வாய்ப்பில்லாத பொது நலப் பணியில் ஆகும் செலவில் மூன்றில் இரு பங்கையும் தில்லி ஏற்க வேண்டும் என்பதே அது. பஞ்சாயத்து யூனியன்களே அமைத்து, 'கிராம ராஜ்யம் அமைத்து விட்டோம், ராமராஜ்யம் வந்து விட்டது' என்று சொல்லிக் கொள்ளும் சர்க்காரானது ஊராட்சி மன்றங்களின் தேவைகளேப் பூர்த்தி செய்யுமா?

சட்டம் இயற்ற ஒரு திட்டம் தேவை

தமிழ் நாடு வழக்கறிஞர்கள் மகா நாட்டைத் தொடங்கி வைத்த பிரதம நீதிபதி ஸ்ரீ எஸ். ராமச்சந்திர அய்யர் அவர்கள் சர்க்கார் சட்டமாக்க விரும்பும் மசோதாக்களை உருவாக்குவதற்கு சட்ட அறிவு பெற்ற ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட வேண்டும் என்று ஓர் அருமையான யோசனையை வெளியிட்டிருக்கிறார்.

மக்களுடைய சொத்துக்களைப் பாது காத்துத் தரவேண்டிய அரசாங்கம், இன்று வேலியே பயிரை மேய்வது போல் பறிமுதல் சட்டங்கள் செய்து வருகிறது. இதனால் ஏற்படும் இன்னல் போதா தென்று, சட்ட ஞானம் நிரம்பப் பெறாத வர்கள் மசோதாக்கள் தயாரிப்பதால் அவற்றின் பல ஷரத்துக்கள் அரசியல் நிர்ணயச் சட்டத்துக்கே விரோதமாக அமைவதுடன் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் பல சிக்கல்களும் தோன்றுவதை நீதிபதிகள் பார்த்து வருகிறார்கள். இவற்றின் காரணமாக 'ரிட்' வழக்குகள் தொடுக்கப்பட்டு வருகின்றன. சட்டங்கள் சரிவர இயற்றப்படாததால்தான் இன்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் எண்ணிக்கையானது தொடக்கத்திலிருந்ததைவிடப் பலமடங்காகப் பெருகியுள்ளது. அப்படியிருந்தும் அநேகம் தாவாக்கள் விசாரணைக்கே வர முடியவில்லை. ஸ்ரீ ராமச்சந்திர அய்யர் அவர்களின் அறிவுரையைப் பின்பற்றுவதால் இந்த வழக்குகளுக்காகச் செலவிடப்படும் பொருளும், அவகாசமும் பெருமளவுக்குக் குறையும். சமூக நீதி என்ற பெயரில் கட்சியைப் பலப்படுத்திக் கொள்வதும், பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெறுவதற்காகச் சிறுபான்மையினரைப் பாதிக்கும் முறையில் சட்டங்கள் வகுப்பதும் இதனால் ஓரளவுக்கேனும் ஒழிக்கப்படும்.

எல்லாத் துறைகளிலும் சர்க்கார் பிரவேசித்துச் சட்டம் செய்வதால் எல்லாத் துறையினரும் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் பெறவேண்டும் என்ற ராஜாஜியின் யோசனையை அமுலாக்கி, மசோதாக்களை வகுப்பதில் சட்ட அறிஞர்கள் யோசனைப்படியும் நடந்தால் இன்று இழைக்கப்படும் பல அநீதிகள் தவிர்க்கப்படும். ஆனால் நம் சர்க்காரின் செவியில் சத்தியத்தின் குரல் ஏறுமா?

மதுரையின் எதிரொலி மாஸ்கோவிலே!

கம்யூனிஸ பாணியைக் காங்கிரஸ் ஆட்சி பின்பற்றி வருகிறது என்பது யாவரும் அறிந்ததே. இப்போது, தெரிந்தோ தெரியாமலோ, காங்கிரஸின் வழியைக் கம்யூனிஸக் கோட்டையாகிய ருஷியா பின்பற்றி யிருக்கிறது என்றால் சிஷ்யன் குருவை மிஞ்சி விட்டான் என்றே சொல்லி விடலாம் அல்லவா?

காங்கிரஸ் தனது மதுரைக் கூட்டத்தில் தனி நபர் சுதந்திரத்தை அளிக்கப் போவதாகப் பறைசாற்றியது. இன்றைய காங்கிரஸ் அமைப்பில் மக்கள் சுதந்திரம் என்பது கனவிலும் கைகூடாத விஷயம் என்பதை அறிந்த நம் நாடு இந்த நாடகத்தைக் கண்டு சிரித்தது.

மாஸ்கோவில் நடைபெற்ற இருபத்திரண்டாவது கம்யூனிஸ மகாநாட்டில் மணிக்கணக்காகப் பேசிய குருஷேவ் அவர்கள் இதே போல் ஒரு காட்சியை அரங்கேற்றி யிருக்கிறார். காங்கிரஸ் தன்னை சோஷலிஸக் கட்சி என்றுதானே கூறி வருகிறது? குருஷேவ் அவர்களும் தங்கள் நாடு தற்போது சோஷலிஸ நாடாகவே உள்ளது என்று கூறினார். ஆனால் தொடர்ந்து பேசுகையில் இன்னும் இருபதாண்டுகளில் அது கம்யூனிஸ நாடாகி விடும் என்றும் ஒரு விசித்திரத் தகவலைக் கூறினார். அதாவது இன்று சோஷலிஸ முறையில் சர்க்காரே மக்களின் பொருளாதார வாழ்க்கையை நிர்ணயிக்கிறது; இன்னும் இருபதாண்டுகளில் பாலும் தேனும் பெருக்கெடுத்தோடும் பொருளாதார முறையை அது அமைத்துக் கொடுத்து விடும்; அதன் பின் ஒவ்வொரு பிரஜையும் தனக்கு விருப்பமான வேலையைச் செய்து தான் விரும்பும் பொருளைப் பெறக் கூடிய கம்யூனிஸ நாடாக ருஷியா மாறிவிடும் என்று கூறியிருக்கிறார்.

கம்யூனிஸம் என்பது மக்களின் சுதந்திரத்தை ஆதரிக்கும் ஒரு கோட்பாடு என்பதுபோல் தோன்றும் இந்த விளக்கம் காங்கிரஸ் விக்ஞாபனத்தின் ஏமாற்று வாசகத்தைத்தான் நினைவூட்டுகிறது. எனினும், சோஷலிஸ முறையில் மக்கள் தங்களுக்குப் பிடித்த தொழிலைப் புரிய முடியாது, தாங்கள் விரும்பும் பண்டங்களைப் பெற முடியாது என்பதை ஒருவாறு வெளியிட்ட ருஷ்யப் பிரதமரைப் பாராட்ட வேண்டியதுதான்!

என்ன சேதி?

சத்தியம் வெல்லுமா?

பம்பாய் வடக்குத் தொகுதி லோக சபை ஸ்தானத்துக்காக நடைபெறவிருக்கும் தேர்தலை இந்தியா தேசம் முழுவதுமே அக்கறையுடன் கவனிக்கிறது. அங்கு காங்கிரஸ் அபேட்சகராக நிற்கும் மந்திரி ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனனை எதிர்த்து ஆசாரிய கிருபளானி போட்டியிடுகிறார். பகிரங்கக் கம்யூனிஸத்தைவிடப் பயங்கரமான வேஷதாரி கம்யூனிஸத்தை ஒழிப்பதற்காகத் தாம் செய்யும் முயற்சியே இது என்று கூறியிருக்கிறார் ஸ்ரீ கிருபளானி. கம்யூனிஸவாதம் செய்யும்போலி காங்கிரசுக்கும் காந்தீயத்துக்குமிடையே நடைபெறும் போர் இது; பண பலத்துக்கும் உண்மையான தேச பக்திக்குமிடையே நடக்கும் போர் இது என்று ராஜாஜி கூறுகிறார். சுதந்திரக் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, ஜனசங்கம் முதலியவை கிருபளானியை ஆதரிக்கின்றன. 12,000 சதுர மைல்களைச் சீனுவுக்குப் பறி கொடுத்தும் 'பாதுகாப்பு' மந்திரி என்ற பெரும் பெயரை வகிக்கும் ஒருவர்—கூட்டு சேராக் கொள்கை என்ற பெயரிலேயே இடதுசாரி நாடுகள் பக்கம் சாய்ந்து மேலை நாடுகளிடம் நமக்கு அவப் பெயர் வாங்கித் தந்திருக்கும் ஒருவர்—பண பலத்தாலும், மாயப் பேச்சாலும் வெற்றி பெறுவாரானால் அது பம்பாய் மாநகரத்தின் மதிப்புக்கே பங்கம் விளைவித்து விடும்.

மானத்தைக் காப்பாற்றுங்கள்!

அந்நிய நாடுகளிலிருந்து நாம் உதவி பெறுவதே அவமானமான விஷயமாகும். அந்த உதவி துஷ்பிரயோகம் ஆகிறது என்று அந்நாட்டுக்காரர்கள் எடுத்துக் காட்டி விட்டால் அதற்காக நாம் வெட்கித் தலைகுனியத்தான் வேண்டும்.


''கேர்'' என்ற ஸ்தாபனத்தின் மூலம் அமெரிக்காவிலுள்ள பல தர்ம ஸ்தாபனங்கள் இந்தியக் குழந்தைகளுக்காக அனுப்பி வைக்கும் உணவுப் பொருட்கள் சில சமயம் உரியவர்களுக்கு வழங்கப்படாமல் கடைகளில் இடம்பெற்று விற்பனையாகி விடுகின்றனவாம். இந்தத் திடுக்கிடும் தகவலை திருவனந்தபுரத்தில் அமெரிக்கத் தூதர் ஸ்ரீ கால்பிரெய்த் வெளியிட்டார்.

சமூக சேவா நிலையங்கள், பள்ளிகள் இவற்றின் மூலம்தான் இப்பண்டங்கள் விநியோகமாகின்றன. எனவே அவற்றின் நிர்வாகிகள் நேர்மையுடன் நடந்து கொண்டு நம் நாட்டின் கௌரவத்தை நிலை நாட்ட வேண்டும்.

இதே திருவனந்தபுர உரையில் ஸ்ரீ கால்பிரெய்த் இன்னொரு விஷயமும் கூறினார். இப்போது அமெரிக்காவிலிருந்து கடனாகவும், மானியமாகவும், இலவசமாகவும் கிடைத்து வரும் உணவு உதவி தாற்காலிகமானதுதான் என்று இந்தியா உணர வேண்டும்; விவசாய நாடாகிய இந்தியா வெளி உதவியையே நம்பியிராமல் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் முனைய வேண்டும் என்றார் அவர். தினத்துக்கொரு கப்பலாக அமெரிக்காவிலிருந்து நமக்குக் கோதுமை வந்திறங்கும் அதே சமயத்தில் நம் மானம் கப்பலேறுகிறது என்பதை நாசூக்காக எடுத்துக் காட்டிவிட்டார் அமெரிக்கத் தூதர். மானத்திலே அன்னதானத்திலே ...உயர்நாடு என்று பாரதியார் போற்றிய பாரத நாட்டை நம் ஆட்சியாளர்கள் எவ்வளவு தாழ்ந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள்!

வல்லபாய்க்கு ஒரு நல்ல சின்னம்

பாரத நாட்டின் ஞானத்தையும், மேலை நாட்டு விஞ்ஞானத்தையும் இணைத்துத் தரும் பாரதிய வித்யா பவனத்தார் புதிதாக ஒரு பெரும் பணி தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் எழுபது லட்சம் ரூபாய் செலவில் சர்தார் வல்லபாய் படேலின் திரு நாமம் தாங்கிய ஒரு பொறி இயற் கல்லூரியை பம்பாயில் எழுப்பி வருகிறார்கள். விடுதலைப் போராட்டத்தின் போது நாட்டில் தேசிய உணர்ச்சியைப் பாய்ச்சி, சுதந்திரம் பெற்ற பின் இந்தியாவை ஒரே நாடாக நிர்மாணித்த மகா சிற்பியின் நினைவாகப் பொறி இயற் கல்லூரி நிர்மாணிப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.



சென்ற மாதம் இத் தொழிற்களத்தின் அடிக்கல் நாட்டப்பட்டதை ஒட்டி எழிற்களமாக உள்ள ஓர் அழகிய மலரும் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலுள்ள கட்டுரைகள், சித்திரங்கள் இவற்றின் மூலமும் சர்தார்ஜிக்கு ஞாபகார்த்தம் எழுப்பி விட்டதாகக் கூறலாம்.

அரியதொரு சிறிய நூல்

பெங்களூரில் மிகவும் போற்றத்தக்க முறையில் பொதுப் பணியாற்றி வரும் கோகலே பொது விவகார நிலையம் (Gokhale Institute of Public Affairs) சில மாதங்களுக்கு முன் உணவுப் பொருள்களின் விலை உயர்வுக்கான காரணங்கள் பற்றியும் அதற்கேற்ற பரிகாரங்கள் பற்றியும் அரியதோர் ஆராய்ச்சி நடத்தியது. சுமார் இரண்டாயிரம் தனி நபர்களும், ஸ்தாபனங்களும், சங்கங்களும், அனுபவசாலிகள் பலரும் இந்த ஆராய்ச்சியில் பங்கு கொண்டனர். இதன் விளைவாகச் செய்யப்பட்ட பல சிபாரிசுகள் சிறு புத்தக வடிவத்தில் ஏற்கெனவே வந்துள்ளன.

இந்த முடிவுகளுக்கு ஆதாரமாக விளங்கிய தகவல்களையும் வினாத்தாள்களுக்குக் கிடைத்த பதில்களின்மீது நடத்திய ஆராய்ச்சியையும், அரசாங்க வெளியீடுகளிலிருந்து இது சம்பந்தமாகச் சேகரித்த தகவல்களையும் ஒன்று திரட்டி, விஷயவாரியாக ஒழுங்குபடுத்தி, இப்போது மற்றொரு புத்தகத்தைக் கோகலே நிலையத்தார் வெளியிட்டுள்ளனர். உண்மையில் முந்தைய வெளியீட்டை விட இந்த வெளியீடு முக்கியமானதாகவே கருதப்பட வேண்டும். ஏனெனில், பல அரிய கருத்துக்கள் தக்க ஆதாரங்களுடன் இங்கே கூறப்பட்டுள்ளன. உதாரணத்துக்குச் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடலாம்.

> விலை உயர்வுக்குப் பெரும்பாலும் பணவீக்கம்தான் காரணம்; இதற்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் நமது அரசாங்கத்தார். (பக்கம் 29)
>
> விளை நிலங்களுக்கு உச்சவரம்பு விதிப்பதிலும், நிலத்தைப் புனர் விநியோகம் செய்வதிலும் காட்டும் முயற்சியையும், கவனத்தையும், இப்போது நாடெங்கும் தரிசாகக் கிடக்கும் நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதில் செலவிட்டால் நாட்டில் உணவுத் தானியங்கள் கையிருப்பு அதிகமாவதற்கு வகை ஏற்படும். (பக்கம் 34)
>
> தீவிர சாகுபடித் திட்டங்களெல்லாம். விவசாயிகளும் கிராம மக்களும் விவசாய அறிவு இல்லாதவர்கள், தங்கள் முன்னேற்றத்திலேயே அக்கறை இல்லாதவர்கள் என்ற மனப்பான்மையினின்று எழுந்தவை. கிராம மக்களைப் பற்றிய இந்தத் தவறான மனப்பான்மை மாறவேண்டும். (பக்கம் 41)
>
> பணம் செலவு செய்து விட்டால், லாபகரமாக முதலீடு செய்யப்பட்டு விட்டது என்று அர்த்தமல்ல. (பக்கம் 45)... உணவு உற்பத்தி விஷயத்தில் சென்ற பத்து ஆண்டுகளில் அறுபது ரூபாய் அதிகச் செலவு செய்தால் பத்து ரூபாய் மதிப்புள்ள அதிக உற்பத்தி என்ற விகிதத்தில் காரியங்கள் நடைபெற்று வந்தன. (பக்கம் 48)
>
> நீர்ப்பாசன — மின் உற்பத்தித் திட்டங்கள் பற்றி அரசாங்க வெளியீடுகளில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் உபயோகமற்றவை. இவற்றை அளிப்பதிலும் ஒரே மாதிரியான ஒழுங்குமுறை காணப்படவில்லை. ஒரு திட்டத்தைப் பற்றிக் கிடைக்கும் தகவல்கள் மற்றொரு திட்டத்தைப் பற்றிக் கிடைப்பதில்லை. ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. இவ் விஷயத்தில் ஒழுங்குமுறை அவசியம். (பக்கம் 31)
>
> தண்டகாரண்யக் குடியேற்றத் திட்டத்துக்கு இதுவரையில் 9.75 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. உருப்படியான பலன் ஏற்படவில்லை. பணவீக்கத்துக்கும் விலை உயர்வுக்கும் இம் மாதிரி வீண் செலவு ஒரு முக்கிய காரணமாகக் கருதப்பட வேண்டும். (பக்கம் 36)
>
> அரசாங்கத் தொழில் ஸ்தாபனங்களின் வரவு செலவுக் கணக்குகளைத் தனிக் கம்பெனிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்வது போல, வெளிக் கணக்காயர்களைக் கொண்டு தணிக்கை செய்ய வேண்டியது அவசியம். (பக்கம் 51)

இம்மாதிரி பல கருத்துக்கள் இந்தச் சிறு புத்தகத்தில் காணப்படுகின்றன. இவை நிலையத்தினரின் சொந்த அபிப்பிராயங்கள் அல்ல. மக்கள் அளித்த பதில்களிலிருந்தே சேகரிக்கப்பட்டவை. ஆகவே பொது மக்களுடைய உண்மைக் கருத்துக்களை உள்ளபடி அறிய அரசாங்கத்தினர் ஆவல் கொண்டிருந்தால், அவற்றைத் தெரிந்து கொண்டு உண்மையான பரிகாரம் செய்யும் எண்ணம் அவர்களுக்கு இருந்தால், கோகலே பொது அலுவல் நிலையத்தார் வெளியிட்டுள்ள இச்சிறு நூலை அவர்கள் அவசியம் கவனிக்க வேண்டும்.





பரிசுத்தமான மேனியழகை அடையும் காலம்...

நீங்கள் ஓர் அழகியாக விளங்க உங்களை அழகு செய்து கொள்ளும் வருஷங்கள் உங்கள் மேனியழகை பாதுகாக்கும் வருஷங்களாகும்.

இந்தியாவில் கிடைக்கும் சோப்புகளில் சிந்தாலில் மாத்திரம் தான் **ஜி-11*** சேர்க்கப்பட்டுள்ளது. தினந்தோறும் சிந்தால் உபயோகிப்பதால் சருமங்களில் சாதாரணமாக வளரும் துர்நாற்றமெழச்செய்யும் கிருமிகள் கொல்லப்பட்டு, மாசில்லாத பரிசுத்தமான மேனியழகு கிடைக்கிறது.

வியர்வை நாற்றத்தைப் போக்கி, எழிலுடன் விளங்கச்செய்யும் சோப்

பூரணப் பாதுகாப்பிற்கு இனியமணங்கமழும் வியர்வை நாற்றத்தைப்போக்கி ஆறுதல் அளிக்கும் ஜி-11 அடங்கியுள்ள கோத்ரெஜ் சிந்தால் டாய்லெட்பவுடர் உபயோகியுங்கள்

* படங்களுடன் கூடிய "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு கோத்ரெஜ், பம்பாய்-12 என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.


கோத்ரெஜ் ஹேர்டானிக்கிலும் ஜி-11 அடங்கியுள்ளது.

Godrej கோத்ரெஜ் சோப்புகளில் முதன்மையான பெயர்

தந்தி: KOTIABBU   போன்: 31735

புவனேஸ்வரி தியேட்டர்

81, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு, புரசைவாக்கம், சென்னை - 7



எல்லாவிதமான நூதன சாதனங்கள் பொருத்தப்பட்ட சிறந்த தியேட்டர்

விரைவில் ஆரம்பமாகிறது

(Equiped with XL Projectors (Latest Type) & R. C. A. Sound System)

K. M. அப்பு செட்டியார், உரிமையாளர்

தீபாவளி பண்டிகைக்காக

சொந்தத் தறிகளில் நூதன வேலைப்பாடுடன் தயாரித்த

பட்டு & நூல் ஜவுளி தினுசுகள்

ஏராளமாகவும் விலை சரசமாகவும் எங்களிடம் கிடைக்கும்

எமது அசல் கொள்ளேகாலம் பட்டு சேலைகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை

P. B. லக்ஷ்மணா ஸா & பிரதர்ஸ்

(ஏர் - கண்டிஷண்ட)

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் & வியாபாரிகள்

109, ஐயா முதலித் தெரு சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2

போன்: 36966

29-10-61, 5-11-61 ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு

தயாரிப்பு பிராஞ்சு 15, மேட்டுத் தெரு, காஞ்சீபுரம்

●

பம்பாயிலும் சென்னை விலைக்கே கிடைக்குமிடம்:

P. B. லக்ஷ்மணா ஸா & பிரதர்ஸ், பட்டு ஜவுளி வியாபாரம்

(உடுப்பி போர்டிங் ஹோட்டல் அடியில்)

307 லக்கம்ஸி நாப்பு ரோடு, மாதுங்கா (C. Ry.) பம்பாய் - 19

வட்ட மேஜை

கேட்பாரில்லையா ?

நாட்டு வைத்திய நண்பர்களே, வணக்கம். நாட்டு வைத்தியக் கட்டுரைகளைப் படித்து விட்டு வைத்தியர்களாயுள்ள சகோதர சகோதரிகளே வணக்கம்.

''ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணு!'' என்பார்களே. அதுபோல் நாற்பது வருஷங்களாக நாட்டு வைத்தியக் கல்வியை நல்கி வந்த கண்ணான கலாசாலையை இரண்டாண்டுகளுக்குமுன் மூடி விட்டார்கள் நமது காருண்ய சர்க்கார். இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அக் கலாசாலையின் பாடக் கிரமத்தில் நாட்டு வை 'தியப் பயிற்சி 'யானை குதிரையாகி, குதிரை கழுதையாகி, கழுதை கட்டெறும்பாகி' என்று ஒரு கதை சொல்வார்களே. அதுபோல் குறைந்து கொண்டே வந்து கடைசியில் நாட்டு வைத்தியமும் இங்கு இருக்கிறதா என்று கேட்குமளவுக்கு வந்து, அதன் பிறகு இல்லை என்றாகி விட்டதுதான் என்கிறார்கள். ஆதி முதல் அரசாங்கத்தின் நிர்வாகத்தில்தானே இருந்துவந்தது இந்நிலையம்! திடீரென்று இப்பள்ளியின் தரம் குறைந்துவிடவில்லையே! படிப்படியாகத்தானே குறைந்து வந்தது? அப்படியிருக்க உற்ற காலத்தில் அதைச் சீர்படுத்தத் தவறியதேன்? எத்தனையோ பேர்கள் பத்திரிகைகள் மூலமாகவும் பிற வழியிலும் படிப்படியாகத் தரங்குறைந்து வருவதை அவ்வப்போது எடுத்துச் சொல்லி வந்தார்களே! சட்ட சபையில் அங்கத்தினர் இப்பள்ளியில் ஏற்பட்டு வந்த தாக்குறைவைப் பற்றிக் கூக்குரலிட்டார்களே! அப்போதெல்லாம் தமது போக்குத்தான் சரியானதென்று அரசாங்கம் சாதித்து வந்துள்ளது. சீர்திருத்தக் கூடிய நிலையிலிருந்தபோது - பலரும் எடுத்துச் சொல்லியும் சீர்திருத்தாமலிருந்து விட்டுப் பிறகு தமக்குத் தெரியாமலே திடீரென்று சீர்திருத்த முடியாத நிலை வந்து விட்டதாகப் பெயர் செய்து பள்ளியை மூடி விட்டது என்ன நியாயம் என்பதை யார் கேட்பது?

நாற்பது வருட அனுபவத்தில் நல்லது கெட்டது தெரிந்திருக்குமே: ''நாட்டு வைத்தியப் பயிற்சியில் அனுபவமில்லாதவர்கள், நாட்டு வைத்தியத்தின் வளர்ச்சியில் சிறிதும் அக்கறையில்லாதவர்கள் ஆகியோரிடம் நிர்வாகப் பொறுப்பை நம்பி ஒப்படைத்தது ஒரு காரணம்: நாட்டு வைத்தியத்தின் வளர்ச்சிக்காகக் குறிப்பிட்ட லட்சியத்தையோ அதைப் பெறுவதற்கான ஒரு திட்டத்தையோ நிறுவாமல் அடிக்கடி பாட திட்டங்களைக் குறைப்பது மாற்றுவது போன்ற செயல்களை அரசாங்கம் புரிந்துவந்தது மற்றொரு காரணம்; இவற்றால் இப்பள்ளி தினந்தோறும் சீர்கெட்டு வருகிறது'' என்று உடுப்பா கமிட்டியினர் ரிப்போர்ட் எழுதி, இந்த அவலநிலையைப் போக்க என்ன செய்யவேண்டும் என்பதையும் விளக்கியிருந்தனர். மத்திய சர்க்கார் இந்த ரிப்போர்ட்டைச் சென்னை அரசாங்கத்துக்கு அனுப்பி, அதில் வெளியிட்ட விஷயங்களைப் பற்றிச் சென்னை அரசாங்கத்தின் அபிப்பிராயம் என்னவென்று தெரிவிக்கும்படி கேட்டிருந்தனர். பார்க்க வேண்டியவர்கள் இதைப் பார்த்தார்களா என்பதே தெரியவில்லை. இதை யார் கேட்பது?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நாட்டு வைத்தியப் பயிற்சிகளின் முன்னேற்றத்துக்காக ஒவ்வொரு ராஜ்ய அரசாங்கமும் சில லக்ஷங்களை மத்திய அரசாங்கத்தினிடம் மான்யமாகப் பெற்றுத் தமது நாட்டு வைத்தியக் கல்லூரிகளை நல்ல தரத்தில் அமைத்துக் கொண்டது. சென்னை அரசாங்கம் ஒன்றுதான் இவ்வித உதவியைப் பெறவில்லை. ஏன் என்று கேட்பார் யார்?

இப்படிப் பள்ளிக்கூடத்தைத் தெரிந்தே சீர்கேடடைய விட்டார்கள் சென்னை சர்க்கார். போகட்டும். விழித்துக் கொண்ட போது இதைச் சீராக்கி நடத்துவதற்கு ஆவன செய்வதுதானே முறை? அதைச் செய்யாமல் பள்ளியை மூடியது என்ன நியாயம்? அட்வைஸர் நிர்வாகத்தில் கூட இந்தச் செயலைச் செய்யத் துணியாத போது ஜனநாயக ஆட்சி இதைச் செய்திருக்கும் விந்தை என்ன? இதை யார் கேட்பது?

புதியதொரு திட்டப்படி ஏதோ ஒரு பள்ளியை ஜனவரிமுதல் தொடங்கப் போவதாகச் சொல்கிறார்கள். பி. ஐ. எம். என்ற பட்டப் படிப்பாம். சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்த பி. ஐ. எம். பாடத் திட்டம் நிறுவிய நாள் முதல் இதுவரையில் இந்தப் படிப்பைப் படித்தவரோ, பரீட்சைக்குப் போனவரோ, பட்டம் பெற்றவரோ இல்லை - இல்லவே இல்லை. போகாத ஊருக்கு வழி சொல்ல



''ரொம்பச் செலவு டாக்டர்! இப்பத்தான் கொலுவுக்கு, 'கச்சேரி செட்,' 'பாண்டு செட்,' எல்லாம் செட்டு, செட்டா வாங்கினேன்!''

''அதோடே பல்செட்டும் ஒண்ணு வாங்கிவிடுங்க!''

''அடுத்த கொலுவுக்குப் பார்த்துக்கலாம்!''



'' டேய் ! கடுதாசை எடுத்துண்டு போய் அந்த ஆபீசரிடம் கொடுத்தால் அவர் உனக்கு ஒரு வேலை கொடுப்பார்......!''

'' அப்படியா ! ரொம்ப நன்றி, மாமா, உங்களுக்கு. என்ன வேலை கொடுப்பார்கள் மாமா ?''

'' எங்கள் வீட்டுக் கொளுப் படியை வாங்கிப் போயிருக்கிறார். அதை உன்னிடம் கொடுத்து என்னிடம் சேர்ப்பிக்கச் சொல்லுவார் !''

முற்பட்டிருக்கிறது இந்தச் சென்னை அரசாங்கம் - நாற்பது வருஷ காலமாகப் போய்க் கொண்டிருந்த வழியை மூடி விட்டு!!

இன வேற்றுமை ஒழிய வேண்டுமென்று வாய் கிழியப் பேசும் மேடைப் பேச்சாளர்களல்லவா இன்று ஆட்சி புரிவது! இவர்கள் பிரசங்கம் சொல்லளவுதானு? செயலிலும் தொடருவதாயின் பிணியைப் போக்கும் நற்தொண்டில் ஈடுபட்டுள்ளவரில் இன வேற்றுமையை நிலைநிறுத்த முற்பட்டுள்ள விசித்திரம் என்ன? இதை யார் கேட்பது? ஒருமைப்பாடு வேண்டும்; அதை வளர்க்கத் திட்டமிட ஒரு மகாநாடு என்றெல்லாம் ஊரைச் சுற்றிக் காசைக் கரியாக்கிடுவோர், பிணியைப் போக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ளோரெல்லாம் ஒருமைப்பட என்ன செய்ய வேணுமென்ற திட்டத்தை - அல்லது ஒரு திட்டத்தின் அவசியத்தையாவது நினைத்திருப்பார்களா? இதையெல்லாம் யார் கேட்பது?

யார் கேட்பது? நீங்கள்தானே கேட்க வேண்டும்! வெட்கத்தை மறந்து நாளை உங்கள் வோட்டைக் கேட்க வரும்போது இதைக் கேட்க வேண்டும். பிறகு வெறும் வோட்டையோ திருவோட்டையோ கொடுங்கள்.

சென்னை-34
17-10-61

ஸ்ரீஹரி

கவனிக்க முன்வருவார்களா ?

அரசினரின் ஸ்தல நிர்வாகத் துறையினர் 9-8-60 தேதியன்று பிறப்பித்த 644 எண்ணுள்ள உத்தரவின்படி பஞ்சாயத்துக்கள் விரும்பினால் பஞ்சாயத்துக் காரியதரிசி என்ற ஒருவரை நியமனம் செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அக்காரியதரிசியின் ஊதியம் பஞ்சாயத்தின் வருமானத்தில் ஆறேகால் சதவிகிதத்துக்கு மேற்படக்கூடாது என்றும் அதில் கண்டுள்ளது. அதன்படி பஞ்சாயத்துக் காரியதரிசியின் ஊதியம் இருபது ரூபாய் முதல் ஐம்பது ரூபாய்க்கு உட்பட்டுத்தான் இருக்கும். எனவே சம்பந்தப்பட்டோர் வற்புறுத்தியதன் பேரில் அரசினர் ஆலோசனை செய்து 28-8-61 தேதியிட்ட நங்கள் 2933 என் உத்தரவில் அடியில் கண்டபடி ஊதியவிகிதம் நிர்ணயித்துள்ளனர்:

ஜனத்தொகை 5000க்கு மேற்பட்டிருந்தால் (பட்டணப் பஞ்சாயத்து என்று தரம் பிரிக்கப்படாதது)	—	ரூ. 50
4000 முதல் 5000 வரை	—	ரூ. 40
3000 முதல் 4000 வரை	—	ரூ. 30
2000 முதல் 3000 வரை	—	ரூ. 20
1000 முதல் 2000 வரை	—	ரூ. 15

தற்போதைய வாழ்க்கை நிலையினை நோக்கும் போது மேற்கண்ட ஊதியத்தில் பணியாற்றுதல் எளிதல்ல என்பதை யாவரும் ஒப்புக் கொள்ளுவர். இதைக் கவனித்து அரசினர் ஊதிய விகிதத்தை உயர்த்த முன் வருவார்களா?

பெரியநாயக் காரியதரிசி. இரண்டாம்தரப் பஞ்சா
கன்பாளையம் யத்துஎழுத்தர் நண்டவர் சங்கம்

கதரிலும் போட்டி

எங்களூரில் சுமார் மூன்று வருஷ காலமாகக் காந்திஜியால் ஏற்படுத்தப்பட்ட தமிழ் நாடு சர்வோதய சங்க கதர் வஸ்திராலயம் நடந்து வருகிறது. சென்ற மாதம் முதல் மேற்படி வஸ்திராலயத்துக்குப் போட்டியாக அடுத்த கடையை அதிக வாடகை பேசி அதில் சென்னை அரசாங்க காதி இலாகா விற்பனை நடத்தி வருகிறது. இது சர்க்காரின் போட்டி மனப்பான்மையை நன்கு காட்டுகிறது. கதர்த் துணி விலையில் ஒன்றுதான் என்றாலும் தரத்தில் வித்தியாசம் இருக்கிறது.

சத்திய தத்துவத்தின் அடிப்படையில், லாப நோக்கமில்லாமல், மகாத்மாஜியால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சிறந்த ஸ்தாபனத்துக்கு எதிராகச் சர்க்கார் போட்டா போட்டி போடுவதைக் காந்திய பக்தர்கள் யாரும் எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை.

மேலும் சர்க்கார் கதரைப் பெருவாரியாக உற்பத்தி செய்வதன் நோக்கம் அதன் புனிதத் தன்மையைக் காற்றில் பறக்கவிட்டு அதையும் அரசாங்க உத்தியோக விஸ்தரிப்பாக நடத்துவதே என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஏனைய மாகாணங்களில் அரசாங்கம் கதரைத் தானே ஏற்று நடத்தாத போது சென்னை சர்க்காருக்கு ஏன் கதரில் இவ்வளவு அக்கறை என்பது புரியவில்லை. இந்த இலாகாவில் எக்கச்சக்கமாக அதிகாரிகளும் காதி நிபுணர்களும், இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள். எல்லாம் ஒரே உத்தியோக தோரணைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டதாக உள்ளன. இதில் எத்தனை பேருக்குக் கதரின் தத்துவம், உற்பத்தி, விற்பனை, தரம் இவற்றைப் பற்றித் தெரியும் என்பது பகவானுக்கே வெளிச்சம். தவிர இவர்கள் கடன் கொடுத்து ஆசை காட்டி மோசம் செய்கிறார்கள். இதற்கு என்று விமோசனம் பிறக்குமோ தெரியவில்லை !

முசிரி
14-10-61

காந்தியன்

மா(ந்)தர்கள் கவனத்துக்கு!

சேபியிலே மாதர் சங்கத்தலைவி திருமதி கபிலா சாணக்கியன் அவர்கள் தயாரிக்கும் புது மாதிரி டிபன்களில் 'பஞ்ஞு பிரிஞ்சாலும்' ஒன்று. 'பிரிஞ்சால்' என்றால் கத்திரிக்காய் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. இதைக் கபிலா அவர்களின் கணவர் திரு சாணக்கியன் (சென்னை ராஜ்ய தன்னல உதவி அதிகாரி) அவர்கள் மூலமாகக் கேட்டு எழுதிக் கொள்ள முடிந்தது.

இந்தப் 'பஞ்ஞு பிரிஞ்சா'லுக்கு வேண்டிய பொருள்கள் கையளவு வெண்ணெய். ஆழாக்கு உளுத்தம் பருப்பு, ஆழாக்கு கடலைப் பருப்பு. சிறிது முந்திரிப் பருப்பு கொஞ்சம் மைதா மாவு, கொஞ்சம் நன்கு சலித்த ரவை, ஆழாக்குப் பால், சர்க்கரை. ஒரு வாழைப் பழம். ஒரு முழு அளவு கத்திரிப் பிஞ்சு.

செய்யும் விதம்

வாணலியில் அரைப்படி ஜலம் வைத்து அதைக் கால்படியாக வற்றச் செய்து கீழே இறக்கி நன்றாக ஆற விடவும்.

முன்னதாகவே சிறு சிறு துண்டுகளாகச் செய்து வைத்த வாழைப்பழத்தையும், கத்திரிப் பிஞ்சையும் வாணலியிலுள்ள ஆறிய தண்ணீரில் போட்டு விடவும்! பிறகு அதை அடுப்பிலேற்றி ஒரு கையால் மளமளவென்று கடலை மாவைத் தூவிக் கொண்டே, மறு கையால் நன்கு கிளறிக் கொடுக்கவும். கெட்டியாகும் வரை இப்படிக் கிளறி விட்டு வாணலியை இறக்கி விடவும்.

பிறகு கல்லுரலில், உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, ரவை, முந்திரிப் பருப்பு இவற்றைக் கொட்டி, பாலைத் தெளித்துக் கொண்டே எல்லாவற்றையும் மை போல் அரைத்துவிட வேண்டியது!

இப்படி அரைத்தவற்றை வேறொரு பாத்திரத்திலிட்டு, மீண்டும் அடுப்பில் வைத்துக் கை பொறுக்காத சூடு வரை கிளறிவிட வேண்டும். இறக்கி வைத்து, வெண்ணெய் உருண்டை முழுவதையும் அதில் போட்டு, அப்படியே ஆற விடவும். ஏற்கனவே வாழைப் பழத் துண்டுகள் போட்டுக் கிளறியவற்றை இப்போது எடுத்துக் கல்லுரலில் போட்டு இதையும் நன்கு அரைக்க வேண்டியது. சர்க்கரையை இடையிடையே போட்டவாறு நன்கு மெழுகு போல் அரைத்து விடவும்.

இனி மேல்தான் அதிக கவனமாகச் செய்ய வேண்டிய பகுதி வருகிறது. தனித்தனியாக அரைத்து எடுத்துக் கொண்ட பிறகு, முதலில் அரைத்த உளுத்தம் பருப்பு அரைவையைப் பாத்திரத்தின் மீது மைதா மாவை ஓர் அங்குலம் நிரப்பிவிட வேண்டும். அதன் மீது இரண்டாம் முறையாக அரைத்து வைத்திருக்கும் (வாழைப்பழ) மெழுகு போன்ற மாவு உருண்டையை, முன்சொன்ன பாத்திரத்தின் மீதுள்ள மைதா மாவின் மீது வைத்து, மிச்சமுள்ள கடலை மாவைத் தூவி மூடிவிட வேண்டும்.

இதை அடுப்பின் மீது மறுபடியும் ஏற்றி இரண்டு மூன்று முறை சுட வைத்து ஆற விட்டால் பஞ்ஞு பிரிஞ்சால் தயாராகிவிடும்.

''பஞ்ஞு பிரிஞ்சால் செய்யும்விதம் இவ்வளவேதான்'' என்று ஸ்ரீமதி கபிலா சாணக்கியன் அவர்கள் (கபிலை மாதர் சங்கத் தலைவர்) கூறுகிறார்கள்.

பஞ்ஞு பிரிஞ்சாலைச் செய்யும் விதம் அப்படியென்றால், அதைச் சாப்பிடும் விதத்தைத் திரு சாணக்கியன் கூறுகிறார்கள்:-

''டிபன் தயாரானதும், சிற்றுண்டி மேஜையை ஹாலில் ஜன்னல் ஓரம் போட்டுக் கொள்ள வேண்டும்'' என்று கூறுவதில் ஓர் இரகசியம் இருப்பது தெரிந்தது.

தட்டிலே பஞ்ஞு பிரிஞ்சாலைக் கொண்டு வந்து சாணக்கியன் முன் வைத்து விட்டு ஸ்ரீமதி கபிலா உள்ளே சென்று திரும்பி வருவதற்குள் தட்டு காலியாகி விடுகிறது. புதுமாதிரி டிபன் இப்படிப் பரிமாறியவுடனே காலியாவதைப் பார்த்து மகிழ்ச்சி தாங்காமல் மறுபடியும் ஒரு தட்டு நிறைய பஞ்ஞு பிரிஞ்சால் கொண்டு வந்து மேஜை மீது வைக்கிறார். ''கொஞ்சம் ஐஸ் தண்ணீர்; ஐஸ் வாட்டர்!'' என்கிறார் சாணக்கியன். ''இதோ கொண்டு வருகிறேன்'' என்றுசொல்லிக் கபிலா அவர்கள் உள்ளே சென்று, ஒரு கிளாஸ் தண்ணீருடன் வந்து பார்க்கும்போது, பஞ்ஞு பிரிஞ்சால் மறுபடியும் 'காலியா யிருப்பதைப் பார்த்து இன்னொரு தட்டு எடுத்து வர உள்ளே செல்கிறாள் ஸ்ரீமதி கபிலா. திரும்பி வருவதற்குள் சாணக்கியன் எழுந்து, ''இனிமேல் காப்பி போதும்!'' என்று கூறுகிறார். காப்பி வருகிறது! சாணக்கியனின் மனத்திலிருந்த திகிலும் மறைகிறது.


இவ்வாறு திகில் நீங்கி டிபன் சாப்பிட்டு எழுந்திருக்க வேண்டுமானால் ஜன்னல் ஓரமாக மேஜையைப் போட்டுக் கொண்டால் மட்டும் போதாது. வெளிப்பக்கமாக ஜன்னல் கம்பியில் வளர்ப்பு நாய் 'ஜிம்மி'யையும் சங்கிலியால் கட்டி வைத்திருக்க வேண்டும். உள் பக்கமிருந்து பார்த்தால் வெளியே ஜிம்மி இரு முன்னங் கால்களையும் தூக்கிக்கொண்டு நின்றால்கூடத் தெரியக் கூடாது! தட்டில் புதுமாதிரி டிபனைக்கொண்டு வந்து வைத்து விட்டு அதைச் செய்தவர் உள்ளே போகும் போது, ஜன்னல் வழியாக ஜிம்மிக்குப் போட்டு விடுவதற்குச் சாமர்த்தியம் இல்லாதவர்கள், டிபன் ஆசையை அறவே விட்டு விடலாம் என்கிறார் சாணக்கியன் அவர்கள். இதிலும் ஒரு சங்கடம் இருப்பது அவருக்குத் தெரியாது. ஒருவேளை நாம் வளர்க்கும் ஜிம்மிக்குக் கூட புது வகை பட்சணங்கள் பிடிக்கவில்லையென்றால் என்ன செய்வது?

இன்று காலை அந்த மேஜையை இரண்டு வேலைக்காரர்கள் ரிப்பேர் செய்வதற்காகத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். அது வரும் வரை சமையலறையிலுள்ள பெரிய மேஜை மீதே டிபன் சாப்பிட வேண்டுமென்று கூறி, ஸ்ரீமதி கபிலா ஒரு புதுமாதிரி 'தயிர் கட்லெட்' செய்யத் தண்ணீரில் வறுத்த ரொட்டித் துண்டுகளை ஊற வைத்திருக்கிறாள்.

''காற்றோட்டமில்லாமல் இங்கே சாப்பிடுவதைவிட, மேஜையை அந்த ஜன்னல் பக்கம் தூக்கிக் கொண்டு போய்ப் போட்டுக் கொள்ளலாமா?'' என்று கேட்டுப் பயனில்லை. அது பெரிய மேஜை. நிலைப்படி தாண்டி அதைக் கொண்டு வர முடியாது.

பாவம், சாணக்கியன்!

—கதிர்








ரங்கன் இந்த மாதிரி ஒரு முடிவுக்கு வருவான் என்று அவர் எதிர்பார்க்க வில்லை. 'இதுதான் நீ ரங்கனைப் பார்த்துக்கொள்கிற அழகா' என்று யாரோ கேட்பது போல் இருந்தது அவருக்கு. ஒன்றும் புரியாமல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார். அவருடைய கலவரத்தை மறைக்கக் கூட முடியவில்லை, அந்த நிரந்தரப் புன்னகையால். உதடு விரிந்திருந்தது. ஆனால் புன்னகைக்குப் பதில் திடீரென்று ஏமாந்தவர்களின் கையாலாகாத்தனந்தான் அதில் அமர்ந்திருந்தது.

அன்பே ஆரமுதே

தி. ஜானகிராமன்



சற்று மௌனமாக இருந்து விட்டுக் கேட்டார் அவர், ''நீங்கள் உங்கள் தாயார், தகப்பனாருக்கு முதல் பிள்ளையா?'' என்று.

''ஏன்?''

''சும்மாத்தான் கேட்கிறேன்.''

''முதல் பிள்ளை, நடுப் பிள்ளை, கடைசிப் பிள்ளை, பெண்கள் எல்லாம் நான்தான். ஏக புத்திரன். 'அருமந்த புத்திரன்''' என்று ரங்கன் சிரித்தான்.

''அப்படியானால் உங்கள் அப்பா,,அம்மா ரொம்ப மனசு கஷ்டப்படுவார்களே! நாலைந்து குழந்தைகள் இருந்தாலும் சட்டை செய்யாமல் இருக்க முடியும். ஒரே பிள்ளை இப்படிப் போனால்...?''

''ஏதோ சுகத்துக்காகவும், நிம்மதிக்காகவும் கலியாணம் செய்து கொள்கிறோம். கலியாணம் செய்து கொள்ளப் போகிறது நான். அப்பா அம்மா இல்லை; மனசு கஷ்டம் என்று சொல்லும் பொழுது நான் மனசு கஷ்டப்பட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்தேன்.''

''காதல் என்று சொல்கிறார்களே, அதனால் இல்லையாக்கும்?''

''முழுக்க முழுக்க அதனால்தான்.. மனசு கஷ்டப்பட்டதற்கும் அதுதான் காரணம். மனசுக்கு முதலில் கஷ்டமாக இருந்தது. சகஜந்தானே? ஆனால் உங்கள் புஸ்தகம், நீங்கள் — இரண்டையும் வாசித்தபிறகு என் கஷ்டம் போய் விட்டது. அப்பா அம்மாவின் மனசு கஷ்டத்தைப் பற்றித்தான் நான் பதில் சொல்லி விட்டேன். செடியிலிருந்து பறித்த புஷ்பம் இல்லை என்று தெரிந்தால் தானே கஷ்டப்படப் போகிறார்கள்? அவர்களுக்குத்

தெரியாமல் வைத்துக் கொண்டால் போச்சு...''

''அது ஏமாற்றில் சேராதா?''

''ஏமாற்றுத்தான். தர்மா தர்மங்களை இப்படி மயிரிழையாகப் பிரித்துப் பிரித்து விசாரம் செய்து கொண்டே போனுல் கிருஷ்ண பரமாத்மா, ஏசுநாதர், உங்கள் சித்தார்த்தர் எல்லோரும் கபட புருஷர்களாக ஆகி விடுவார்கள். ஒன்றுமே நடக்காது. எல்லாவற்றுக்கும் கடைசி நியாயம் ஆத்ம திருப்தி ஒன்றுதான். இந்த முக்கியமான விஷயத்தைக் கடைசியில் போட்டுத் தொலைத்திருக்கிறுர்கள் நம் நாட்டில் தர்ம சாஸ்திரம் எழுதினவர்கள். வேதம், சாஸ்திரம், பெரியவர்களின் ஆசாரம் ஒன்றும் அனுமதிக்கா விட்டால் ஆத்ம திருப்தி என்று கடைசித் துரும்பாக இதை வைத்திருக்கிறுர்கள். கடைசித் துரும்பாக இருக்கிற பல்லும் நியாயமும் பல சமயங்களிலும் மற்ற எதற்கும் இருப்பதில்லை'' என்று மேஜைமீதிருந்த வெள்ளிக் குமிழ்கள் கொண்ட கண்ணுடிக் குண்டுக் காகித பாரத்தைச் சுழற்றிக் கொண்டே சொன்னுன் ரங்கன்.



அவரை நேரிட்டுப் பார்த்துப் பேசவில்லை. கண்ணுடிக் குண்டைப் பார்த்தவாறு, தன் எண்ணங்களை அதில் பார்த்துச் சொல்வது போலப் பேசிக் கொண்டிருந்தான் அவன். சொற்பொழிவு மாதிரி இருந்தது. அதே சமயம் வாய்விட்டுச் சிந்திப்பது போலவும் இருந்தது. எதற்கும் இலேசில் கட்டுப்பட மாட்டான் போலிருக்கிறதே என்று அனந்தசாமிக்குச் சந்தேகம் வந்து விட்டது. அவனுடைய வாதம் அப்படித் தவருகவும் இல்லை. புத்தர்கூடத் தமக்கு எது சரியென்று படுகிறதோ அதையே செய்யென்றுதான் சொன்னுர். ஆனல் சுயநலக்காரர்களுக்கும், கட்டுப்படாதவர்களுக்கும் இது எவ்வளவு அழகாகப் பயன்படுகிறது! எந்தச் சிரமமும் படாமல் பெற்ற இலவச டிக்கட்டு மாதிரியல்லவா பயன்படுகிறது!

சந்திரா என்ற ஒரு பெண்ணையே மறந்து விட்டீர்களா என்று கேட்க ஒரு கணம் துடித்தார் அவர். ஆனல் இவன் அதற்கும் சமாதானம் வகையாகச் சொல்லி விடுவான் என்றுதான் தோன்றியது. எதையாவது சொல்லி எல்லா வழிகளையும் அடைத்துவிடுவானே என்ற அச்சம் அவர் துடிப்பை அடக்கிவிட்டது.

''என் முடிவு சரியாகப்படவில்லையோ உங்களுக்கு?'' என்று கண்ணுடியைப் பார்த்துக் கொண்டே புன்முறுவலுடன் கேட்டான் அவன்.

''என் அபிப்பிராயத்தைப் பற்றி இப்பொழுது என்ன? ஆத்ம திருப்தி என்றுதான் நீங்கள் ஆணி அடித்தாற் போல் சமாதானம்சொல்லி விட்டீர்களே....!''

''சமாதானமாகத்தான் படுகிறதாக்கும் அதுவும்!'' என்று சொல்லிக் கொண்டே ரங்கன் எழுந்தான். ''வெளியில் புறப்படுவோமா?'' என்றுன்.

''ம்.''

''ஜோலி வேறு ஒன்றும் இல்லையே?''

''இல்லை.''

பிறகு வீட்டையெல்லாம் அழைத்துக்கொண்டு காண்பித்தான் அவன். தாயாரிடம் அறிமுகம் செய்து வைத்தான், வைத்தியர் சன்யாசி என்று. ''அவனிடம் இதைப் பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டாம்'' என்று ஆங்கிலத்தில் கேட்டுக் கொண்டான்.

''ஒண்ணும் வித்தியாசமா நினைச்சுக் காதிங்கோ. ஏதாவது வேலையாயிருப்பான். யாராவது அநாவசியமா வந்து தொந்தரை பண்ணுவா. அதுக்காகத்தான் யாரு என்னன்னு கேட்டுப்பேன், யாராவது வந்தால். வேறு ஒன்றுமில்லை'' என்று சமாதானம் சொன்னுன் கிழவி.

''பரவாயில்லே.''

''ஏம்மா இவரையும் வாசல்லே நிறுத்தி வைச்சுக் குறுக்கு விசாரணை பண்ணிணியா?''

''நான் யாருன்னுடா கண்டேன்?''

''அம்மா விசாரணைக்கு ஆரம்பிச்சா படி ஏற விட மாட்டாள், உட்காரச் சொல்ல மாட்டாள்....எனக்குப் பல சமயம் அது சௌகர்யமா யிருக்கு'' என்ற கடைசி வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொன்னான் ரங்கன்.

இருவரும் வெளியே வந்தார்கள்.. மனத்துக்குள் ஒத்துப் பேசிக் கொண்டது போல் மந்தைவெளியை நோக்கித் தான் நடந்தார்கள். டொக்கி வீட்டுச் சந்திலே திரும்பினார்கள். அப்பொழுது நன்றாக இருட்டி விட்டது.

வாசல் திண்ணையில் நின்று கொண்டிருந்தார் ராஜாங்கமய்யர்.

''வாங்கோ'' என்று வரவேற்றார்.

உள்ளே போனதும் போகாததுமாக இடையிலேயே நிறுத்தி, ''நீங்கள் சொன்னாற் போலவே செய்துவிட்டேன். இப்பத்தான் பத்து நிமிஷம் இருக்கும், அருண்குமாரிட மிருந்து கார் வந்தது. வர முடியாது என்று போகச் சொல்லி விட்டேன்'' என்றார்.

''நேத்திக்கி அத்தனை பாட்டுப் பாடிப் போகச் சொல்லி யிருக்கேன். மறுபடியும் வந்துவிட்டானா?'' என்று திகைத்து விட்டான் ரங்கன். ''நீங்கள் இங்கே இருங்கள்... நான் வந்து விடுகிறேன்'' என்று உடனே வாசலில் இறங்கிப் போய்விட்டான்.

அனந்தசாமி சமைந்து போய் நின்றார். ராஜாங்கம் விழித்தார், சமையலறையில் நின்று இதைப் பார்த்துக் கொண்டிருந்த டொக்கி, ''எங்கே போகிறார் மாமா, ரங்கன்?'' என்று கேட்டாள்.

''தெரியலையே.''

''டொக்கி!'' என்று எதிர் அறையிலிருந்து குரல் கேட்டது.

''ஏம்மா?'' என்று உள்ளே போய் வந்த டொக்கி, ''மாமா, உங்களை அம்மா கூப்பிடுகிறாள்'' என்றாள் அனந்தசாமியிடம்.

அனந்தசாமி உள்ளே போனதும் ''நாளைக்கு ஊருக்குப் போகிறார் அவர். நீங்கதான் குழந்தையைப் பார்த்துக் கணும்'' என்றாள்.

''நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீங்க'' என்று தைரியம் சொன்னார் அவர்.

அவளே அரை மணி பேசிக் கொண்டிருந்தாள். டொக்கியின் சிறு வயது, படிப்பு, திறமை, குழந்தைத்தன்மை எல்லாவற்றையும் பற்றித்தான். அவள் எப்படியாவது நன்றாக இருந்தால் போதும். அதுதான் அவருடைய ஆசையாம். இல்லாவிட்டால் இப்படி வயதுக் காலத்தில் பிரிந்திருக்க அவர் சம்மதித்திருக்க மாட்டார். குழந்தையிடம் அவ்வளவு ஆசை அவருக்கு.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார் அனந்தசாமி. பிறகு எல்லாரோடும் ஊர்க் கதைகளெல்லாம் பேசினார். புத்தர் கதைகளில் நாலைந்தைச் சொன்னார்.

ஒன்பதரை மணி அடித்தது. ரங்கன் வரவில்லை. விடைபெற்றுக் கொண்டு வெளியே நடந்தார்.

ஃ ஃ ஃ

மறு நாள் பிற்பகல் நாலு மணியிருக்கும். அருண்குமார் வீட்டுக்குப் போனபொழுது வழக்கத்துக்கு மாறாக அவன் வீட்டில் இருந்தான்.

அனந்தசாமி வாசல்படி ஏறியதும், ''தம்பி கூட உங்களைப் பார்க்கணும்னு சொல்லிட்டிருந்திச்சி'' என்றான்பங்காரு.

''குழந்தையா?''

''இல்லீங்க, தம்பி...உள்ளே யிருக்கு. வாங்க'' என்று அழைத்துக் கொண்டு போனான். சுழலும் நாற்காலியில் உட்கார்ந்து எதிரே ஒரு ஸ்டூல்மீது காலைப் போட்டு எதையோ தினசரித் தாளில் வாசித்துக் கொண்டிருந்த காசிலிங்கம் ''வாங்க, வாங்க'' என்று எழுந்து உபசாரம் செய்தான். அவரை உட்காரச் சொன்னான்.

''குழந்தையைப் பார்த்தாச்சுங்களா?'' என்று கேட்டான்.

''இல்லையே. இனிமேல்தான் குழந்தையைப் பார்க்கணும்.''

''மரத்துப் போயிருந்த கால் வலி கண்டிருக்காம் குழந்தைக்கு. அது நல்ல குறிதான்னு சொல்லிச்சாம் சாமி. எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலெ. சாமி கையிலே ஒப்படைச் சாச்சு. சாமி என்ன பண்ணினாலும் சரி. சாமியைத்தான் நம்பியிருக்கேன்'' என்றான் காசிலிங்கம்.

''எந்தச் சாமியை? இந்தச் சாமியையா? பெரிய சாமியையா?'' என்று இலேசாக முகத்தையும் புருவத்தையும் மேலே உயர்த்தினார் அனந்தசாமி.

''எனக்கு ரண்டு சாமியும் ஒண்ணு தான்...''

''அப்படியா?''

''சாமிதான் கண்ணுக்குத் தெரிய மாட்டாருங்களே. இந்த மாதிரிதானே தெரியும்?''

''இந்தச் சாமிகிட்டே அவ்வளவு நம்பிக்கையா உங்களுக்கு?'' என்று கேட்டுச் சிரித்தார் அனந்தசாமி.

''நீங்க சிரிக்கலாம். ஆனால் நிசமாவே உங்களை நம்பித்தான் இருக்கேன்'' என்றான் அருண்குமார்.

''சாமியெல்லாம் ரொம்பச் சோதனை பண்ணுமே...?'' என்றார் அனந்தசாமி.

''பண்ணட்டுமே. தாங்கிக்கிடறது'' என்று அவனும் சிரித்தான்.

''நான் ஒன்றும் சோதனை பண்ணி விடவில்லை. உங்களைப் பார்க்க வேண்டு மென்றிருந்தேன் நேற்றிரவிலிருந்து.''

''என்ன சங்கதி?''

''நேற்று ராத்திரி ரங்கன் இங்கே வந்தானா?''

''வந்தாரு; நீங்க கேட்கிறதைப் பார்த்தா அவரை நல்லாத் தெரியும் போலிருக்கே உங்களுக்கு?''

''நன்றாகப் பழக்கமாகி விட்டார் இப் பொழுது... நேற்று இங்கே வந்து ஏதா வது சொன்னாரோ?''

''எதைப் பற்றி?''

''அதைத் தெரிந்து கொள்ளத்தானே நான் கேட்கிறேன்.''

''த்ஸ.... என்னென்னமோ சொன் னாரு. அதெல்லாம் சாமிக்கு என்னத் துக்கு...?''

''இது மனுஷ சாமிதானே. தெரிந்து கொள்ளலாம். இதைத் தெரிந்து கொள் கிறது உங்களுக்குத் தாங்க முடியாத சோதனையாக இருக்குமோ?''

காசிலிங்கம் கூனிக் குறுகி நாற்காலி யில் நகர்ந்து கொடுத்தான்.

''இந்த மாதிரி சமாசார மெல்லாம் நாக்கிலே பல்லைப் போட்டுப் பேசலாமா சாமி கிட்டே?.. ஏன் இப்படிக் குறிப் பாகக் கேட்கிறீங்க?''

''மந்தைவெளியிலே இருக்கிறதே ஒரு பெண் அது விஷயமாகத்தானே பேசினான் ரங்கன்?''

''ஆமாம்'' என்று தலையைக் குனிந்து கொண்டான் காசிலிங்கம்.

''என்ன பேசினான்?''

காசி பதிலே பேசவில்லை. நாற்காலிச் சட்டத்தை நகத்தால் கிறிக் கொண்டே உட்கார்ந்திருந்தான். ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் ஆயிற்று. வாயைத் திறக்க வில்லை. அதிகமாக நேரம் கொடுத்தால் பிடிவாதம் அதிகமாகி, எதையும் சொல்வதை நிறுத்திவிடு வான் என்று பயந்தார் அனந்தசாமி.

''என்னிடம் சொல்லுங்கள். பாதக மில்லை. நான் தெரிந்து கொள்வது உங்கள் நன்மைக்குத்தான். உங்கள் மனைவி, குழந்தை, குடும்பம் எல்லோ ருடைய நன்மைக்கும்தான்'' என்று சட சடவென்று சொன்னார் அனந்த சாமி. இப்படிப் பாபத்துக்கும் குடும்ப நலத்துக்கும் மூட்டுப் போட்டுக் கேட்பது பயமுறுத்துகிறாற் போல்தான். மூட நம்பிக்கை என்று சொல்லப்படுகிற ஏதோ ஒன்றைப் பயன்படுத்திப் பய முறுத்துவது அவருக்குக் கண்யக் குறை

> ஆபத்துக் காலத்தில் கும்பலோடு சேர்ந்து கோவிந்தா போடுவது தலைமைக்கு அழகல்ல. யுத்த கோஷங்க ளைக் கிளப்பிவிட்டு மக்களின் பயத்தை உள் நாட்டு விஷயத்துக்காகப் பயன் படுத்திக் கொள்ள முயன்றால்—அதா வது யுத்தம்செய்வதற்கல்ல, பொருளா தாரத் தவறுகளையும் பண விரயத்தை யும் மறைப்பதற்காக யுத்தம் யுத்தம் என்று சொல்வதில் — உண்மையில் லாபம் ஒன்றுமில்லை. வெளிநாட்டினர் மிகவும் கெட்டிக்காரர்கள். அவர்கள் நம் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவ னித்து வருகிறார்கள். ஆகவே நம் முடைய பொருளற்ற அகம்பாவத் தையும் வீண் வெறுப்புக்களையும் விட் டொழித்துத் தைரியத்துடன் இதர நாடுகளுடன் நட்பும் நல்லுறவும் வளர்க்க முற்பட்டாலொழிய உலக அரங்கில் நமக்கு நன்மதிப்புக் கிட்டாது. — ராஜாஜி

வாக இருக்குமோ என்று தோன்றியது. ஆனால் அவருடைய மனசு சும்மா இருக்கவில்லை. இருக்கின்ற துடிப்பில் சட்டென்று சொல்லி விட்டது.

''சாமிக்கு எல்லாம் தெரியும்போ லிருக்கு'' என்றான் காசி தலை நிமிராமல்.

''ரங்கன் நேற்று வந்து விட்டுப் போனதற்கு முன்னால் நடந்ததெல் லாம் தெரியும். அதற்கு முந்திய நாட் களில் நடந்ததும் தெரியும். நேற்று ரங்கன் இங்கு வந்து என்ன பேசிக் கொண்டிருந்தான் என்பது தெரியாது.''

''அவருக்கு என் மேலே ரொம்பக் கோபம். ரொம்ப வெறுப்பாகப் பேசி னாரு. நான் அவரிடம் கோவிச்சுக்கக் கிச்சுக்க இல்லை.''

''கோபம் வர வேண்டியது அவருக் குத்தானே?''

''அது சரிங்க. ஆனா இதுக்கெல்லாம் கோவிச்சுக்கறது ஒண்ணும் புண்ணிய மில்லாத சமாசாரம்.''

அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அனந்தசாமி கண் கொட்டாமல் ஒரு நாலு விநாடி அவரைப் பார்த்தார். அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு ''நான் சொல்றது சாமிக்கு ஒப்புதலா இல்லை போலிருக்கு'' என்றான்.

''புரியவே யில்லை. அப்புறமல்லவா ஒப்புக் கொள்ள வேண்டும்?''

''அப்படிப் புரியாத பெரிய விஷய மில்லீங்க இது?... யார் யார்கிட்ட எப்படி அழறது. எப்படிப் பேசறது இதிலெல்லாம் சிலவங்களை யாரும் 'பீட்' அடிக்க முடியாது. எப்படி

> இன்று அதிகாரத்திலிருக்கும் கட்சி நமது சமுதாயம் சோஷலிஸ சமுதாயமாகப் பரிணமிக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டது. இதன் பொருள், மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் அதிகார வரம்புகளைப் பற்றிய விவாதம் ஏற்பட்டால், தீர்ப்பு அரசாங்கத்துக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்பதே.
>
> — ராஜாஜி

அழுது கண்ணீர் விட்டா காரியம் நடக்கும், யார், யார் கிட்ட எந்த எந்த விஷயங்களை யெல்லாம் பேசப்படாது எதைப் பத்தி யெல்லாம் பேசப்படாது இதெல்லாம் இவங்களுக்குத் தலைகீழ்ப் பாடம். சாமி பெரிய சாமியையே பார்த்துக்கிட்டு இருக்கிறவங்க. நான் சொல்றேன்னு வித்தியாசமா நெனச்சுக்கப்படாது. சாமி உலகத்தை எங்க மாதிரி பார்த்ததில்லேன்னுதான் நான் சொல்லுவேன். தலைக் கிறுக்கா சொல்றேன்னு நெனச்சுக்கப்படாது. எனக்கு அப்படித்தான் மனசிலே பட்டது.. சொன்னேன்.''

அனந்தசாமி உரக்கவே சிரித்து விட்டார்.

''என்ன, சிரிக்கிறீங்களே?''

''இல்லே. ஒவ்வொருவரையும் பார்க்கும்பொழுது புதிது புதிதாக ஏதாவது அவிழ்ந்து கொண்டேயிருக்கிறது. அது தான் சிரிப்பு வந்தது.''

''இதிலே ஒண்ணும் புதிசு இல்லீங்களே? சாமிக்குப் புதிசா இருக்கோ என்னவோ.... எத்தனை பளக்கமாயிருந்தாலும் யாராவது பெத்த பெண்ணை யாரோ மகாபலிபுரத்துக்குக் கூப்பிடறான், தாராசுரத்துக்குக் கூப்பிடறான்னு அழைச்சிட்டுப் போங்கன்னு விட்டுடுவாங்களா? நான்தான் ஒத்திகைக்குக் கூப்பிட்டேன்னு விட்டுடுவாங்களா? அவங்களுக்குக் காரியம் ஆக வேண்டியதுதான் பெரிசு. அவரு என்னமோ பெரிசா செஞ்சிடப் போறாருன்னு அவரோட அனுப்பிச்சாங்க. நானும் என்னமோ பெரிசாச் செஞ்சிடப் போறேன்னுதான் அனுப்பிச்சிருப்பாங்க.''

''நேற்று அவர்கள் மறுத்ததை மறந்து விட்டீர்கள்போலிருக்கிறது...!''

''மறக்கலே. ரங்கன்தான் அதுக்குக் காரணம். அவர்தான் நேற்று ஒரு பாட்டம் காஞ்சிட்டுப் போனாரே.''

''நான் சொல்வதைச் சொல்லிவிடுகிறேன். ஒரு தகாத காரியத்தைச் செய்து விட்டு அதைப் பற்றி இவ்வளவு சர்வ சாதாரணமாக, இப்படிச் செய்து விட்டோமே என்ற ஒரு சின்ன வருத்தம் கூட இல்லாமல் பேசுகிறதைப் பார்த்தால் எனக்கு இந்த மனுஷ்ய லோகத்தில் வாழ்கிறோமா என்றுகூடச் சந்தேகம் வந்து விடுகிறது'' என்று அனந்தசாமி மெதுவாகச் சொன்னார். அவர் கண் நெருப்பு நீலமாக முற்றிக் கனிவது போல ஜொலித்தது.

காசி அவரை ஏறிட்டு ஒரு தடவை பார்த்தான். மறு கணம் பார்வையைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவன் கண் விழுந்து விட்டது. உதடும் கன்னச்சதையும் ஒரு தடவை கோணிக் கொண்டன. உதட்டைக் கடித்துக் கொண்டான். சொன்னான்:

''சாமிகிட்டே எதையும் மறைக்கணும்னு தோணலே எனக்கு. என்னாலே மறைக்கவும் முடியாது போலிருக்கு. தகாத காரியம் பண்றோம்னு தெரியாமலில்லே எனக்கு. முதல்லே இரண்டு மூணு தடவை பண்றபோது அப்படி இருந்தது. வர வர மனசு காச்சுப் போச்சு. இப்ப கணக்குப் பண்ண முடியாத அளவுக்குத் தப்பெல்லாம் பண்ணிட்டேன். பண்ணிக்கிட்டும் வர்றேன். நம்மையே நாம் அடக்கிப் பளகாததினாலே அடாபிடி பண்ண நல்லாத் துணிஞ்சு போயிருச்சு. பணமும் பேரும் நாம வாண்டாம்னாலும் வந்துக்கிட்டேயிருக்கு. நான் என்ன செய்ய? கெட்டதுன்னு தெரிஞ்சே செய்யறேன். கட்டுப்படுத்திக்க முடியல்லெ. இதுக்கெல்லாம் நான் மட்டும் காரணமில்லே. அதையும் சொல்லிடறேன். இந்தப் படு முட்டாளுங்களா இருக்காங்களே இந்த ஜனங்களுந்தான். என்கிட்ட என்னத்தைப் பெரிசாக் கண்டுட்டாங்கன்னே தெரியல்லே. முன்னெல்லாம் கோயில் கட்டறேன், கொளம் வெட்டறேன், கஞ்சி காச்சி ஊத்தறேன், அன்ன தானம் பண்ணறேன்னு யாராவது ஒரு ஆத்மா கௌம்பினான்னா, அவங்க பணத்தை வாரிக் கொட்டுவாங்க. இப்பல்லாம் அப்படி யில்லீங்களே. என் மாதிரி கூத்தாடிக்குத்தானே கொண்டு கொட்டறாங்க. கலாட்டா பண்றவனுக்குத் தாம்தூம்னு ஆர்ப்பாட்டம் பண்றவனுக்கில்ல கொண்டு கொட்டறாங்க காசை! நிசமாச் சொல்றேன், இந்தக் கூத்தாடித் தொழிலேயே பெரிய பெரிய மேதாவிங்கல்லாம் இருக்காங்க. சும்மா அப்படி ஒரு கண்ணை அசைச்சு என்னென்னமோல்லாம் காட்டிடுவாங்க. அவுங்க இருக்கிற இடம் விளக்கேத்தி வெச்சுக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கு. வாடகை கொடுக்க முடியலே. தவிக்கிறாங்க மகா மகா அறிவாளிங்க. என் மாதிரி வெத்து

உங்கள் குழந்தைகளுக்கு

இருமல், ஜலதோஷம் இருந்தால்





ஸிரோலின் 'ரோஷ்'

கொடுத்து பூர்ண நிவாரணம் பெறச் செய்யுங்கள்



இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற இந்தியாவின் குடும்ப மருந்து

உங்கள் குழந்தைகளுக்கு இருமல் அல்லது ஜலதோஷமிருந்தால் அசட்டையாய் இருக்காதீர்கள்—ஸிரோலின் கொடுத்து அபாயமின்றி துரிதமாக பூர்ண நிவாரணம் பெறச் செய்யுங்கள். அதன் இனிய ருசியை உங்கள் குழந்தைகள் பெரிதும் விரும்புவார்கள். ஸிரோலின் உங்களுக்கும் மிகச் சிறந்தது! அது உங்கள் இருமலை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல், இருமலை உண்டுபண்ணும் கிருமிகளைக் கொல்லவும் செய்கிறது. ஸிரோலின் தொண்டைப் புண்களுக்கு சமனமூட்டுகிறது, கபம் மற்றும் சளியைப் போக்குகிறது. அது எவ்வளவு கடுமையான இருமலிலிருந்தும் அபாயமின்றி துரிதமாக நிவாரணமளிக்கிறது.

உங்கள் வீட்டில் எப்பொழுதும் 'ஸிரோலின் வைத்திருங்கள்

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

வேட்டுக்கு இல்லே. சங்கீதம், புராணம் எல்லாம் படிச்சவங்க. என்கிட்ட என்னத்தைக் கண்டுது இந்தப் புத்தியில்லாத சனங்கன்னு எனக்குப் புரியலே. ஏதோ நல்ல காலம், நல்லா எல்லாத்தையும் பார்த்துப் போடுவோம்னு கிளம்பிட்டேன். அவ்வளவுதான். சாமி மாதிரி யாராவது பார்த்து நிறுத்தினாத்தான் உண்டு என்னே. ஏன்னு கேட்டால், எனக்குப் படிப்புக் கிடையாது. இருந்தாலும் நாடகம் கீடகம்ற எத்தினியோ பளங்கதையெல்லாம் கேட்டிருக்கேன். யயாதின்னு ஒரு மகாராஜா இருந்தானே, தான் பெத்த பிள்ளேகிட்டவே பாதி வயசை வாங்கிக்கிட்டு ஆயிரம் வருஷம் நல்லா அனுபவிச்சானும். அப்புறமும் ஆசை தீரலேயாம். கடாசியிலே மகனேக் கூப்பிட்டு, 'இதுக்கு முடிவே கிடையாது. திருப்பியும் நான் கிளவனுவே ஆயிடறேன்னுனும்' ரொம்ப நல்ல கதை. அவன் சும்மா காமெடியாச் சொல்லலீங்க. நெசமாகவே உணர்ந்து சொல்லி யிருக்கிறுன். அந்த மாதிரிதான். அவனுவது படிச்சவன். நல்ல சங்காத்தங்களெல்லாம் படைச்சவன். எனக்கு அந்த மாதிரி ஒரு பிள்ளே யிருந்தா நான் என்ன சொல்லி யிருப்பேன்? இன்னெரு பாதியும் தாடா, மகனேன்னுதான் சொல்லி யிருப்பேன். என் படிப்புக்கு ஏத்த புத்திதானே எனக்கும் இருக்கும்? என்னே சாமியாப் பார்த்துக் காப்பாத்தினுல்தான் உண்டு.. நான் ரொம்ப அனுபவிச்சுச் சொல்றேன். ஆனுல் தப்புன்னு தெரிஞ்சுக் கலேங்கறதை மாத்திரம் இன்னெரு தரம் சொல்லப்படாது சாமி. நேத்து ராத்திரி இன்னேக்குக் காலமே எல்லாம் இந்த யோசனேதான் எனக்கு. எத்தினியோ டாக்டருங்களெல்லாம் பார்த்தாங்க குழந்தையை. ஊசியாலே சல்லடைக் கண்ணுத் தொளேச்சாங்க. கேக்கலே. சாமி வந்தப்புறம் கால் வலிக்குதுங்கறுன் பையன். கால் இருக்கிறதாக நெனப்பு வந்திருக்கு அவனுக்கு.

அதைப் பார்த்தவுடனே தான் எனக்குத் தோணிச்சு. என்னடாது, இந்தமாதிரி பெரிய பெரிய ரகசியங்களெல்லாம் தெரிஞ்சவங்க இந்த மாதிரி காவித் துணியைக் கட்டி வேர்க்க வேர்க்க வெய்யில்லே அலேயறுங்க. நாமபாட்டுக்கு இப்படிப் பன்னி மாதிரி சகதியிலே விளுந்து புரண்டுக்கிட்டுக் கெடக்கிறேம். நம்மை இப்படி மொய்க்கிறுங்களேன்னு தோணிச்சு. இந்த ஜனங்களே என்னன்னுங்க கணக்குப் பண்றது? தனித் தனியா விட்டுட்டா எல்லாரும் மனுஷனுத்தான் இருப்பான் போலிருக்கு; யோசிப்பான் போல் இருக்கு. கூட்டமா ஒரு இடத்திலே சேத்திட்டா என்ன என்னத்தையோ பாத்துப் புத்தியை விட்டுப்பிடறுங்களே அத்தினி பேரும். எனக்குக் கூடத் தனியா இருக்கிறப்ப என்னென்னமோ பெரிசாத் தோணுது. இதுங்களுக்கு முன்னுடி வந்து நின்னு எல்லாம் அமுங்கிப் போயிடுது. என்ன செய்யறதுன்னு புரியாம நான் நினேக்காதது, பிடிக்காதது எல்லாம் செய்யத் தொடங்கிப்பிடறேன். ரொம்ப அதிசயமாயிருக்குங்க'' என்று கூறிக் கொண்டே சுவரைப் பார்த்தான் காசிலிங்கம்.

முகத்தைச் சிணுக்கியும், சிரித்தும் புன்முறுவலாகக் கேட்டுக் கொண்டேயிருந்தார் அனந்தசாமி. அவன் மேல் இருந்த கோபம் கூட வறண்டு விட்டாற் போலிருந்தது. இவ்வளவு தூரம் தன்னேத்தானே பார்த்துக் கொள்கிறவனு என்று அவருக்கு நம்ப முடியவில்லே. இவ்வளவு தூரம் யோசித்து வைத்தவன் தன்னே ஏதோ கழுத்தை நெட்டித் தள்ளிக் கொண்டு போகிறதாகவும் சாமியாகப் பார்த்துத்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னதைக் கேட்கும்போதுதான் அவர் ஒன்றும் புரியாமல் தவித்தார். ஒருகணம் அப்படியே கிளம்பி ரிஷிகேசத்துக்கு ஓடிவிட வேண்டும் என்று துடித்தது அவர் உள்ளம்.

(தொடரும்)



பின்னி துணிகள் அணிந்து

தீபாவளியைக் கொண்டாடுங்கள்

உங்கள் குடும்பத்தினருக்கும் உங்களுக்கும் தீபாவளிக்காக அழகிய பின்னி துணிகள் வாங்குங்கள். குழந்தைகளுக்கு ஏற்ற வண்ணமிக்க கவர்ச்சியான துணிகள்; தரமுயர்ந்த பருத்தி ஷர்ட்டிங்கு, டிரில், டஸ்ஸோர் மற்றும் சூட்டிங். பளபளப்பான பட்டுச் சேலைகளும் ஷர்ட்டிங்குகளும். பின்னி துணிகள் எவ்வளவுக் கவ்வளவு கவர்ச்சி யுள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு உறுதியும் வாய்ந்தவை. பல்லாண்டுகாலம் நீடித்து உழைத்து உங்களுக்குத் திருப்தியளிப்பவை.



உங்களுக்குத் தேவையான பின்னித் துணிகளை இந்த அடையாளம் காணப்படும் அனுமதிபெற்ற கடைகளிலிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்கவும்.

QUALITY FABRICS

BINNY & CO. (MADRAS) LTD.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்
பெங்களூர் உல்லன் காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
உரிமையாளர் : பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

JWT-BY-1457a

''உன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாயா?''

''என்ன ஸார் அப்படி சந்தேகம்!....தினப்படி பார்த்துக் கொண்டதனால் தானே வந்திருக்கிறேன்....''

''அப்படியானால் நீ கண் டாக்டரிடம்தான் போக வேண்டும்!''

''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே....''

''புரிய வைக்கிறேன்!''

மேஜை மேல் கிடந்த பத்திரிகையில் ஒரு படத்தைச் சுட்டிக் காட்டினார் அவர்.

''இதைப் பார்த்தாயா?...''

''உம்!....''

''கண்ணாடியில் உன் முகத்தைக் காண்பித்தால் இப்படித்தான் தெரியும்!....''

''ஸார் !....'' குரல் உயர்ந்தது.

''என்னிடம் கோபித்துக் கொண்டு என்ன பயன்?''

''இந்தப் படம் மாதிரியா நான் இருக்கிறேன்....?''

''நிச்சயமாக.....''

''மேலே என்ன எழுதியிருக்கிறது பார்த்தீர்களா?''

''அதைப் படித்து விட்டுத்தானே உன்னிடம் அதைக் காண்பித்தேன்....''

''சென்னை மிருகக் காட்சி சாலையில் புதிய வரவு என்று ஒரு மனிதக் குரங்கு படத்தைப் போட்டிருக்கிறது....என்னைப் போல் அது இருக்கிறது என்று....''

''உரக்கச் சொல்லாதே. அதன் காதில் விழுந்து உன்னைப் போல் இருக்கிறதாகத் தெரிந்து கொண்டால் அது தற்கொலை செய்துகொள்ளும்!''

''ஸார்....''

''என்ன?...''

''நீர்தானே இந்தக் கம்பெனியின் முதலாளி?....''

''ஆமாம்! வனஜாவதி பிலிம்ஸ் ஸோல் புரொப்ரைட்டர்வைரக்கண்ணுச் செட்டியார் நான்தான்....''

''புதிய முகங்களுக்கு ஆதரவு தரப்படும் என்று விளம்பரம் செய்தது நீங்கள்தானே!''

''ஆமாம். மனித முகங்களைத்தான் கேட்டிருந்தோம்....''

''காப்பிக் கறைபடிந்த ஒரு கட்டை விரலால் அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்களே, அது என்ன?''

''நீ நாடகத்தில் மிக நன்ருக நடித்ததாக ஸர்டிபிகேட்.''

''யார் எழுதிக் கொடுத்தது பார்த்தீரா?''

''உம். பழைய கன்னையா கம்பெனியின் ஸின் இழுத்து வந்த ராமசாமி.''

''வேஷப் பொருத்தம் பிரமாதம். நடிப்பு கனகச்சிதம் என்று எழுதி யிருக்கிறரா இல்லையா?....''

''ஆமாம்...ஆமாம் ....''

''பின் ஏன் எனக்கு நடிக்க வராது, முக ராசி இல்லை என்று சொன்னீர்...?''

''ராமசாமி எழுதிக் கொடுத்ததைத்தான் நானும் கூறினேன்....

''நீர் நடித்தது ராமாயணம் நாடகம்.. போட்ட வேஷமோ அங்கதனுடையது. ராமசாமி வேஷம் பிரமாதம் என்று எழுதியிருக்கிறர்....நான் சொல்கிறேன், மேக்கப் இல்லாமலே அப்படித்தான் இருக்கிறீர்....''

''மிஸ்டர் வைரக் கண்ணு செட்டியார்!''

''உம், என்ன! எனக்கு நேரமாகிறது....''

''இன்றைக்கு இரண்டு வருஷங்கள் கழித்து....''

''எனக்குப் பேரன் பிறந்து விடுவான்.... தை மாதம் பெண்ணுக்குக் கல்யாணம் செய்யலாம் என்றிருக்கிறேன். உன் விலாசத்தைக் கொடு. கூட்டம்சேராமல் விரட்டச் சௌகரியமாக இருக்கும்!''

''பேசாதேயும் குறுக்கே! நான் பிரபல நட்சத்திரமாகி விடுவேன்... லக்ஷம் ரூபாய் கொண்டு கொட்டினாலும்....''

''லக்ஷம் நயாபைசாக்களைக் கூட நீ பார்க்க முடியாது....''



காணமற் போன பையன்!



அன்னம்

"பார்த்துக் கொண்டிரும்! கைக்கு எட்டிய பழம்...."

"அழுகலாகப் போய்த் தொலைந்ததே என்று தூக்கி எறிவேன்."

"கதவைத் தட்டிய ஸ்ரீதேவியை!"

"கதவைத்திறந்தது பிசகு என்று வருத்தப்படுகிறேன்...."

"அப்படி என்றால் எனக்கு 'சான்ஸ்' கிடையவே கிடையாதா?...."

"அதைத் தானே சொல்லிக் கொண்டிருந்தேன் இதுவரையில்!"

"நிசமாகவா? எனக்குக் கோப மூட்டி வேடிக்கை பார்க்கிறீர்கள் என்றல்லவா எண்ணிக் கொண்டிருந்தேன்...நடிப்பு எப்படி?"

"நீர் சாதாரணமாகப் பேசினால் தேவலை என்று இருந்தது."

கதவு படீரென்று அறைந்து ஓய்ந்தது. நடிப்பதற்குச் 'சான்ஸ்' கேட்டு வந்த சிங்காரம் வெளியே விரைந்தான். மேஜை டிராயரைத் திறந்து 'அனாசின்' மாத்திரைகள் இரண்டை விழுங்கி, ஒரு விழுங்கில் தண்ணீரையும் குடித்துப் பெருமூச்சு விட்டார் வைரக்கண்ணு.

ஃ ஃ ஃ

ஹோட்டல் ஹார்ஷாவின் இரண்டாவது மாடியில் கோடி அறையில் குறுக்கும் நெடுக்கும் உலவினான் சிங்காரம். மதுராந்தகத்தை விட்டுக் கிளம்பும் போது சோமு என்ன சொன்னான்? 'அடே, சிங்காரம், நீ நடக்கிறது, பேசறது, பார்க்கறது எல்லாமே ஒரு 'ஸ்டைலா' இருக்குடா...' அவன் சொன்னதைக் கேட்ட போது பெரிய நட்சத்திரத்துடன் ஒப்பிட்டுக் கொண்டான்.... இங்கு இவர் போயும்....போயும்.. சை!

'பெரிதாக விளம்பரம் செய்து விட்டார். அதைக் கிழித்து அவர் முகத்திலேயே விட்டெறிய வேண்டும்.'

தினசரியைப் பிரித்து அந்த விளம்பரத்தைப் படித்தவன் கீழே தெரிந்த புகைப் படத்தைக் கண்டதும் மேலே வாசித்தான்:

காணமற் போன பையன்

மூன்று அடி ஒன்பது அங்குலம் உயரமும் சிவந்த நிறமும் அகன்ற நெற்



றியும், பின்னால் வாரப்பட்ட சுருட்டைக் கிராப்பும் முகவாய்க் கட்டைக்கு இடது பக்கத்தில் ஒரு சிறு வடுவும் கொண்ட ராஜசேகரன் என்ற பையனை நேற்று முதல் காணவில்லை. பெற்றோர்கள் தவிக்கின்றனர். மேலும் விவரம் வேண்டுவோர் 'வனஜா விலாஸ், உஸ்மான் ரோடு, சென்னை-17' என்ற விலாசத்தில் விசாரிக்கவும். தக்கபடி மரியாதை செய்யப்படும்.

அசுவாரசியமாகப் பேப்பரைக் கீழே எறிந்தான் சிங்காரம். 'ஸார்' என்ற ஈனக் குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தால் வாயிற்படியில் ஒரு சிறுவன் நின்றான்.

''என்னடா?''

''நான்கு நாட்களாகச் சாப்பிடலிங்க.... பசி!......''

''சரி, போ!''

பையன் போகவில்லை.

மேஜையின் மேலிருந்த பேப்பரைச் சுருட்டி எடுத்து அவனை அடிக்கப் போன சிங்காரம் ஓய்ந்து கையைத் தாழ்த்திக் கொண்டான்.

சிவந்த நிறம், அகன்ற நெற்றி, சுருட்டைக் கிராப்பு....முகத்தில் தழும்பு..

''சாப்பிடவில்லையாடா, ராஜா! வாடா, என் கண்ணு!....''

கீழே அழைத்துக் கொண்டு போய்ப் பையனின் பசியைப் போக்குவதற்குள் சிங்காரத்தின் மணிபர்ஸின் கனம் சற்றுக் குறைந்தது.

''உன் பெயர் என்னடா, என் கண்ணு!''

''ராஜு....''

''சபாஷ்டா, என் தங்கமே.....''

பையனுக்கு ஒன்றுமே புரியவில்லை....

''வீட்டுக்குப் போகலாமா செல்லப் பயலே!....''

''நான் வரல்லே....''

''என் வீட்டுக்குத்தான்....'' பையன் மறுபடியும் ஓடி விடப் போகிறானே என்ற அச்சம் சிங்காரத்துக்கு.

தான் வாங்கி வைத்திருந்த வாசனைத் தைலத்தைப் பையனுடைய தலையில் கொட்டி, சீவிவிட்டு, உயர்ந்த ரகப் பவுடரையும் அப்பிய பிறகு பையனை அடையாளமே தெரியவில்லை. அப்பள உருண்டையை அரிசிப் பொடியில் முக்கி எடுத்த மாதிரி இருந்தான்.

ஃ ஃ ஃ

''டிரிங்....டிரிங்....டிரிங்....''

இடது கை பையனைப் பிடித்திருக்க வலது கை மணியை அழுத்தியது.

உஸ்மான் ரோடு விலாஸத்தின் வாயிற் கதவு திறந்தது. ஒருகொடி அசைந்துஅசைந்து வருவது போல் ஒரு காரிகை வெளி வந்தாள். அவள் கண்களைப் பார்க்கும் போது மணியை ஞாபக மூட்டியது. அவளைக் கண்ட கண்கள் மற்ற உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திவிட்டமையால், சிங்காரத்துக்குப் பேசமுடியவில்லை.

''நீங்கள் யார்?'' கரும்புச் சாற்றைச் சுவைக்க முடியுமே தவிரக் கேட்க முடியாதே. இப்போது எப்படி அது அவன் காதுகளில் பாய்கிறது?

அவள்தான் கேட்டிருக்க வேண்டும்.

''நான் யாருமில்லே....''

''இங்கு எதற்காக...?''

''அக்கா கோபித்துக் கொள்ள மாட்டாள்; சமத்தல்ல. போடா.....''

''அக்காவா?....யாருக்கு?''

''குழந்தைகள் இப்படித்தான் படுத்துவார்கள். இதற்காக நீங்கள் கோபித்துக் கொள்ளலாமா?''

''இவன் என் தம்பியா?....''

''அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். உங்கள் பிள்ளை என்று எனக்குத் தெரியாது....''

''சரியான ஆள்தான்! இது எந்த ஊர் வேலே...?''

''எது?''

''இப்படி வந்து ஊரை ஏமாற்றுவது?''

''நான் ஏமாற்றுகிறேனா?....''

''பின் என்னைப் பார்த்தால் பத்து வயதுப் பிள்ளைக்கு அம்மா மாதிரியா தெரிகிறது?''

''அப்படி இல்லே......தம்பி இல்லே என்றதும்....!''

''தம்பியும் இல்லே. பிள்ளையும் இல்லே. போய் வாரும்!''

''அப்படியானால் இந்த விளம்பரம்?''

''கொடுங்கள் பார்ப்போம்!''

அந்தப் பெண் பையனைப் பார்த்தாள், சிங்காரத்தைக் கண்டாள். தினசரியைப் படித்தாள். பிறகு தொடர்ந்து உயர்ந்த சுருதியில் சிரிக்கலானாள்.

''நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்? எனக்கு அல்லவா பைத்தியம் பிடிக்கும்போலிருக்கிறது!''

பவள உதடுகளைப் பிரிட்டுக் கொண்டு சிரிப்பு அலைகள் எழ, எப்பொழுதுமே பார்ப்பவர் மனத்தைத் தன்னுள் இழுத்துக் கொள்ளும் கன்னத்தின் வனப்பு மிக்க குழிகள் மேலும் சிவக்கத் தினசரியில் அவன் காண்பித்த விளம்பரத்தை மீண்டும் படித்தாள். அதில் 'இதே இடத்தை நாளைக்குப் பார்க்கவும்' என்று சிறிதாக அச்சிடப்பட்டிருந்தது.

அங்கு ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த ரேடியோவின் மேல் அடுத்த தினசரிப் பத்திரிகையும் கிடந்தது. அவசரம் அவசரமாகச் சிங்காரம் அதை எடுத்துப் பிரிக்கும்போதே அந்த நங்கை சொன்னாள்.

''வனஜாவதி பிலிம்ஸ் எடுக்கும் முதல் படத்தின் பெயர் காணாமல் போன பையன். அதற்குத்தான் இப்படி புது மாதிரியாக விளம்பரம் செய்து....''

''அப்படியானால் இந்த வீடு....''

''என்னுடையது தான்!'' என்று நுழைந்தார் வைரக்கண்ணு.

ஃ ஃ ஃ

வீட்டில் நுழைந்த வைரக்கண்ணு சிலை போல நின்றார். சிங்காரத்தின் பக்கத்தில் நின்றபடியே நடைபெற்ற நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்த சிறுவன் மேல் அவர் பார்வை நிலைத்தது. கண்கள் இமைக்கவில்லை.

''இவன்தான்....இவன்தான்...'' என்று கூவினார் திடீரென்று.

முகத்தில் கோபம் பொங்க ஆத்திரம் உதடுகளில் நர்த்தன மாட....'' யார் இவன்?'' என்றான் சிங்காரம்.

''காணாமல் போன பையன் ...'' என்றார் வைரக் கண்ணு.



''மறுபடியும் நானும் ஏமாற மாட்டேன்.''

''நானும்தான்!'' என்றார் அவர்.

''என்ன சொல்கிறீர்?''

''நீர் கடவுள் ஐயா, கடவுள்!''

''காலையில் வேறு ஏதோ சொன்னீர்!''

''தப்பு ஐயா, தப்பு! அசல் அவனேதான்!'' பையன் கன்னங்களை அவர் கைகள் தடவின.

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை....''

''சொல்கிறேன், நீர் போனீரா...!''

''நானாகவா போனேன், கழுத்தைப் பிடித்துத் தள்ளினீர்....''

''ஆயிரம் தடவை மன்னிப்பு கேட்கிறேன். நீர் நகர்ந்தவுடன் டெலிபோன் அடித்தது..''

''உம்?''

''காணாமல் போன பையன் கதாநாயகன் விமல பிரஸாத் மூன்றே நாள் ஜுரத்தில் மரித்து விட்டானாம்....''

''ஐயோ. அப்பா!'' என்று கூவினாள் அருமந்தப் புத்திரி!

''தலை மேல் கை வைத்துக் கொண்டு இங்கே வந்தால், அதே ஜாடை, அதே பேச்சு அதே உயரம்...நீர் சமய சஞ்சீவி ஐயா!''

''ஓஹோ!''

''பையனைப் படத்தில் நடிக்க விடும்...''

''அப்படியா?''

''ஊரையே ஆட்டி விடலாம். என்ன?''

''முடியாது....''

''இப்படிச் சொல்லலாமா? ஐம்பதினாயிரம் தருகிறேன். பாதித் தொகைக்கு செக்..''

''இஷ்டமில்லை...''

''தயவு செய்ய வேண்டும்....''

''மன்னிக்கவும்....''

''அறுபதினாயிரம்....''

''வற்புறுத்த வேண்டாம்...''

''எழுபத்தைந்து....''

''தேவையில்லை....''

''முழுவதாக ஒரு லக்ஷம்....''

''எனக்கு அது துச்சம்....''

''உமக்கு என்னதான் வேண்டும்?''

''என் ஹிருதயம்.''

''என்ன ஐயா விளையாடுகிறீர்?''

''காணாமல் போன பையன் உமக்கு அகப்பட்டு விட்டான். என் ஹிருதயம் தான் களவு போய் விட்டது....''

''எங்கே?''

''இங்கேதான். திருடியவள் கூட உமது மகளேதான். முகத்தைப் பாருங்கள்...''

வைரக்கண்ணு திரும்பிப் பார்த்தார். அவர் மகள் வனஜாவின் கண்கள் படபடத்தன. குற்றம் புரிந்தவள் அவள்தான் என்பதற்கு ஐயமில்லை.

''ஹிருதயத்தை மட்டும் திருப்பிக்கொடுக்க முடியாதே!''

''பரவாயில்லை, பெண்ணையும் கொடுத்து விடுங்கள்.''

''சரி!'' என்று தந்தை சொன்னார்—லக்ஷ ரூபாய் லாபத்துடன் ஒரு பெண்ணும் விலை போவதென்றால் கலபத்தில் நடக்கக்கூடியதா?

''ஸ்டுடியோவைக் கூப்பிட்டு 'கால்ஷீட்' போடச் சொல்கிறேன்'' என்றார் அவர்.

''இருங்கள். காலையில் காண்பித்தீர்களே படம், அது யார் மாதிரி இருக்கிறது?''

''என்னைப் போலவே..என்னைப்போலவே'' என்று நகைத்தார் அவர். நகைப்பு அவர் கூற்றை மெய்யாக்கிக் காட்டியது.

பொது ஜனங்களின் ரேடியோ... விலையுயர்ந்த ஸெட்களின் விசேஷ அம்சங்களுடன் மதிப்பரிய ரேடியோ

புதிய நேஷனல் எக்கோ

ஜனதா

நீங்களும் பெறலாம்! ரூ. 125/– தான்! வரிகள் தனி


நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த ரேடியோ இதோ!—நேஷனல் எக்கோவின் 'புதிய ஜனதா' ... மிகக் குறைந்த விலையில் பெரிய ஸெட்களின் சிறப்பு அம்சங்கள் கொண்டது! 'ஜனதா' வின் பராமரிப்புச் செலவும் மிக மிகச் சொற்பம்தான்— 230 வோல்ட் மெயின்களில், உலகிலேயே மிகக் குறைந்த கரண்டு செலவில் இயங்கும் ரேடியோ இது ஒன்றுதான்!

உங்கள் நேஷனல் எக்கோ வியாபாரியை இலவசமாக இயக்கிக் காட்டச் சொல்லுங்கள். உங்கள் ஸெட்டுக்கு இன்றே அவரிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

மாடல் U-756: ஏஸி / டிஸி. 2 பாண்டுகள், ஷார்ட் வேவ் மற்றும் மீடியம் வேவ். 5" 'ஹை ப்ளக்ஸ்' லவுட்ஸ்பீக்கர். இதுவரை விலையுயர்ந்த ஸெட்களில் மட்டுமே இருந்துவந்த சிறப்பு அம்சங்கள் கொண்டது. அழகிய கரும்சிவப்பு பிளாஸ்டிக் பெட்டி. மான்ஸ்-இலேஸ்டு. ஒரு முழு வருஷ உத்தரவாதம்.

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்.

பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி
பாட்னா . பெங்களூர் . ஸெகந்திராபாத்



JWT-GRA 2820 (A)

ஆந்திரா பாங்க்

லிமிடெட்

தலைமைக் காரியாலயம் : மசூலிப்பட்டிணம்

ஸ்தாபிதம் : 1923

74 காரியாலயங்கள்

நகரக் காரியாலயங்கள் :

சென்னை – பெங்களூர் – கோயமுத்தூர் – ஹைதராபாத் & பம்பாய்

சேவிங்ஸ் டிபாஸிட்டுகளுக்கு மாதாந்திர
குறைந்த பட்ச மீதத்தின்மீது

3% வட்டி அளிக்கப்படும்.

சேவிங்ஸ் டிபாஸிட்டில் குறைந்தது ரூ. 10 இருக்கவேண்டும்

வாரத்திற்கு அதிக பட்சம் ரூ. 1000/-க்குமேல் போகாமல், எத்தனை தடவைகளில் வேண்டுமானாலும் பாங்கியிலிருந்து பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

A.B.26 CHA




பண்டிகைக்காக பிரத்யேக பாவாடைகள், பட்டாடைகள்!



வனப்பூட்டும் விதவித வண்ணங்கள்–
எழிலூட்டும் பற்பல மோஸ்தர்கள்
மற்றும் விசேஷ அமைப்புகளுடன்
கூடிய இதர பட்டாடைகள்

நீங்கள் இன்றும் என்றும் விரும்பி வாங்குவது
"ராதா ஸில்க்" பட்டாடைகளே



ராதா ஸில்க்ஸ்

"தன் பில்டிங்" மவுண்ட் ரோடு, சென்னை-2

ராதா ஸில்க் எம்போரியம்

14, சன்னதி தெரு, மைலாப்பூர், சென்னை-4

RSE-993

திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

29

பராசக்தியைப் பல வடிவங்களிலே பல வழிபாட்டு நிலைகளிலே தரிசனம் கண்டு ஊனும் உள்ளமும் உருகிப் பாடுகிறார் திருமூலர்.

அவளை அறியா
அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும்
அருந்தவம் இல்லை.

[அவளன்றி—அவளில்லாமல்]
பராசக்தியின் அருளாற்றலை அறியாத தேவர்கள் இல்லை. அவளுடைய துணையின்றி எந்தத் தவமும் ஆகாது என்பது முனிவர் வாக்கு.

பராசக்தியின் ஆற்றலைக் கொண்டு தான் படைத்தல் காத்தல் முதலிய ஐந்து தொழில்களும் நடைபெறுகின்றன. பஞ்சமூர்த்திகள் என்று சாஸ்திரங்களிலே சொல்லப்படுகிற ஐந்து கடவுளர்களும் இயங்குவது தேவியின் ஆற்றலினாலேதான்.

அவளன்றி ஐவரால்
ஆவதொன் றில்லை

[ஐவர்—ஐந்து ஆதார மூர்த்திகள்.]

அவளன்றி ஊர்புகும்
ஆறுஅறி யேனே

[ஊர் புகுதல்—உயிருக்கு இலட்சியமாகிய சுவர்க்கபுரியை அடைதல். அதாவது முக்தி பெறுதல். ஆறு—வழி.]

அவளை அறியா
அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும்
அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால்
ஆவதொன் றில்லை
அவளன்றி ஊர்புகும்
ஆறுஅறி யேனே

இப்படிப்பட்ட பராசக்தியின் பல கோலங்களிலே ஒரு கோலத்தைச் சொல்லோவியமாக முனிவர் சித்திரித்துள்ளதைப் பார்க்கலாம்.

ஏடங்கை நங்கை
இறைஎங்கள் முக்கண்ணி

[ஏடு அங்கை நங்கை (ஏடங்கை நங்கை)—உள்ளங் கையிலே அறிவுச் செல்வமான புஸ்தகம் தாங்கிய நங்கை. ஏடு—புஸ்தகம். அங்கை—உள்ளங்கை. இறை—இறைவி அதாவது தேவி. முக்கண்ணி—மூன்று கண்களையுடைய தேவி.]

ஏடங்கை நங்கை
இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம்
விரும்பும்வெண் தாமரை

[வேடம்-வேஷம், கோலம். படிகம்-ஸ்படிகம்; சுத்த வெண்மை. வேடம் படிகம்—வெள்ளை ஆடை வெண்ணிறத்து அணி அலங்காரங்கள். விரும்பும் வெண் தாமரை—வெள்ளைத் தாமரை மலரை விரும்பி அதை ஆசனமாகக் கொண்டு வீற்றிருக்கிறாள்; ஒரு கையில் வெண்தாமரை மலரை விரும்பி ஏந்தியும் இருக்கிறாள்.]

பாடும் திருமுறை
பார்ப்பனி—

[திருமுறை - வேதங்கள். பார்ப்பனன்—பிரமன். பார்ப்பனி—பிரமனுடைய தேவியாகிய ஸரஸ்வதி.]

எப்பொழுதும் திருமுறையாகிய வேதங்களைப் பாடிக் கொண்டிருக்கிற ஸரஸ்வதி. அவளும் தேவியின் ஒரு நிலையே.

பாடும் திருமுறை
பார்ப்பனி பாதங்கள்
சூடும்என் சென்னி ;வாய்
தோத்திரம் சொல்லுமே !

[சென்னி—தலை.]

அந்தத் தேவியின் பாதங்களை என்னுடைய தலை சூடிக் கொள்ளும். என் வாய் தோத்திரங்களைச் சொல்லும்.

ஏடங்கை நங்கை
இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம்
விரும்பும்வெண் தாமரை
பாடும் திருமுறை
பார்ப்பனி பாதங்கள்
சூடும்என் சென்னி ;வாய்
தோத்திரம் சொல்லுமே !

கலைமகள் என்றும், மலைமகள் என்றும், மலர்மகள் என்றும், இன்னும் பல உருவகங்களிலும் காணுகிற தேவியை உள்ளம் குழைந்து தெய்வத் தமிழிலே பாடுகிறார் ஞானத் தவ முனிவர்.

பராசக்தி என்று நம்முடைய பெரியோர்கள் துதிக்கும் மூர்த்தி, ஆண்டவனைக் கருணையின் வடிவமாக, கருணை மூர்த்தியாகத் தனிப்படுத்திப் பாவிப்பதற்கு ஒரு சாதனமாகும். இறைவன் இந்த உருவத்தில் இறைவியாகி விடுகிறான். நம்முடைய உள்ளங்கள் தாயைக் கண்டு நெகிழும் வண்ணம் நெகிழ்ந்து இறைஞ்சுவதற்காக இறைவனே பெண் வடிவமாகிறான். இறைவனுக்குள்ள எல்லாக் குணங்களையும் தேவிக்குச் சூட்டி இறைஞ்சுவது நம் பெரியோர்களுடைய முறை. பாவனைக்கு மாத்திரம் வேறுபடுத்துவதே தவிர, இறைவன் வேறு இறைவி வேறு என்பதில்லை.

கோணார்க்

மாயாவி

என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். மனிதனுக்கு வயது ஐம்பதுக்கு மேல் போய் விட்டால், தானாகவே ஓர் ஆஸ்திக மனப்பான்மை உண்டாகி விடுகிறது! ஏறக்குறைய நாற்பது நாற்பத்தைந்து வயது வரையில், 'நான் சாமியாவது! பூதமாவது!' என்று பேசும் கோஷ்டியைச் சேர்ந்தவனாகவே இருந்தேன். பிறகு மெல்ல மெல்ல என்னிடம் ஒரு மாறுதல் ஏற்படத் தொடங்கியது. கொஞ்சம் கொஞ்சமாகக் கோயில் குளம் என்று போகத் தொடங்கினேன்; புராணம், கதா காலட்சேபங்கள் கேட்கலானேன். பிறகு வீட்டிலேயே பூஜை புனஸ்காரம் எல்லாம் ஆரம்பித்து விட்டேன்.

அதுவரையில் என் மனைவி என் போக்கில் குறுக்கிட்டதில்லை. தூண்டிலை எப்போது போட்டு மீனைப் பிடிக்க வேண்டும் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். எனவே, நான் வீட்டிலே ஒரு படத்தை மாட்டிப் பூசை என்று உட்காரத் தொடங்கியதும் அவள் ஒருநாள் மெல்ல ஆரம்பித்தாள். ''ஏன்னா, இதைப் பார்த்தீர்களா? கொள்ளை மலிவா, நாட்டிலே இருக்கிற புண்ணிய க்ஷேத்திரங்களுக்கெல்லாம் அழைச்சுண்டு போய்க் காட்டுகிறார்களே!'' என்று நாளிதழ் ஒன்றை என்னிடம் காட்டினாள். அது யாத்திரை ஸ்பெஷல் ஒன்றைப் பற்றிய விளம்பரம். உணவு அடக்கம், நாற்பது நாட்களில் சுமார் முப்பது முக்கியமான க்ஷேத்திரங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுவதற்கு நபர் ஒன்றுக்கு நானூறு ரூபாய்தான் என்பதைப் படித்ததும் எனக்கும் சபலம் தட்டியது. நானும் வேதமும் அந்த யாத்திரை ஸ்பெஷலில் கிளம்பி விட்டோம்.



பல இடங்களைப் பார்த்து விட்டுப் பல புண்ணிய நதிகளில் மூழ்கிப் பாவங்களைக் கரைத்துக் கொண்டே நாங்கள் ஒரிஸ்ஸா மாநிலத்திலுள்ள பூரிக்கு வந்து சேர்ந்தோம். பூரியில் எங்கள் ஸ்பெஷல் இரண்டு நாட்கள் தங்குவதாக இருந்தது.

பூரிக்கு வந்த அன்று ஜகந்நாதர் ஆலயத்தில் தரிசனத்தை முடித்துக் கொண்டு வெளியில் வந்து கொண்டிருந்தபோது, ''ஹலோ!'' என்று யாரோ என் முதுகில் தட்டவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். பம்பாயில் என்னுடன் சிறிது காலம் ஒரே அலுவலகத்தில் வேலை செய்து வந்த மகாபாத்ரா நின்று கொண்டிருந்தார்.

''நீங்கள் இங்கே எங்கே வந்தீர்கள்?'' என்று அவர் வியப்புடன் கேட்டார்.

''க்ஷேத்திராடனம் வந்தேன், மிஸ்டர் மகாபாத்ரா. நீங்கள் இப்போது இங்கேதான் இருக்கிறீர்களா?''

''ஆமாம்; இந்த ஊரில் எனக்கு ஒரு சினிமா தியேட்டர் இருக்கிறது. வாருங்கள், வீட்டுக்குப் போகலாம்'' என்று மகாபாத்ரா அழைத்தார். அவர் சொந்தத்தில் கார் வைத்திருந்தார். வீட்டுக்கு அழைத்துப் போய் அதிலேயே எங்களை ஸ்டேஷனில் கொண்டு விடுவதாக வற்புறுத்தியதால், நானும் என் மனைவியும் அவருடைய வீட்டுக்குப் போனோம்.

பங்களா மாதிரிப் பெரிய வீடு. மகாபாத்ரா அதிர்ஷ்டக்காரர். திடீரென்று ஒரு நாள் பம்பாய் வேலையை விட்டு, சினிமாத் தொழிலில் புகுந்தார். அதிர்ஷ்டச் சக்கரம் சுழலத் தொடங்கி விட்டது. இப்போது அவருக்கு ஒரிஸ்ஸா மாநிலத்தில் நாலைந்து தியேட்டர்கள் இருந்தன. திரைப்பட விநியோகக் கம்பெனி ஒன்று இருந்தது. புவனேசுவரத்தில் ஒரு பங்களா; கட்டாக்கில் ஒரு பங்களா; இங்கே பூரியில் ஒரு பங்களா. அவர் வருஷத்தில் நாலு நாலு மாதங்கள் ஒவ்வோரிடத்திலும் இருப்பார். இந்த மூன்று இடங்களிலும் அவருக்கு நல்ல வருவாய் தந்து கொண்டிருந்த தியேட்டர்கள் இருந்தன.

நாங்கள் பம்பாயில் நாலைந்து ஆண்டுகளே ஓர் அலுவலகத்தில் பணியாற்றினோம் என்றாலும், மிகவும் நெருங்கிப் பழகியவர்கள். ஆகையால்தான் பத்தாண்டுகளுக்குப் பிறகு சந்தித்த போதிலும் ஒருவரை யொருவர் உடனே அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அன்று மகாபாத்ராவின் வீட்டில் எங்களுக்கு ராஜோபசாரம் நடந்தது. மகாபாத்ராவின் மனைவி நன்றாக ஹிந்தி பேசுவாள். வேதத்துக்கும் ஹிந்தி தண்ணீர் பட்டபாடு. எனவே பெண்களுக்குள்ளும் ஒத்துப் போயிற்று. அன்று இரவு வரையில் அவர்கள் ஸ்டேஷனுக்குத் திரும்ப விடவே இல்லை.

''ரயில் வண்டியில் அந்த மூட்டைப் பூச்சிக் கிடங்கில் போய்ப் படுத்து உறங்குவானேன்? நீங்களோ நாளையன்றுதான் புறப்படப் போகிறீர்கள். அது வரையில் இங்கேயே தங்கிவிடுங்களேன். இங்கே காட்ட வேண்டிய இடங்களை நான் என் காரிலே அழைத்துச் சென்று காட்டி விடுகிறேன்'' என்று சொன்னார் மகாபாத்ரா.

எங்களுக்கும் ஒரு நாளாவது மூட்டைப் பூச்சிக் கடி இல்லாமல் தூங்கலாமே என்ற ஆசைதான். இருந்தாலும் அவர்களுடைய உணவு எங்களுக்குப் பிடிக்க வில்லை. முக்கிய

மாக இதற்காகவே அவரைத் தட்டிக் கழித்து விட்டுக் கிளம்பி விட்டோம்.

காரில் எங்களை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது மகாபாத்ரா, "நாளைக்கு உங்கள் புரோகிராம் என்ன?" என்று கேட்டார்.

"பக்கத்தில் எங்கோ கோணார்க் என்ற ஒரு சூரியன் கோயில் இருக்கிறதாமே; அங்கே எங்களை பஸ்ஸில் அழைத்துச் சென்று காட்டப் போகிறார்கள்."

"பஸ்ஸிலா? வேண்டாம் ராம். எனக்கு நாளைக்கு வேலை ஒன்றும் இல்லை. காலையில் காரைக் கொண்டு வருகிறேன். அதில் போய் வந்துவிடலாம். என் மனைவியையும் வரச் சொல்லுகிறேன். ஒரு பிக்னிக் மாதிரி பகல் பொழுதை உற்சாகமாகக் கழித்து விட்டு வருவோம்" என்றார் அவர்.

பழைய நண்பர் ஒருவர், அவருடைய ஊருக்கு வந்திருந்த எங்களுக்கு விரும்பி உதவி செய்ய முன்வரும் போது எப்படி மறுப்பது? 'சரி' என்று ஒப்புக்கொண்டோம்.

ஃ ஃ ஃ

மறுநாள் நாங்கள் காலை பத்து மணிக்குப் பூரியிலிருந்து வடகிழக்கே சுமார் இருபது மைல் தூரத்திலிருந்த கோணார்க்கை வந்தடைந்தோம். கோணார்க் ஆலயம் கிழக் கடற்கரையை ஒட்டி யிருந்தது. அங்கே அந்தச் சூரியன் கோவிலையன்றிப் பார்ப்பதற்கு விசேஷமாக ஒன்றும் இல்லை. கோவில் ஓரளவு இப்போது சிதலமடைந்திருந்தாலும், ஒரு சிற்பச் சுரங்கமாக விளங்கியது. மற்றக் கோயில்களைப் போலன்றி இது ஒரு புதுவித அமைப்புக் கொண்டிருந்தது. அதாவது சூரியனின் தேரே கோயிலாக உருவாக்கப்பட்டிருந்தது. பக்கத்துக்குப் பன்னிரண்டாக இருபத்து நான்கு சித்திர வேலைப்பாடமைந்த சக்கரங்களுக்கு மேலே கோவில் நின்றது. கோவிலின் முன்புறம் ஏழு குதிரைகள்; அவற்றை ஓட்டும் சாரதியான அருணன் எல்லாம் ஒரு காலத்தில் இருந்தனவாம். இப்போது அவை சிதிலமடைந்திருந்தன.

நடுப்பகல் வரையில் கோவிலின் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளையும், அமைப்பையும் பார்த்து ரசித்து விட்டு, அருகிலிருந்த மரத்தடியில் அமர்ந்து உணவு அருந்தத் தொடங்கினோம்.

"இந்தக் கோவில் எந்தக் காலத்தில் யாரால் கட்டப்பட்டது, மகாபாத்ரா?" என்று கேட்டேன்.

"இது பதின்மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியில், கங்காபுரி மன்னர் முதலாம் நரசிம்ம தேவர் என்பவரால் கட்டப்பட்டது. அதைப் பற்றிக் கர்ண பரம்பரையாக ஒரு கதை கூட உண்டு. மிகவும் உருக்கமான ஒரு படிப்பினைக் கதை. சொல்லட்டுமா?" என்றார் மகாபாத்ரா.

கதை யென்றால் யாருக்குத்தான் பிடிக்காது? "சொல்லுங்கள்" என்றேன்.

மகாபாத்ரா ஆரம்பித்தார்:

ஃ ஃ ஃ

கங்காபுரியின் மன்னர் முதலாம் நரசிம்ம தேவர் சிறந்த கலாரசிகர். அவரே ஒரு கலைஞர் கூட. சிற்பக் கலையின் நுட்பங்களையெல்லாம் நன்கு பயின்றவர். எனவே அவருடைய நாட்டில் சிற்பக் கலைஞர்களுக்கு நல்ல மதிப்பு இருந்தது.

சிற்பக் கலையில் வல்லவராக இருந்த காரணத்தால் நரசிம்ம தேவருக்கு ஒரு விநோத ஆவல் ஏற்பட்டது. தமது நாட்டில், தமது ஆயுட் காலத்துக்குள், இதுவரையில் கோவில் எடுக்கப்படாத ஒரு தெய்வத்துக்கு எந்த மன்னரும் அமைத்திராத மாதிரியில் ஒரு கோவிலைக் கட்ட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

அப்போது அவருடைய ஆஸ்தான சிற்பியாக இருந்தவர் பிஷு மகாராணா என்ற ஸ்தபதி. பிஷு மகாராணா மகாசிற்பி என்று புகழ் பெற்றவர். சிற்பக் கலையில் மட்டுமின்றிக் கட்டடக் கலையிலும் மயனுக்கு ஒப்பானவர். அவரிடம் சிற்பக் கலை பயின்ற மாணவர்கள் ஆயிரக் கணக்கில் உண்டு. அவர்கள் அனைவரும் நாட்டின் பல்வேறு பாகங்களில் தலைசிறந்த சிற்பிகளாக விளங்கி வந்தன ரென்றால், அவருடைய கலைத் திறமைக்கு வேறு என்ன சான்று வேண்டும்?

நரசிம்ம தேவருக்கு மகாசிற்பி பிஷுவிடம் அளவற்ற மதிப்பு உண்டு. ஆயினும் அவருடைய ஒரே ஒரு குணம் மட்டும் மன்னருக்கு நெடுங்காலமாகப் பிடிக்கவில்லை. பிஷு அகந்தை மிக்கவர். ஒப்பாரும் மிக்காரும் அற்றவர்தான் என்றாலும், 'கற்றது கைம் மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்ற எண்ணம் அவருக்குச் சிறிதும் கிடையாது. எப்போதும், எதையும் துரும்பாக மதித்துத்தான் பேசுவார். மன்னர் எத்தனையோ தடவைகள் பிஷுவிடம் இந்தக் குறையைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். கலைஞனுக்குக் கர்வம் உதவாது என்று போதித்திருக்கிறார். ஆனால் நாயின் வாலை எப்படி நிறுத்த முடியாதோ, அவ்வாறே பிஷு மகாராணாவின் இந்தக் கெட்ட குணத்தையும் போக்க முடியவில்லை.

இருந்தாலும், இதற்காக மன்னர் அவர் மீது வைத்திருந்த மதிப்பைச் சிறிதும் குறைத்துக் கொண்டுவிட முடிய வில்லை. இப்போது கூடத் தம் மனத்தில் எழுந்த ஆவலை அவரிடந்தான் முதலில் வெளியிட்டார்.

"அதற்கென்ன அரசே! இந்த மகாசிற்பி இருக்கும் வரையில் உங்களுடைய சிற்பக் கலை ஆவல் எதுவாக இருந்தாலும் நிறைவேற்றி விடுவேன்" என்று இறுமாப்புடன் பதிலளித்தார் பிஷு.

சிற்பி தயங்குவார்; சிந்திப்பார் என்று எண்ணியிருந்த நரசிம்ம தேவருக்கு அவரது உடனடி விடை வியப்பை அளித்தது. "யாருக்குக் கோவில் எழுப்பப் போகிறீர்கள், சிற்பியாரே?" என்று அவர் வினவினார்.

"உலகுக்கெல்லாம் ஒளிக் கடவுளாக விளங்கும் ஆதவனுக்குத்தான். அவனுக்குத்தான் இதுவரையில் யாரும் கோவில் எடுத்ததில்லை."

மன்னர் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தார். "ஆனால் அது யாரும் அமைத்திராத மாதிரியில் இருக்க வேண்டுமே, சிற்பியாரே!" என்று தமது ஆவலை எடுத்துரைத்தார்.

"அப்படியே இருக்கும், மன்னர் மன்னவா! சூரிய பகவான் பவனி வரும் தேரின் அமைப்பிலேயே கோவில் கட்டித் தருகிறேன்."

"மகாசிற்பி! நீங்கள் உண்மையிலேயே ஓர் அரிய மேதை தான். இருந்தாலும் இந்த ஆலயத்தை என் ஆயுட்காலத்துக்குள் முடித்துவிட ஆசைப் படுகிறேன்; அது இயலுமா?"

பிக்ஷு மெல்லிய புன்னகை தவழ, "நீங்கள் இன்னும் பல்லாண்டுகாலம் வாழப் போகிறீர்கள், அரசே! இந்த மகா சிற்பிக்கு ஒரு கோவிலைக் கட்ட அத்தனை காலம் ஆகாது. எனது சீடர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களின் உதவியுடன் பன்னிரண்டே ஆண்டுகளில் கோவில் வேலையை முடித்துத் தந்து விடுவேன். கவலை விடுக" என்றார்.

மன்னரின் மகிழ்ச்சி ததும்பிய முகத்தில் சட்டென்று ஓர் அயர்வு தென்பட்டது. "அரசே! நான் கூறிய கால வரை அதிகம் என்று கருதுகிறீர்களா?" என்றார் பிக்ஷு.

"காலவரையைப் பற்றிக் கவலை இல்லை, கலைஞரே! ஆனால் உங்கள் சீடர்களிடம் இந்த அரிய பணியை ஒப்படைத்தால் அது சிறப்பாக அமையுமா என்று அஞ்சுகிறேன்."

"அரசே! என் சீடர்கள் எனக்கு இணையான கலைத் தேர்ச்சி பெற்றவர்கள். தவிர என் மேற்பார்வையில்தானே அவர்கள் பணியாற்றப் போகிறார்கள்? உங்களுக்குக் கோவிலின் அமைப்பைப் பற்றிய கவலையே வேண்டாம். அது உள்ளத்துக்குகந்ததாகவே அமையும்."

"அமையா விட்டால்....?"

"நானும் என் சீடர்களும் உங்களுடைய வாளுக்கு இரையாகிறோம்."

"நல்லது சிற்பியாரே! உங்களுடைய இந்தச் சூளுரையை நம்பி, இவ்வேலைக்கு உங்களுடைய சீடர்களைப் பயன்படுத்திக் கொள்ள இணங்குகிறேன். சரி, நாளையே நாம் புறப்பட்டு, இந்நாடெல்லாம் சுற்றிக் கோவிலுக்கு ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுப்போம். பிறகு நீங்கள் உங்கள் சீடர்களை யெல்லாம் வரவழைத்து வேலையைத் தொடங்கலாம்" என்றார் மன்னர் நரசிம்ம தேவர்.

* * *

சிற்பிக்கு இந்தக் கோவில் திருப்பணியைக் கூடியமட்டும் கடுமையாக்கி, திணறச் செய்து, அவரது அகந்தையை ஒடுக்க வேண்டுமென்று நரசிம்ம தேவர் தீர்மானித்துக் கொண்டார். எனவே அவர் வேறு எத்தனையோ வசதியான இடங்களைச் சிற்பி காட்டியும், அவற்றை நிராகரித்து விட்டு, தண்ணீர்கூடக் கிடைக்காத, மனித நடமாட்டம் அற்ற, ஒரு மரம், செடி, கொடிகூட இல்லாத இந்தக் கோணார்க் கடற்கரைப் பகுதியைத் தேர்ந்தெடுத்து இங்கேதான் கோவில் கட்ட வேண்டும் என்றார். இதை அவர் தேர்ந்தெடுப்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. இதன் அருகில் முன்பு ஒரு மலைக் குன்று இருந்தது. அது பல காலம் கடலின் கீழே ஆழ்ந்து கிடந்ததால், அதன் கற்கள் சாதாரணக் கருங்கற்களைவிட உரம் பெற்றிருந்தன. இங்கே ஆலயம் அமைத்தால் சிற்பி இக்கற்களைத்தான் பயன்படுத்துவார். இவற்றில் சிற்ப வேலைகள் செய்ய மிகவும் கஷ்டப்படுவார். ஒருகால் அவர் கொடுத்துள்ள காலவரையைத் தாண்ட நேரிட்டாலும் நேரிட்டு விடும் என்றெல்லாம் கருதித்தான் இந்த இடத்தை அவர் தேர்ந்தெடுத்தார்.



அமெரிக்கத் தூதர் ஜான் கால்பிரெய்த் அவர்கள், அண்ணாமலை சர்வகலாசாலையில், சென்ற அக்டோபர் 12-ந் தேதி சென்னை கவர்னர் விஷ்ணுராம் மேதி அவர்கள் தலைமையில், பட்டமளிப்பு விழாவில் பங்கெடுத்துக் கொண்டு பிரசங்கம் செய்தார். அவ்வமயம் அண்ணாமலை சர்வகலாசாலை கால்பிரெய்த் அவர்களுக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

ஆனால் சிற்பி பிஷுவோ இதை யெல்லாம் பற்றிக் கவலை அடைந்ததாகவே தெரிய வில்லை. மாறாக அவர் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்ததற்காக மன்னரைப் பாராட்டினார். ''உங்கள் ஆவல் மேலும் சிறப்பாக நிறைவேறும் இடத்தையே தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள், அரசே! ஆதவன் ஒளி பரப்பத் தொடங்குவது கிழ்த் திசையில் இருந்தே அல்லவா? அவனுடைய முதல் ஒளி நமது ஆலயத்தில் விழுந்து அதிலிருந்து உலகுக்கெல்லாம் ஒளி பரப்புவது போல் கோவிலை உருவாக்கித் தருகிறேன்'' என்று அப்போதும் செருக்குடனே பதிலளித்தார்.

''செய்யுங்கள்; ஆனால் நீங்கள் கொடுத்துள்ள காலவரையும், சூளுரையும் மட்டும் நினைவில் இருக்கட்டும்'' என்று எச்சரித்தார் மன்னர் நரசிம்ம தேவர்.

ஃ ஃ ஃ

ஆதவனுக்கு ஆலயம் அமைக்கும் அரும் பணி ஆரம்பமாயிற்று. நாடெங்கிலுமிருந்த தமது சீடர்களுக்கு ஓலை அனுப்பினார் சிற்பி பிஷு. ஆயிரத்து இருநூறு சிற்பக் கலைஞர்கள் கங்காபுரி வந்தடைந்தனர். அவர்கள் முன் ஓர் ஆரம்ப உரை நிகழ்த்தினார் மகா சிற்பி. மன்னரது ஆவலையும், அதை நிறைவேற்றி வைக்கத் தாம் சூளுரைத்ததையும், கோவிலை நிர்மாணிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தைப் பற்றியும் அவர்களுக்கு விவரித்து விட்டு, இறுதியாகச் சொன்னார்:

''என் அருமைச் சீடர்களே! வசதிகள் அற்ற அந்த இடத்தில் ஓர் அற்புதமான கோவிலை அமைக்க நான் கூறியுள்ள காலவரை சிறிது குறைவுதான். இடத்தைத் தேர்ந்தெடுக்கு முன்பே காலவரையைக் குறிப்பிட்டு விட்டதால் ஏற்பட்ட பிழை இது. இனிமேல் காலவரையை நீடிக்குமாறு மன்னரைக் கேட்பது என் பெருமைக்கு இழுக்கு.

''ஆனால் நாம் அனைவரும் பிற கவலைகள் இன்றி ஒருமுகமாக இத்திருப்பணியில் ஈடுபட்டால் குறிப்பிட்ட காலவரைக்குள் கோவிலை நிச்சயமாகக் கட்டி முடித்து விடலாம். எனவே உங்கள் ஆசிரியனுக்காக நீங்கள் ஓர் உறுதி பூண வேண்டும். பன்னிரண்டாண்டு காலத்துக்கு நமது குடும்பங்களைக் காப்பாற்ற மன்னரிடம் ஏற்பாடு செய்யச் சொல்லி விடுகிறேன். இறப்போ, பிறப்போ எது நிகழ்ந்தாலும் சரி, கோவிலைக் கட்டி முடித்துக் கும்பாபிஷேகம் ஆகும் வரையில் நீங்கள் ஊர் திரும்பக் கூடாது.

''இன்றொன்று. மன்னரவர்கள் உங்களுடைய கலைத்திறனிலே சிறிது ஐயம் தெரிவித்தார்கள். எனக்கு அது வெறியூட்டியது. எனவே நாம் நிர்மாணிக்கும் கோவில் அவருடைய திருப்திக்கு ஏற்றவிதத்தில் அமையாவிட்டால் அனைவரும் அவருடைய வாளுக்கு இரையாவதாகச் சூளுரைத்திருக்கிறேன்..... இதையும் நீங்கள் கருத்தில் கொண்டு வேலை செய்ய வேண்டும்.''

ஆசிரியர் பெருமானிடம் அளவற்ற விசுவாசம் உடைய சீடர்கள், அவருடைய எல்லாக் கோரிக்கைகளுக்கும் இணங்கி வேலையைத் தொடங்கினர்.

கல்லிலே காவியமாக இந்தக் கலைக்கோவில் உருவாயிற்று. நரசிம்ம தேவர் எதிர்பார்த்தது போல், வசதிக் குறைவுகளோ, கடுமையான கல்லோ எதுவும் பிஷுவும் அவரது சீடர்களும் மேற்கொண்ட வேலைக்குக் குறுக்கிடாக வில்லை. பசி, தாகம், ஊண், உறக்கம் யாவற்றையும் மறந்து ஒருமுகமாகப் பணியாற்றிக் காலவரைக்கு முன்பே ஆலய வேலைகளை முடித்து விட்டார்கள் அவர்கள்.

''வேலை முடிந்து விட்டது, அரசே! பன்னிரண்டு ஆண்டுகள் கெடு வைத்தேன். அதற்கு ஓராண்டுக்கு முன்பே முடித்து விட்டேன். சமூகத்தில் வந்து பார்வையிட்டுத் திருப்தி தெரிவிக்க வேண்டும்'' என்று தமது திறமைச் செருக்கு வெளிப்படக் கூறி, மகா சிற்பி நரசிம்மதேவரை ஒரு நாள் வந்து அழைத்தார்.

மறு நாள் பொழுது புலரும் தருணத்தில் மன்னர் கோணூர்க்கு வந்தார். அந்தக் கலைக்கோவிலைப் பார்த்தார். உண்மையிலேயே பிரமித்துப் போய் விட்டார். 'சிற்பியின் செருக்கை அடக்க இந்த வாய்ப்பும் பயன் படாமற் போய் விட்டதே!' என்று வருந்திக் கொண்டிருக்கையிலேயே, அவர் உள்ளத்தில் சட்டென்று ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

''திருப்திதானே, அரசே?'' என்று கேட்டார் பிஷு மகாராணு.

''இல்லை; நீங்கள் வாக்களித்தபடி கோவில் அமையவில்லை. கதிரவனின் ஒளி இக்கோவிலின் மூலம் உலகுக்கெல்லாம் பிரதிபலிப்பது போல் அமைப்பதாகக் கூறினீர்களே. இதோ பாருங்கள், இந்தச் சுவரில் விழும் ஒளி பிரதிபலிக்கவே இல்லையே! அங்கேயே அமிழ்ந்தல்லவா போய் விடுகிறது!''

சிற்பியார் புரிந்துகொண்டார். ''விளங்குகிறது, மன்னவா! கோவில் முழுதும் ஒளிப் பிரதிபலிப்பு ஏற்படுமாறு பளபளப்பாக இருக்க வேண்டும் என்கிறீர்கள், அல்லவா?''

''ஆமாம். இல்லாவிட்டால் இதைக் கதிரவன் கோவில் என்று சொல்லுவதில் பொருள் என்ன இருக்கிறது?''

''சரி; இன்னும் ஆறு திங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள். கோவில் முழுதும் கறுப்புப் பளிங்குக் கல்லால் ஆனது போல் பளபளக்கச் செய்து விடுகிறேன்'' என்று மீண்டும் கர்வத்துடன் சொன்னார் பிஷு.

மன்னர் சிரித்துக் கொண்டே, ''ஆறு திங்கள் ஏன்? நீங்கள் வைத்த கெடு முடிய ஓராண்டு முழுதாக இருக்கிறது. அதற்குள் வேலையை முடியுங்கள், போதும்'' என்று கூறி விட்டுச் சென்றார்.

அவருக்குத் தெரியும், ஓராண்டு அல்ல; ஓராயிரம் ஆண்டுகள் சிற்பியார் தலைகீழாக நின்றாலும், கோவிலில் ஓர் அணுவைக் கூட அவரால் பளபளப்பாக்க முடியாதென்று. ஏனென்றால் அது கடலிலே பல காலம் அமிழ்ந்து உரம் ஏறிப் போன கற்களால் ஆனது. அதிலே மெருகு ஏற்றச் சாதாரண தேய்ப்புக் கற்கள் பயன்படமாட்டா. அதற்குத் தனியாக விசேஷ உறுதியையுடையதேய்ப்புக் கற்கள்தாம் வேண்டும். அத்தகைய தேய்ப்புக் கற்களைத் தயாரிக்கும் விதத்தை மன்னர் நரசிம்ம தேவர் மட்டுமே கண்டு பிடித்து வைத்திருந்தார்.

கவுரவத்தை கொடுக்கக் கூடிய துணிகள்



டெட்டினால் சலவை செய்யப்பட்டதே



- **டெட்டினால் சலவை செய்யப்பட்ட துணிகள் பிரகாசமாக தோற்றமளிக்கும்**

  டெட்டின் நேர்த்த சுத்திகரிப்புச் சலவை உங்களுடைய ஆடைகளை புத்தம் புதியது போல் பிரகாசிக்கச் செய்கிறது.

- **டெட்டினால் சலவை செய்யப்பட்ட துணிகள் மிக வெண்மையாக தோற்றமளிக்கும்.**

  டெட் ஆடைகளை சுத்தமாகவும், பிரகாசமாகவும் வெளுக்கும் நேர்த்த பரிசுத்தகாரனி. டெட்டினால் துவைக்கப்பட்ட துணிகளுடன் நீலத்தையோ அல்லது வெண்மையாக்கும் பொருளையோ சேர்க்க வேண்டிய தேவையில்லை. காரணம் கண் கவரும் வெண்மையை தரும் பொருள் டெட்டில் அடங்கியுள்ளது.

- **டெட்டினால் சலவை செய்தல் என்பது நவீன முறையில் சலவை செய்யப்படுவதென்பது பொருள்.**

  வெந்நீரிலும், மென்னீரிலும் டெட்டை உபயோகித்து நன்கு சலவை செய்யலாம். டெட் அபரிமிதமாக நுரை தருகிறது. காட்டன், சில்க், ரேயான், கம்பளி, டெரின் அல்லது கலர் துணிகள்-எல்லா விதமான ஆடைகளுக்கும் டெட்டை தாராளமாக உபயோகிக்கலாம்.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட், பம்பாய்-1.

அவர் நினைத்தபடியேதான் ஆயிற்று. மகா சிற்பியார் தாம் கற்ற வித்தையெல்லாம் பயன்படுத்திப் பார்த்தும் கோவில் கற்களிலே மெருகு ஏற மறுத்தது.

பதினொரு திங்கள் ஓடி விட்டன. கற்கோவில் பொற் கோவிலாக மாறவில்லை. சிற்பியார் தனியாகத் தவித்தார். தாம் மட்டுமின்றித் தமது சீடர்கள் ஆயிரத்து இருநூறு பேரும் உயிரிழக்க வேண்டும் என்பதை எண்ணியபோது அவருடைய குடல் கலங்கியது.

இந்நிலையில் ஒரு நாள் மகாசிற்பியார், உயிரிழந்தவர் போல் தமது ஓலைக் குடிலில் உட்கார்ந்திருந்த போது, ''ஐயா! ஐயா!'' என்று ஓர் இளங்குரல் அவரை விளித்தது. சிற்பியார் வெளியே வந்து பார்த்தார். பதினொரு வயது மதிக்கத் தக்க பாலகன் ஒருவன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

''வணக்கம் ஐயா! மகாசிற்பி பிஷு மஹாராணாவைக் காண வந்தேன். அவர்களை எங்கே பார்க்கலாம்?'' என்று பணிவுடன் வினவினான் அந்தச் சிறுவன்.

''நான்தான் அந்தச் சிற்பி பிஷு, தம்பி! உனக்கு என்ன வேண்டும்?''

''ஆஹா! என்னே என் பாக்கியம்! சிற்பக் கலைக் காவலரே! உங்களை வணங்குகிறேன்'' என்று அவன் அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

''நீ யார் தம்பி! உன் பெயர் என்ன?'' என்று கேட்டார் பிஷு.

''என் பெயர் தர்மா, சிற்பிப் பெரியாரே! நான் யார் என்பதை நீங்கள் இப்போது அறியத் தேவையில்லை. ஆனால் எதற்காக வந்தேன் என்பதை நீங்கள் விரும்பினால் அறிவிக்கிறேன்.....''

பிஷு அவனுடைய சாதுரியமான பேச்சைக் கேட்டுச் சிரித்தவாறே, ''சொல் தம்பி; அதைத்தான் சொல்லேன்'' என்றார்.

''நீங்கள் ஒரு தத்தளிப்பான நிலையில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதிலிருந்து உங்களுக்கு மீட்சி அளிக்கலாம் என்று வந்தேன்'' என்றான் தர்மா.

பிஷு கோபத்துடன் அவனை நோக்கினார். அகந்தை மிக்க அவருக்கு, ஒரு சிறுவன் தமக்கு மீட்சி அளிக்க வந்திருப்பதாகக் கூறியது பிடிக்க வில்லை. ''என்ன தம்பி, யாரிடம் என்ன பேசுகிறாய் என்று தெரிந்துதான் பேசுகிறாயா?'' என்று படபடத்தார் அவர்.

சிறுவன் அவருடைய கோபத்தைக் கண்டு சிறிதும் அஞ்சிவிட வில்லை. ''நீங்கள் மகா சிற்பி பிஷு மஹாராணாதானே? அப்படியானால் யாரிடம் பேச வேண்டுமோ, அவரிடம் தான் பேசினேன், மகாசிற்பியாரே! நீங்கள் கற்கலையிலே வல்லவர்கள்தாம். இருந்தாலும் இந்தக் கோவிலின் சிற்ப வேலைகளுக்கு மெருகிட முடியாமல் தத்தளிப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையானால், எதைப் பேச வேண்டுமோ, அதைத்தான் பேசினேன்'' என்று கம்பீரமாகப் பதிலளித்தான்.

''நேற்றுப் பிறந்த சிறுவன் நீ. கல்லையே இப்போதுதான் கண்ணால் பார்த்திருப்பாய். நீ கற்கலைக் காவலனை என் தத்தளிப்பைப் போக்கப் போகிறாயா?'' என்று ஏளனமாக நகைத்தார் பிஷு.

''மகாசிற்பியாரே! நான் கற்கலையில் வல்லவன் அல்ல; சிற்பவேலை என்றாலே என்னவென்றும் எனக்குத் தெரியாது. ஆயினும், இந்தக் கோவிலைக் கட்டியுள்ள கற்களில் எப்படி மெருகேற்றுவது என்பது மட்டும் எனக்குத் தெரியும். வீணாக நீங்களும் உங்கள் சீடர்களும் தலையைப் பறி கொடுக்கப் போகிறீர்களே என்ற வருத்தத்தினால், அதைத் தவிர்க்கலாம் என்று வந்தேன். உங்களுக்குத் தலையை இழக்கத்தான் விருப்பம் போலும். அதுதான் இறைவன் சித்தமென்றால் நான் என்ன செய்ய முடியும்? வருகிறேன், மகாசிற்பியாரே!'' என்று அந்தச் சிறுவன் திரும்ப முயன்றான்.

''நில், தம்பி!'' என்று அவனைப் பிடித்து நிறுத்தினார் பிஷு. ''உண்மையாகவே இக்கற்களுக்கு மெருகேற்றும் முறையை நீ அறிவாயா? யாரிடம் கற்றாய் அந்த வித்தையை?''

''யாரிடம் கற்றால் என்ன? உங்களுக்குத் தேவையானதை யெல்லாம் நான் செய்து காட்ட முடியும்.''

''செய்து காட்டு, பார்க்கலாம். இதோ இருக்கிறது, இந்தக் கோவிலைக் கட்டிய கற்களிலே ஒரு துண்டு.'' பிஷு கீழே கிடந்த சதுரமான கற்துண்டு ஒன்றைக் காட்டினார்.

''செய்து காட்டுகிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை'' என்றான் அச்சிறுவன்.

''நிபந்தனையா?''

''ஆமாம்; இந்தக் கோவில் வேலையைப் பூர்த்தி செய்த பெருமை என்னைச் சேர வேண்டும். மன்னரின் கையால் நானே முதல் பரிசில் பெற வேண்டும்.''

சிற்பி சிறிது நேரம் சிந்தனை செய்தார்; பிறகு, ''சரி தம்பி. உன் விருப்பப்படியே ஆகட்டும்'' என்று இணங்கினார்.

சிறுவன் அவரை அழைத்துக் கொண்டு கடலின் மணற்பரப்புக்கு அப்பால் இருந்த பசுமையான வெட்டவெளிக்குச் சென்றான். அங்கே ஏதோ ஒரு வகைச் செடி காடாக முளைத்துத்தழைத்திருந்தது. அவற்றில்இரண்டு மூன்றை பிடுங்கிக் கொண்டு குடிலுக்குத் திரும்பி வந்தான். செடிகளின் வேரை நீக்கிவிட்டுத் தண்டையும் இலைகளையும் உரலில் இட்டு, இடித்துச் சாறெடுத்தான். பிறகு பிஷு மெருகிடுவதற்காக உபயோகித்து வந்த தேய்ப்புக் கற்களில் ஒன்றை வாங்கி அந்தப் பச்சிலைச் சாற்றிலே ஊறப் போட்டான். சுமார் பதினைந்து நாழிகைப் பொழுது அந்தத் தேய்ப்புக் கல் பச்சிலைச் சாற்றில் ஊறிய பிறகு அதை எடுத்துக் கழுவி பிஷுவிடம் கொடுத்து, ''சரி, இப்போது நீங்கள் நீட்டிய கல்லில் இதைக் கொண்டு மெருகேற்றிப் பாருங்கள்'' என்றான் தர்மா.

பிஷு அவ்வாறே செய்தார். என்ன ஆச்சரியம்! தேய்க்கத் தேய்க்கக் கல்லில் மெருகு ஏறி, அது பளபளக்கத் தொடங்கியது.

''பார்த்தீர்களா? இம்மாதிரியே உங்களிடமுள்ள தேய்ப்புக் கற்களையெல்லாம் பச்சிலைச் சாற்றில் ஊற வைத்து, கோவில் கற்களைவிட உறுதி மிக்கதாய் ஆக்கிக் கொண்டு, பிறகு மெருகிட வேண்டும். சரி, நான் வருகிறேன். கோவில் கும்பாபிஷேக நாளன்று அரசர் பரிசில் கொடுக்கத் தொடங்கும்போது வந்து முதல் பரிசைப் பெற்றுக் கொள்கிறேன்'' என்று புறப்பட்டான் சிறுவன்.

ஆனால் பிஷு அவனைப் போக விடவில்லை. "தம்பி! பொழுது இருட்டி விட்டது. இரவு இங்கேயே தங்கி விட்டுக் காலையில் போகலாம்" என்று அவனை நிறுத்திக் கொண்டார்.

ஃ ஃ ஃ

மறு நாள் முதல் கோவில் சிற்ப வேலைகளுக்கு மெருகு கொடுக்கும் பணி ஆரம்பமாயிற்று. அதனை யாரிடமிருந்து கற்றார் என்பதை பிஷு தம் சீடர்களிடம் கூறவே இல்லை. எப்படிக் கூறுவார்? அதை விடப் பேரவமானம் அவருக்கு வேறு உண்டா?

மன்னர் கொடுத்த ஒரு திங்கள் கெடுவுக்குள் கோவிலின் 'நகாஸ்' வேலை முடிந்து விட்டது. நரசிம்ம தேவர் வந்து பார்த்தார். "அபாரம்! அற்புதம்!" என்று பாராட்டினார். கும்பாபிஷேகத்துக்கு நாள் குறிப்பிடப்பட்டது.

கும்பாபிஷேகத்தன்று மனித நடமாட்டமற்ற இந்தக் கோனூர்க் பகுதி ஒரு புதிய நகரம்போல் காட்சி அளித்தது. ஆலயத்தின் அமைப்பையும் அழகையும் கண்டு அனைவரும் அதிசயித்தனர். மகாசிற்பி பிஷு மஹாராணாவைப் பாராட்டாதவரே இல்லை.

உச்சிப் பொழுதில் கணிக்கப்பட்ட நல்ல வேளையில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது. அதைத் தொடர்ந்து கூட்டமெல்லாம் கோவிலின் முன் அமைக்கப்பட்டிருந்த பிரத்தியேகப் பந்தலில் வந்து குழுமியது. பந்தலின் ஒரு கோடியில் பெரிய மேடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் நடுநாயகமாகப் போடப்பட்டிருந்த பொன்னாசனத்தில் நரசிம்ம தேவர் அமர்ந்திருந்தார். அருகே பல ஆசனங்களில் அவரது அமைச்சர்கள் முதலிய பெருந்தரத்து அதிகாரிகளும் மகாசிற்பி பிஷுவும் அமர்ந்திருந்தனர். மேடைக்குக் கீழே முதலில் பல வரிசைகளாகச் சிற்பியின் சீடர்களான இதர சிற்பிகள் அமர்ந்திருந்தனர். ஆம், அங்கே அப்போது அந்த அற்புதக் கோவிலை உருவாக்கிய சிற்பிகளுக்குப் பரிசளிக்கும் வைபவம் நடக்க விருந்தது.

மன்னர் நரசிம்ம தேவர் முதலில் எழுந்து பேசினார். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் மனசில் எழுந்த விநோத ஆவலிலிருந்து தொடங்கி, எத்தனையோ இடையூறுகளுக்கிடையே மகாசிற்பி மஹாராணாவும் அவரது சீடர்களும் அந்த ஆவலுக்கு உருக் கொடுத்தது வரையில் விளக்கி விட்டு, "மகாசிற்பி பிஷு மஹாராணாவும், அவரது சீடர்களும் இக்கோவிலை நிர்மாணித்ததன் மூலம் எனக்கு மட்டும் புகழ் தேடித் தந்துவிட வில்லை, தங்களுக்கும் புகழைத் தேடிக் கொண்டு விட்டார்கள். இக்கோவில் இவ்வளவு எழிலுடன் உருவாகக் காரணமாக இருந்த ஒவ்வொருவருக்கும் ஒரு 'சிறிய காணிக்கையை வழங்கப் போகிறேன். அமைச்சர் மகேந்திரர் ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அழைப்பார். கலைஞர்கள் மேடைக்கு வந்து பரிசில்களை பெற்றுப் போக வேண்டுகிறேன்" என்றார்.

மன்னர் இவ்வாறு பேசி விட்டு அமர்ந்ததும், அவையில் கரகோஷம் வானைப் பிளந்தது. அது அமிழ்ந்து போகும்படியாக, "மகாசிற்பி பிஷு மஹாராணா வாழ்க! மாமன்னர் நரசிம்ம தேவர் வாழ்க!" என்று பிஷுவின் சீடர் குழாம் வாழ்த்தொலி எழுப்பியது.

இந்த ஆரவாரங்கள் அடங்கியதும் அமைச்சர் மகேந்திரர் மேடையின் முன்வந்து, சிறிய ஓலைச் சுவடி ஒன்றை எடுத்துச் சிற்பிகளைப் பெயர் கூறி அழைக்கலானார். யாவரும் பிஷுவின் பெயர் முதலில் வரும் என்று காத்திருந்தனர். ஆனால் அமைச்சரோ, "குமார சிற்பி தர்மா" என்று அழைத்தார்.. திடுக்கிட்ட அவையினர் யார் அந்தத் தர்மா என்பதை அறியும் ஆவலுடன் சுற்றிலும் நோக்கினர். நெடு நேரமாகியும் யாரும் மேடையை நோக்கிவரவில்லை. அமைச்சர் மன்னரின் முகத்தைப் பார்த்தார். மன்னர் மகாசிற்பியின் முகத்தைப் பார்த்தார். மகாசிற்பியின் முகம் பேயறைந்தது போல் வெளுத்தது.

நரசிம்ம தேவர் பெயருக்கேற்ப நரசிம்மமாக மாறினார். "சிற்பியாரே! எங்கே உங்களுக்கு மெருகிடும் இரகசியத்தைக் கற்றுத் தந்த தர்மா? அவனை ஊருக்கு அனுப்பி விட்டீர்களா?" என்று கர்ஜித்தார்.

"மகாபிரபு! என்னை மன்னிக்க வேண்டும்! என் தலையையும் என் சீடர்கள் தலையையும் காத்துக் கொள்ளுவதற்காக அவனை இவ்வுலகினின்றே அனுப்பி விட்டேன்" என்று மன்னர் காலில் விழுந்து கதறினார் அவர்.

"ஐயோ!" என்று வீறிட்டார் மன்னர்.

"வேறு வழி இல்லை, அரசே! என்னை நம்பிப் பன்னிரண்டு ஆண்டுகள் வீடு வாசலைத்



பாரத தேசத்தின் புராதனப் பண்பாடு, கலா சாரம் இவற்றை நேரில் கண்டறிந்து மகிழும் நோக்கத்துடன் அயல் நாடுகளிலிருந்து இங்கு விஜயம் செய்யும் யாத்திரீகர்களை நம் நாட்டின் பண்புக்குக் குறைவுண்டாகாத விதத்தில் வரவேற்று உபசரிப்பதுடன் அந்நியச் செலாவணியும் கணிசமான அளவுக்குச் சம்பாதித்துத் தருவதில் ஹோட்டல்கள் பெரும் பங்கு எடுத்துக் கொண்டுள்ளன. ஹோட்டல் முதலாளிகள் சங்கத்தினர் சமீபத்தில் சென்னையில் மகாநாடு நடத்தித் தங்கள் தொழிலில் மேலும் அபிவிருத்தி காணும் நோக்கத்துடன் பல விஷயங்களைப்பற்றி விவாதித்தனர். மகாநாட்டில் மத்திய அரசாங்க அமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

துறந்து வந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட சீடர்களின் உயிரைக் காப்பதற்காக அந்த ஒரு சிறுவனின் உயிரைப் பலியிடத் துணிந்தேன். உடனே ஊர் திரும்பிவிட விரும்பிய அவனை இரவு தங்கச் செய்து, தூங்கிக் கொண்டிருந்த போது, கையையும் காலையும் கட்டிக் கடலில் வீசி விட்டேன். மகாபிரபு! என் குற்றத்துக்குப் பிராயச்சித்தமே கிடையாது. இருந்தாலும் இதற்காக நீங்கள் அளிக்கும் தண்டனை என் ஒருவனையே சாரும் அல்லவா?''

''தண்டனை! தண்டனை! ஆம், அந்தத் தண்டனைக்கு உரியவன் நான்தான், சிற்பியாரே! உங்கள் அகந்தையை அடக்க விஷப் பரீட்சை செய்து, உங்களுக்கு மகத்தான நஷ்டத்தை, ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தி விட்டேன், கலைஞரே! நீங்கள் கோவிலுக்குக் கல்லெடுத்த குன்று பல காலத்துக்கு முன் கடலில் ஆழ்ந்திருந்தது. அதன் உரம் பெற்ற கற்களுக்கு மெருகு கொடுக்கத் தக்க உறுதியைத் தேய்ப்புக் கல்லில் உண்டாக்கும் வழியைப் பல காலம் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து வைத்திருந்தேன். அதை நீங்கள் கண்டு பிடிக்கிறீர்களா என்று பார்த்து முடியாமற் போனால் நானே கற்றுக் கொடுத்து உங்கள் அகந்தையை இடித்துரைக்கலாம் என்றிருந்தேன்.

''இடையே அந்தச் சிறுவன் தற்செயலாக என்னைத் தேடி வந்தான். அவனைக் கொண்டு உங்களுக்கு அதைக் கற்றுத் தரச் செய்தால் உங்கள் அகந்தையை இன்னும் நன்றாக அழித்ததாகும் என்று கருதி, அவனிடம் எல்லாவற்றையும் கூறி உங்களிடம் போய், தான் யார் என்று காட்டிக் கொள்ளாமல், தேய்ப்புக் கல் தயாரிக்கும் விதத்தைக் காட்டிக் கொடுத்து, அதற்குப் பிரதியாக முதல் பரிசிலைக் கேட்கும் படி அனுப்பினேன். ஆனால் மகாபாவியான எனக்கு, ஆயிரத்து இருநூறு சீடர்களின் உயிரையும், மானத்தையும் காப்பதற்காக நீங்கள் அவனைப் பலியிட்டு விடக் கூடும் என்பது அப்போது தோன்றவில்லையே!'' என்று புலம்பி அழுதார் நரசிம்ம தேவர்.

''நடந்தது நடந்து விட்டது அரசே! ஒரு சிறுவனின் உயிரைப் பலியிட்டுத்தான் என் அகந்தை அழிய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது போலும். அதனால் தான் உங்களுக்கு அவனை என்னிடம் அனுப்ப வேண்டும் என்று தோன்றியது; எனக்கும் அவனைக் கொன்றுவிட வேண்டும் என்று தோன்றியது'' என்று மன்னரைத் தேற்றினார் சிற்பி.

நரசிம்ம தேவர் சிற்பியின் முகத்தைப் பரிதாபத்துடன் பார்த்தார். நாத் தழுதழுத்தது. ''அவன்... அவன்'' என்று தடுமாறினார்.

''அவன் யாராயிருந்தால் என்ன? சூரியன் கோவில் ஒரு சிறுவனின் உயிரைப் பலி கேட்டது. அந்தப் பேற்றை அவன் பெற்றான்.''

''ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள், மகா சிற்பி! நீங்கள் கொன்றவன் உங்கள் மகன்! நீங்கள் இத்திருப்பணியை மேற்கொண்டு இங்கே வந்த போது உங்கள் மனைவியார் கருவுற்றிருந்தார்களாமே. அந்தக் கருவில் உதித்தவன் தர்மா. பிறந்ததுதொட்டு முகமறியாத தந்தையைக் காண வேண்டுமென்ற பேரவாவுடன், இங்கே வருவதற்கு என் அனுமதி பெற வந்தான். வந்தவனை....''

மன்னர் முடிக்க வில்லை. அதற்குள், ''என்ன? என் மகனா?'' என்று அலறியவாறு கீழே சாய்ந்தார் பிஷு. சாய்ந்தவர் சாய்ந்தவர்தான். பிறகு எழுந்திருக்கவே இல்லை.

ஃ ஃ ஃ

இங்கேயும் மகாபாத்ரா கதையை முடிக்கவில்லை. அதற்குள் என் மனைவியின் அலறல் கேட்டது. ''போதுமே! புண்ணியம் தேடி க்ஷேத்திராடனம் வந்த இடத்திலே கன்னராவிக் கதையையெல்லாம் கேட்டுக்கொண்டு? கோணார்க்கும் ஆச்சு; கொலைக்களமும் ஆச்சு. வாருங்கள் போகலாம்'' என்றாள் அவள்.

நானும் மகாபாத்ராவும் பெருமூச்சு விட்டுக் கொண்டே எழுந்தோம்.


இவர்களுக்கு
இன்னும் எண்ணற்றவர்க்கு ... அதி விசேஷ ஆடையணிகள்
அனிய அழகானவை, நீடித்துழைப்பவை...
கண்கவர் வர்ணங்கள், நெசவுகள்,
அமைப்புகளோடு பல்வேறு ரகங்களில்
தயாராகி, வருகின்றன.
பாப்ளின்கள்
மல்கள்
வாயில்கள்
புடவைகள்
வேஷ்டிகள்
ஷர்ட்டிங்குகள்
பைஜாமாக்கள்
உயர்ந்த ரகத்தில் அச்சிடப்
பட்ட, சாயம் தோய்க்கப்
பெற்ற ஆடைகள்.
சாயாஜீ மில்ஸ் நம்பர் 1
பழைய ரயில்வே
ஸ்டேஷனுக்கு எதிரே,
பரோடா.

வாழும் வர்ணனைகள்

8. யோகி சுத்தானந்த பாரதியார்


நிவேதனம்

எங்கும் நிறைவான பரம்பொருளே! மங்கலக் காலையில் மலர் முகம் காட்டு கின்றாய். இளமனத் தென்றலில் இன்பக் குழல் ஊதுகின்றாய். அன்பு அன்பு என்று சோலைக் குயிலில் அகவுகிறாய். பரம்பொருளே! உலகெலாம் உனது திருக்கோயில். உயிர்த் தொகுதி உனது திருமேனி. வாழ்க்கை உனது திருவிளை யாடல். நீ வேறு யாம் வேறின்றி உள் ளும் புறமும் உன்னைக் கலந்த அந்தப் பேரின்பத்தில் உனது பாராலயத்தில் உலாவச் செய்தருள்! பரமனே! நீயே உண்மை! நீயே அறிவு! நீயே இன்பம்! நீயே எங்கும், எல்லாம்! சாதி- மத- நிற-தேச-வகுப்பு வேறுபாடுகள் எமது மனத்தை விகாரப்படுத்தாமல் எவரை யும் நினது நடமாடுங் கோயில் என்று காணும் அருள் அறிவை எமக்கு அருள். எமது வாழ்வு இன்பக் கனி குலுங்கி, உயிர்த் தொகுதியாகி விளையாடும் நினக்கே நிவேதனம் ஆகுக.

தமிழ் வளம்

திரு கை நீண்டு அமிழ்து அளிக்கும் தாயன்பு உடைய தனி மொழியே தமிழ். இனிமையே தமிழ். வானையே காகித மாயும், காலத்தையே எழுதுகோலாக வும் கொண்டு எழுதினுற்கூடத் தமிழின் பெருமை இன்னும் விரியும். தமிழ் மொழி தனி மொழி; அருள் மொழி; தெய்வ நிலை தரத்தக்க மொழி.

திருக்குறள்என்றவாடாமலர்அன்றோ தமிழ்த் தென்றலை யூக்கியது. அத்தேன் மலர் என்றும் நாண் மலராய்விளங்குகிறது. அறச் செல்வியின் அந்த நறுமண மலரைக் கண்ணிலொற்றிப்புண் ணியம் எய்தாப் புவி யினர் இல்லை. எந் நாட்டாரும்தம்நாட்டு மணிமொழிகளில் ஆக்கி நுகரும் எந்தெய் வத் தமிழின் சிந்தா மணியான திருக்குற ளைக் கண்டதும் தாய் மொழி அன்பு ததும் பத் தமிழையும், தமி ழரையும், தமிழ் நாட்டையும் எண்ணி னேன். தமிழ் வழியே 'நான் தமிழன்' என்பதால் பெருமை கொள். எல்லாத் தமிழருக்கும் தமிழ் வெறியேற்று. தமி ழர் பெருமை சங்க நூல்களில் பொதிந்து கிடக்கிறது. ஆனுல் சங்கத் தமிழை இக்காலப் பேச்சுத் தமிழர் அறிந்து கொள்ள முடிவதில்லை. தமிழ் தொல் காப்பியரையும், நக்கீரரையும் தாண்டி இளங்கோவையும் மீறிக் கம்பனுக்கு வந்து அவனையும் தாண்டிப் புகழேந் திக்குப் பாய்ந்து பிறகு தாயுமானுருக்கு வந்து, வள்ளலாரின் தெள்ளிய நீரோ டையாகிக் கவிக் குயிலின் எளிமை பெற்று இன்று புதிய மறுமலர்ச்சி நடை தவழுகிறது.



பிருந்தாவனம்

அழகான முல்லை நிலம். மலர்கள் பல நிறப் புன்னகை புரிகின்றன. யமுனை இன்ப அலை வீசித் தவழ்கிறது. ஆக்கள் மடி சுரக்கின்றன. குயில்கள் கண்ணு என்று கூவுகின்றன. இதுதான் பிருந்தாவனம். ஆயர்பாடி கோப கோபியர் வாழும் சிற்றூர். இந்த ஊர் முழுதும் கண்ணன் மயம்தான். தென்றலெல்லாம் அவன் குழலோசை யைப் பருகி வரும். மலர்கள் எல்லாம், 'கண்ணு எம்மை ஆட்டிக் கொள்'— என்று புன்னகை புரிந்து கெஞ்சும். மாடு கன்றுகள் எல்லாம் கோபாலன் குழ லோசையில் மயங்கி நிற்கும். கோபா லர்கள் எல்லாம் அவன் பேச்சே பேசு வார்கள். கோபிகளுக்கு எல்லாம் மனம் அவனிடமே நிலைத்திருக்கும்.

ஆனந்தரங்கப்பிள்ளை

புதுச்சேரி அதல குதலப்படுகிறது. ஆங் கில பீரங்கி எட்டுத் திக்கும் எதிரொலிக் கிறது. புதுவைக் கோட்டையைக் குண் டுகள் பிளக்கின்றன. பிரெஞ்சுக்காரரும் எதிர்க் குண்டுகள் வீசு கின்றனர். ஊரார் குடல் நடுங்கிப் பதறு கின்றனர். தப்பியோட வும் வழி இல்லை.

கோட்டை வாயில்கள் மூடப்பட்டிருந்தன. எங்கும் கொள்ளை. கொள்ளைக்காரர் பணத்தை மோப்பம் பிடித்து வந்து, ''தா பதினாயிரம், இருபதினாயிரம்'' என்று மிரட்டிப் பறித்துச் சென்றனர். தராதவர்களைச் சிறையிட்டனர். பட்டினி போட்டனர். வதைத்தனர். உணவுப் பொருள்கள் எல்லாம் படைகளுக்குப்போய்விட்டன. ஜனங்கள் பசி பசி என்று அலறுகிறார்கள். போர்ப் புரட்சியும் பசிப் புரட்சியும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா? ''கடவுளே கண் பார்'' என்று ஊரார் ஓலமிட்டனர். ஊரைக் காக்க ஓர் உத்தமர் எழுந்தார். தமது தானியக் கோட்டைகளைத் திறந்து விட்டார். அவரே ஆனந்தரங்கப்பிள்ளை.

புது யுகமனிதன்

உலக நாடுகள் முன்னேறும் வேகத்தைப் பாருங்கள். மனித அறிவு பல வகையில் விரிவடைந்து வருகிறது. கி.பி. 1500-ல் இருந்த உலகம் வேறு, புத்தர் கால இந்தியா வேறு. காந்தி கால இந்தியா வேறு. கல்வி முறை, கலை, தொழில், நடை, உடை, பேச்சு, பழக்கம், அனைத்திலுமே உலகம் புதுமை பெற்று வருகிறது. உடலிலும், மூளையிலும், உள்ளத்திலும் திண்மையுள்ளவனே பிழைப்பான். ஒருவனைவிட மற்றொருவன் வல்லவனாகப் பார்க்கிறான். ஜான் ஐந்து மைல் உயரம் பறந்தால் யோசோப்பு மறுநாள் ஆறு மைல் பறந்து காட்டுகிறான். மனிதன் இயற்கையை வெல்லுகிறான். இடத்தையும் காலத்தையும் அடக்கியாள்கிறான்.


நாடக உலகம்

உலகம் அரங்கம், அதில் ஒவ்வோர் உயிரும் ஒரு வினையுடல் தாங்கி நடிக்கிறது. உலகக் காட்சிகளும் படலம் படலமாக மாறுகின்றன. இக்காட்சிக்கு இறைவி இயற்கைச் சக்தி. உலகைச் 'சக்தி விலாசம்' என்பர் புலவர். சக்திநாதனை ஆண்டவன் நடராஜனாகவும், அரங்கநாதனாகவும் எங்கும் விளங்குகிறான். உயிர்களைத் திருமேனியாகப் பூண்டு இறைவன் திருவிளையாடல் புரிகிறான். அவனுடைய ஆடல் ஒரு நொடி நின்றாலும் எல்லாம் சிர்குலையும். ஒவ்வொருவர் உள்ளத்தும் அவன் நடம் புரிகிறான். அதை ஞானிகள் உணருவர். ஆதலின் நாடகக் கலை உள்ளத்தினின்று உலகளாவியது. நான்கும் (அறம், பொருள், இன்பம், வீடு) ஒன்பதும் (நவரசம்) நாடகத்து எய்தும்.

நன்றாக வாரிவிடப்பட்ட ஆரோக்கியமான கூந்தல்



எப்பொழுதுமே கண்ணைக் கவரும்!




கால்கேட் ஹேர் டானிக்கில் லெனோலின் என்ற இயற்கையான கூந்தல் எண்ணெய்களை ஒத்த எண்ணெய் மிகச்சிறந்த முறையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரதி தினமும் கால்கேட் ஹேர் டானிக்கை உங்கள் தலையில் தடவி 3 நிமிடங்களுக்கு வழக்கமாகத் தேய்த்தால் உங்கள் கூந்தல் ஆரோக்கியமாகவும், அடர்த்தியாகவும் வளருவதுடன் நாள் முழுவதும் நேர்த்தியாகப் படிந்திருக்கவும் உதவுகிறது!

லெனோலின் கலந்த **கால்கேட்**
ஹேர் டானிக் உபயோகியுங்கள்!

CHT. G-6

ஆடவர்கள் விரும்புவது!



மெய்மறந்து உறங்குவதே உறக்கத்தின் உல்லாசம்

cali—net காலிகோ மில்ஸ் அஹமதாபாத் இவர்களின்
"காலி-நெட்" மேன்மையான கொசு வலைகள்



கதைக்கு ஒரு

கனிச் சுரங்கம்

கி. ராஜேந்திரன்

புதியதொரு தொடர்கதை எழுதப் போகிறார் ஸ்ரீ அகிலன் என்று ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் கூறக் கேட்டதுமே, எனக்கு உண்டாகி விட்ட மனக் கலக்கம் கொஞ்ச நஞ்சமல்ல.

'வேங்கையின் மைந்த'னுக்காக அவருடன் வெட்டவெளிகளிலும் பொட்டல் காடுகளிலும் சுற்றி அலைந்தும் மலைகளின் உச்சிக்கு ஏறியும் சுரங்கங்களின் ஆழத்துக்கு இறங்கியும், வேளைக்கு உணவு கிடைக்காமலும் நேரத்தில் படுத்து உறங்காமலும் நான் பட்ட அவஸ்தைகளை அதற்குள்ளாக மறந்துவிட முடியுமா?

ஆனால் சமூகக் கதைதான் எழுதப் போகிறார் என்பது தெரிய வந்ததும் பயம் தெளிந்து பெருமூச்சு விட்டேன். சமூகக்கதை ஒன்றினை உருவாக்கச் சுற்றுப் பயணத்துக்கு அவசியமிராது என்று எண்ணி நிம்மதியடைந்தேன்.

நொடிப் பொழுதில் நிம்மதியைக் குலைத்து விட்டார் ஸ்ரீ அகிலன். ''புதிதாக எழுதத் தொடங்கும் 'புது வெள்ளம்' வாசகர்களுக்குப் பழக்கமான பழைய பாதையிலேயே சென்று அவர்கள் பொறுமையைச் சோதிப்பதாக அமைந்துவிடக் கூடாதல்லவா?'' என்று ஆரம்பித்தார்.

'வந்தது ஆபத்து!' என்று நினைத்துக் கொண்டேன். இருந்தாலும் தைரியமாக, ''புதுமையைப் புகுத்துங்களேன், தாராளமாக'' என்று அபாரமான யோசனையொன்றைச் சொல்லி வைத்தேன்.

''முகத்தில் கரியைப் பூசிக் கொள்ள வேண்டியிருக்குமே என்றுதான் பார்க்கிறேன்'' என்றார் அவர்.

''என்ன சொல்லுகிறீர்கள்?''

''புதுமையைப் புகுத்து முன்னர் நாம் நிலக்கரிச் சுரங்கங்களுக்குள் புக வேண்டுமென்கிறேன். அப்போது நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கரியைப் பூசிக் கொள்ளத்தானே வேண்டும்?''

''அதுதானே பார்த்தேன்!'' படபடத்த என் இதயம் நிதானமடைந்தது. நாவலைப் படிக்கப் போகும் வாசகர்களின் முகம் பொலிவு பெறுவதாயிருந்தால் என்னதான் செய்யக் கூடாது?

கிளம்பி விட்டோம் சிங்கரேணிக்கு.

ஃ ஃ ஃ

விண்ணை முட்டும் மலைகள், அம்மலைகளை வளமிக்கதாய்ச் செய்யும் வனங்கள், வனங்களில் வளைய வரும் விலங்குகள், விரைந்து பாயும் நதிகள், வண்ண வண்ண மலர்கள், தண்ணென்றிருக்கும் சோலைகள், வண்டுலவும் பூம்பொழில்கள், வானில் திரியும் பறவைகள்—

இதுதான் சிங்கரேணி; ஒரு சிருங்கார பூமி.

புராண காலத்தில் இந்தக் கானகத்தின் வழியே வந்திருக்கிறான் இராமன். ஆனால் ஆரண்யத்தின் இயற்கை எழிலில் லயிக்கும் மனமில்லை அவனுக்கு. குயிலும் கரும்பும் செழுந்தேனும் குழலும் யாழும் கொழும்பாகும் அமிழ்தும் அமுதும்கூடச் சுவையற்றவையாகச் செய்யும் சீதையின் இன்மொழியைக் கேட்க இயலாமல் போனதால் அவன் ஏங்கிக் கொண்டிருந்தான்.

சோர்வை நீக்கி அவன் உள்ளத்துக்குப் புத்துணர்ச்சி அளிக்கும் பாக்கியத்தை இக் காட்டில் வசித்த ஒருத்தி பெற்றாள். அவன் பசி தீர்க்கும் ருசி மிக்க பழங்களைத் தரும் பெரும் பேறு பெற்றது இந்த வனம்.

இராமனை வரவேற்று உபசரித்த சபரி, கானகத்தின் கனி வகைகளைச் சுவைத்துப் பார்த்து அவனுக்கு வழங்கினாள். அத்துடன் சுக்ரீவன் வசிக்கும் இடத்துக்குச் செல்லும் மார்க்கத்தையும் சுட்டிக் காட்டினாள்.


சுக்ரீவனுள்ள இடத்துக்குச் செல்லும் வழியையா சொன்னாள், சபரி? இல்லை! முக்தி அடைவதற்குரிய வழியையே காண்பித்துவிட்டாளாம்! யாருக்கு? பரம்பொருளான இராமனுக்கு!

சபரியின் சொற்கள் அவனுக்கு இவ்வாறு தொனிக்க வேண்டுமென்றால் திருவை இழந்து நிற்கும் சுடர்மணித் தடங்களன்ன தோளினது தவிப்பை நம்மால் நன்றாக உணர முடிகிறது. இது கம்ப சித்திரம்.

சபரியின் வழி வந்தவர்கள் இன்றும் சிங்கரேணியில் வாழ்வதாகவும் கோயா எனப்படும் ஆதிவாசிகளே அவர்கள் என்றும் சொல்கிறார்கள்.

இராமன் புசிப்பதற்கு ஏற்றவையல்ல எனக் கருதிச் சபரி எறிந்து விட்ட பழங்களானாலும் மகாபக்தையான அவளது புனிதக் கரங்களாலேயே பறிக்கப்பட்ட அவை பயனற்றவை







யாகப் போய் விடுமா? பூமியின் ஆழத்தில் புதைந்து போய் இன்று ஆயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்கும் நிலக்கரியாக விளங்குகிறது என்று சொன்னால், நம்புகிறவர்கள் நம்பட்டும்; நம்பாதவர்களுக்கு வேறு கதை இருக்கிறது!

நிலக்கரியைப் பற்றிய உண்மையான விஞ்ஞானக் கதையை விவரிக்குமாறு ஸ்ரீ பிரதான் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களின் ஒரு தொகுதிக்குத் தலைவர் அவர். ஒரு சுரங்கத்தினுள் இறங்கிப் பார்ப்பதற்காக நாங்கள் காரில் ஏறிச் சென்று கொண்டிருந்தோம்.

''பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட ஒரு நில அதிர்ச்சி காரணமாகப் பூமி பிளந்து பிரம்மாண்டமான கானகங்கள் புதையுண்டு போயின. காலம் காலமாக அம்மரங்கள் அழுந்திக் கிடப்பதால் கருகிக் கெட்டிப்பட்டு நிலக்கரியாக மாறின'' என்றார் அவர்.

''நிலக்கரியே இன்னும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் புதையுண்டு கிடந்தால் வைரக் கற்களாக மாறுமாமே?''

''ஆமாம்; ஆனால் அதுவரை பொறுத்திருக்க மனிதனுக்குப் பொறுமை ஏது?''

உண்மைதான், நெய்வேலியில் உள்ள பழுப்பு நிலக்கரி அசல் நிலக்கரியாக மாறும் வரையில் இன்னும் சில நூற்றாண்டுகள் தாமதிக்கக்கூட மனமில்லையே நமக்கு?

அங்கேயுள்ள நிலக்கரிப் படுகையைக் கண்டுபிடித்த கதையைக் கூற ஆரம்பித்தார் ஸ்ரீ பிரதான்.

''பத்ராசலம் கோயிலுக்குச் சில யாத்திரிகர்கள் சென்று கொண்டிருந்தார்கள். காட்டு வழியே போகையில் இருள் கவிந்தது. உணவாக்கி அருந்தவும் துஷ்ட மிருகங்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் சுள்ளிகளைப் பொறுக்கி வந்து நெருப்பு மூட்டினார்கள்.

''பின்னர் பேச்சு சுவாரஸ்யத்தில் சோற்றுப் பானையை மறந்து போனார்கள். திடீரென்று பானை உருண்டு விழும் சத்தம் கேட்டது. துணுக்குற்றுத் திரும்பியவர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பானையைத் தாங்க உபயோகப்பட்ட மூன்று கருங்கற்களுள் ஒன்று எரிந்து சாம்பராகிப் போய்ப் பானை சரியக் காரணமாயிற்று. மற்ற இரண்டும் செங்கனலாகிக் கொழுந்து விட்டன.

''பாறைகள் பற்றி எரிந்து அவர்கள் கண்டதில்லை, கேட்டதில்லை. அந்த அதிசயக் காட்சி அவர்களுக்குப் பீதியை அளித்தது. உளறியடித்துக் கொண்டு ஓடினார்கள். எதிரே வந்து கொண்டிருந்தார் ஒரு கிறிஸ்துவப் பாதிரி. அவரிடம் அவசரம் அவசரமாக விஷயத்தை விளக்கி விட்டுத் திரும்பிப் பாராமல் ஓடிப் போய்ப் பத்ராசலம்வாழ் இறைவனிடம் தங்கள் பாபங்களுக்காக முன்னெக்காட்டிலும் தீவிரமாக மன்னிப்புக் கோரிப் பளார் பளாரென்று ஓங்கிக் கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள்!

''பாதிரி, சுடர் விட்டெரியும் அப்பாறைகள் உண்மையில் நிலக்கரியாக இருக்கும் எனச் சந்தேகித்தார். அரசாங்கத்துக்குச் செய்தி தெரிவித்தார்.

''இதற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்-1871ல்- பூமி சாஸ்திரத்தில் நிபுணரான டாக்டர் கிங் என்பவர் இங்கு நிலக்கரிப் படுகை இருப்பதாய் ஆராய்ந்து அறிந்தார்.''

''நிலக்கரிப் படுகை இருந்தால் போதுமா? லாபகரமான முறையில் தோண்டி எடுக்கும் அளவுக்கு நிலக்கரி உள்ளதா என்பதை எப்படிக் கண்டறிவீர்கள்?''


''பூமி மட்டத்துக்கு மேலேயே காணப்படும் ஒரு விதமான தொன்மையான பாறைகள் நிலக்கரி அப்பிரதேசத்தில் இருக்கிறதென்பதற்குச் சாட்சி கூறுகின்றன. அவ்விடத்தில் அகலக் குறைவான, ஆனால் ஆழமான துவாரம் போடுவோம் (test bore). அதிலிருந்து எடுக்கப்படும் 'ஸாம்பிளை' ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவோம்.''


''ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்; அப்படித்தானே?'' என்றேன் நான்.

இதற்குள் மோட்டார் ஒரு கட்டடத்துக்கு எதிரே வந்து நின்றது.

''வாருங்கள்'' என்று அழைத்து விட்டு முன்னால் நடந்தார் ஸ்ரீ சோமராஜு. சிங்கரேணி நிலக்கரிக் கம்பெனியின் சார்பில் தொழிலாளர்களுக்காக இரு மொழிகளில் பத்திரிகைகள் நடத்திக் கொண்டிருக்கிறார் இவர்.

அந்தச் சுரங்கத்தின் மானேஜராகிய ஸ்ரீ பாய் அவர்கள் எங்களுக்கு அறிமுகமானார்.





'விளக்கு அறை'க்குள் எங்களை அழைத்துப் போனார் ஸ்ரீ பாய். அங்கே ஷெல்புகளில் வரிசை வரிசையாக விளக்குகளும் அவற்றை இயக்கும் பாட்டரிகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு தொழிலாளியும் சுரங்கத்துக்குள் இறங்கு முன்னர் இந்த அறைக்கு வந்து தன் விளக்கை எடுத்துக் கொண்டு போவான் என்று விளக்கினார் அவர்.



"நாளா வட்டத்தில் பாட்டரிகள் சக்தி இழந்து போகாதா?"

"பாட்டரிகள் அன்றாடம் புதுப்பிக்கப்படுகின்றன. வேலை முடிந்ததும் தொழிலாளி இங்கு திரும்பி வந்து குறிப்பிட்ட இடத்தில் பாட்டரியைப் பொருத்தி வைத்து விட வேண்டியதுதான். உடனே இதோ, மேலே உள்ள இந்த 'சார்ஜர்'கள் தாமாகவே இயங்கத் தொடங்கி பாட்டரிகளுக்குப் புது சக்தியை அளிக்கின்றன!"

"ஓகோ! அதனால் தொழிலாளி காரியமாக இருக்கும்போது திடுதிப்பென்று விளக்கு அணைந்து போக வழியே இல்லையாக்கும்; தேவலையே!" என்றேன்.

"என்ன தேவலையே என்று மெதுவாகச் சொல்கிறீர்கள்! நாங்கள் இந்த நவீன முறையைக் கையாளத் தொடங்கிய பிறகுதான் உங்கள் சென்னைப் பட்டணத்தில் இவ்விளக்குகளை உற்பத்தி செய்யும் 'ஓல்ட்ஹாம்ஸ்' கம்பெனியாரின் தொழிற்சாலையே உருவாகியிருக்கிறது ஸார்!" என்றார் ஸ்ரீ ராமச்சந்திரன், பெருமிதத்துடன்.

"உங்கள் சென்னைப் பட்டினம் என்ன, உங்கள்? நீங்கள் எங்கிருந்து வருகிறீர்களாம்?" என்று கேட்டேன்.

"தமிழ் நாட்டிலிருந்துதான். என்றாலும் சிங்கரேணியில் முப்பத்தைந்து வருஷங்களாக வாழ்ந்து வருகிறேன்...." என்று சமாதானம் சொல்ல முற்பட்டார் அவர்.

ஸ்ரீ ராமச்சந்திரன் பெருமைப்படுவதில் ரொம்ப நியாயம் உண்டு. சிங்கரேணி நிலக்கரிக் கம்பெனியில் குமாஸ்தாவாக வேலைக்கு அமர்ந்தவர் அவர். அந்தக் கம்பெனி பல கரங்கள் மாறி, படிப்படியாக வளர்ந்து, இன்று இந்தியாவிலேயே மிகப் பெரிய நிலக்கரிக் கம்பெனிகளுள் ஒன்றாக விளங்குவதை அருகிலிருந்து பார்த்திருக்கிறார். அதன் வளர்ச்சியில் பங்கு பற்றித் தாமும் வளர்ந்திருக்கிறார். இப்போது அந்த ஸ்தாபனத்தின் ஜெனரல் மானேஜருக்கு அந்தரங்கக் காரியதரிசியாகப் பணியாற்றி வருகிறார்.



பாட்டரி மின் விளக்குகளைப் பயன்படுத்தும் முறையைப் பெரிய அளவில் இந்நாட்டில் முதன் முதலில் அமுலுக்குக் கொண்டு வந்தவர்கள் சிங்கரேணி கம்பெனியார்தானாம். அதற்கு முன்னால் நெருப்புச் சுடருடன்கூடிய ஏதாவது ஒருவகை விளக்கைத்தான் எடுத்துப் போவார்களாம்!

பேசியவாறே நாங்கள் ஒரு சிறு அறையை அடைந்தோம்.

"எங்கே! இதில் ஒரு கையெழுத்துப் போடுங்கள், பார்க்கலாம்" என்ற குரல் கேட்டதும், 'பேஷ்! ஆட்டோகிராப் கேட்கு மளவுக்கு மதிப்பு வைத்திருக்கிறார்களே நமக்கு' என்று எண்ணியவாறே பையிலிருந்த பேனாவைப் பெருமிதச் செருக்குடன் உருவினேன்.

என் பக்கமாக நீட்டப்பட்ட காகிதத்தில் ஏதோ அச்சடித்திருந்தார்கள். பேனா மீண்டும் பைக்குள்ளேயே புகுந்து கொண்டது. படிக்க ஆரம்பித்தேன். 'இந்தச் சுரங்கத்தினுள்ளே இறங்கிச் செல்லும்போது ஏற்படக் கூடிய விபத்துக்களுக்குக் கம்பெனி நிர்வாகிகள் ஜவாப்தாரிகளல்ல. உயிர்ச் சேதமோ உடல் சேதமோ நேர்ந்தாலும் கம்பெனி நிர்வாகிகள் பொறுப்பேற்கத் தேவையில்லை என்பதனை ஒப்புக் கொள்கிறேன்' என்று எழுதியிருந்தது.

காகிதத்தை அகிலனிடம் நீட்டினேன். 'எல்லாம் இந்த மனிதரால் வந்த வினை! துணிவு இருந்தால் அவரே முதலில் கையெழுத்துப் போடட்டுமே!'


அகிலன் அதனை வாங்கிப் பார்த்தார்; படித்தார். உரலில் தலையைக் கொடுத்தவன் உலக்கைக்குப் பயந்தால் கட்டுமா? கையெழுத்துப் போட்டு விட்டார், தைரியமாக!

நானும் போட்டேன். வேறென்ன செய்ய? மனுஷனுடன் என்னவோ கிளம்பி வந்தாகி விட்டது; கஷ்டமோ நஷ்டமோ அனுபவித்துத்தானே தீர வேண்டும்? என்றாலும் கை இலேசாக நடுங்கத்தான் செய்தது.

மேஜை மீதிருந்த இரும்புத் தொப்பிகளை ஆளுக்கொன்றாக அணிந்து கொண்டோம். கையில் ஒரு டார்ச் லைட்டையும் எடுத்துக் கொண்டு நடந்தோம்.

சற்றுத் தூரத்தில் பயங்கரப் பூதமொன்று அகலமாக வாயைத் திறந்து கொண்டு நின்றது. பெரிய பெரிய பற்கள் மட்டும் பளபளவென்று மின்னி ஒளி சிந்தின. பூமி மட்டத்திலிருந்து சரிவாகக் கீழே இறங்கிச் செல்லும் மின்சார விளக்குகளுடன் கூடிய ஒரு சுரங்கப் பாதைதான் அது! அப்பாதையில் அமைக்கப்பட்டிருந்த தண்டவாளங்களில் ஓடும் சின்னஞ்சிறிய வண்டி ஒன்று எங்களுக்காகக் காத்திருந்தது. ஏறி அமர்ந்தோம். அதனை இழுத்துப் பிடித்து நிலையாக நிற்க வைத்த கம்பிக் கயிற்றை இலேசாகத் தளர்த்தி விட்டவுடன் வண்டி மெல்லக் கீழே இறங்கத் தொடங்கியது. கிணற்றுக்குள் குடத்தைச் செலுத்தித் தண்ணீர் மொள்ளச் சகடையையும் கயிற்றையும் பயன்படுத்தவில்லையா நம் வீட்டுப்பெண்கள்? அதுபோலத்தான் இதுவும். ஆனால் இந்த மாபெரும் சகடையை இயக்கியது ஓர் இயந்திரம். அங்கே சகடையை லாகவமாக உருள வைப்பது வளை ஒலிக்க இடை ஒடியச் செயல்படும் மென்கரங்கள்.

சரிவிலே வண்டி நகருகையில், ஒரு சந்தேகத்தை வெளியிட்டேன்: "ஏன் ஸார்!



எழிலுக்கு மெருகிழைக்க... '''ஹேஸலின்' ஸ்னோ''... சுருக்கம், பரு, மாசு யாவும் மறையும், மென்மை மிளிரும்.

மேனிக்கு மென்மையாக மெருகிடுவதிலே தன்னிகரற்று விளங்குவது '''ஹேஸலின்' ஸ்னோ'' உன்னதமான மென்மை...எண்ணெய்ப்பசையின்மை...உல்லாசமூட்டும் தன்மை. உங்கள் சருமத்திற்குப் பட்டுப்போன்ற மழமழப்பு...தென்றல்போன்ற அணைப்பு...ஒளிதவழும் வனப்பு. காலையிலே...மாலையிலே...இரவினிலே...எவ்வேளையிலும் இனிதே பூசிக்கொள்ளலாம். '''ஹேஸலின்' ஸ்னோ'' எழிலுக்குப் பாதுகாப்பான ஸ்னோ...கச்சிதமாகப் பவுடர் படிவதற்கு வாகான ஸ்னோ...நெகிழ நெகிழ, மென்மை தவழ உங்கள் சருமத்தைப் பொலிவுடன் போற்றும் ஸ்னோ. '''ஹேஸலின்' ஸ்னோ''– அரம்பையர் குலத்தின் பரம்பரை அழகுசாதனம்.

'''ஹேஸலின்' ஸ்னோ'' 'பர்ரோஸ் வெல்கம்' தயாரிப்பு.

பூமிக்கடியில் செங்குத்தாக நுறங்கிச் செல்ல வேண்டியிருக்கும் என்றல்லவா நினைத்தேன்?''

''அத்தகைய சுரங்கங்களும் இங்கேஉண்டு'' என்று பதில் கிடைத்தது. அவற்றில் 'லிப்டி'ல் நின்று கீழே இறங்கிப் போக வேண்டும். ஆனால் இப்போதெல்லாம் இந்தச் சரிவு முறையைத்தான் பின்பற்றுகிறோம். பல விதங்களிலும் இது சௌகரியமாக இருக்கிறது.''

ஓரளவு வரை வண்டி கீழே இறங்கிப் போய் நின்று விட்டது. ''இனி நடக்கத்தான் வேண்டும்'' என்றார் ஸ்ரீ பிரதான்.



சிலுசிலு வென்று முதுகில் காற்று வீசியது. ''அடே! சுரங்கத்துக்குள் எப்படிக் காற்று வருகிறது? எங்கிருந்து வருகிறது?'' என்று கேட்டேன் வியப்புடன்.

''ஆகா! அதுதான் ஸார், ரொம்ப முக்கியமான விஷயம்!'' என்றார் சோமராஜு. ''சுரங்கத்தைத் தோண்டி விட்டால் போதுமா? அங்கு நெற்றி வியர்வை கரியில் சொட்டப் பாடுபடுபவர்களுக்குக் காற்றோட்டம் இருக்க வேண்டாமா? தூய்மையான காற்றில்லாமல் கரிப் புழுதியில் உழன்று கொண்டிருந்தால் அவர்கள் தேக ஆரோக்கியம் கெட்டுவிடாதா? ஒவ்வொரு சுரங்கத்துக்கும் இரண்டுபாதைகள் உண்டு. ஒரு பாதையுடன் ஒட்டினாற் போல நில மட்டத்துக்கருகில் மிகப் பெரிய மின்சார விசிறியை வைத்திருப்போம். அது சுரங்கத்திலுள்ள அசுத்தக் காற்றை வெளியேற்றிக் கொண்டே யிருக்கும். அப்போது சுரங்கத்திலுன் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப மற்றொரு பாதை வழியே தூய காற்று தானாகவே உள்ளே நுழையும்.''

''ஓ! சினிமா தியேட்டர்களில் சுவரின் உச்சியில் வெப்பு நிறத்தில் 'எக்ஸாஸ்ட்' விசிறி (Exhaust Fan) என்று வைக்கிறார்களே, அதைப் போலவா?''

''ஆமாம்; அதே தத்துவம்தான். ஆனால் இந்த விசிறி அளவில் மிகப் பெரியது.''

புரிந்தது என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினேன். அந்தக் கும்மிருட்டில் என் தலையசைப்பை அவர்கள் காண முடியாது என்பது நினைவுக்கு வரவே ''புரிந்தது'' என்றேன் உரக்க!

கீழே கீழே சரிவான பாதைகளில் சென்று கொண்டே இருந்தோம். வலப்புறமும் இடப்புறமும் மாறி மாறித் திரும்பி நடந்தோம். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. எத்தனை திருப்பங்கள்! எத்தனை பாதைகள்!



''இது சுரங்கமில்லை சார்! ஒரு குட்டி நகரம்! பாதாளப் பட்டணம்!'' என்றேன்.

''ஒரு வகையில் நீங்கள் கூறுவது வாஸ்தவம்தான். வீடுகள், கடைக்கண்ணிகள் ஏதுமில்லை என்றாலும் இந்தச் சிறு சுரங்க நகரில் குறுக்கேயும் நெடுக்கேயும் செல்லும் பத்து அடி அகலச் சாலைகள் முப்பத்தைந்துக்கும் அதிகமாக உள்ளன.''

சென்னை ஜார்ஜ் டவுனிலுள்ள சந்து பொந்துகளின் மத்தியில் பட்டிக்காட்டான் ஒருவனைக் கொண்டு வந்து விட்டால் அவன் என்ன செய்வான்? திக்குத் திசை புரியாமல் தவிப்பான்; இல்லையா? அதே போலத்தான் இருந்தது எங்களுக்கும். ஆனால் எங்களிருவரது நிலையைக் காட்டிலும் அந்தக் கிராமவாசியின் பாடு ரொம்பவும் தேவலை என்றுதான் சொல்ல வேண்டும். 'ஜே ஜே' என்றிருக்கும் அப்பகுதியில் மனித நடமாட்டத்தையும் ஆரவாரத்தையும் கண்டும் கேட்டும் அவன் தெம்பு பெறலாம். ஆனால் இங்கேயோ....

'இந்த அதளபாதாள லோகத்தில் ஜனசஞ்சாரமற்ற பிரதேசத்தில் காரிருளில் எங்கள் இருவரையும் அழைத்து வந்த ஒரு சிலருக்கும் வழி தெரியாமல் போய் விட்டால்?' இந்த எண்ணம் எழவே, 'கப்'பென்று வயிறு சுருங்கிக் கொண்டது!

''ஏன் ஸார்! உங்களுக்கு வழி தெரியுமல்லவா?'' என்று கேட்டேன்.

''யார் என்னையா கேட்கிறீர்கள்?'' என்றார் ஸ்ரீ 'ராமச்சந்திரன், 'இப்படி ஓர் அசட்டுக் கேள்வியைப் போடலாமோ?' என்கிற மாதிரியில். ''சுரங்கங்களுக்குள் நான் இறங்குவதே இதுதான் முதல் தடவை ஸார்! நான் ஆபீஸில் 'பைல்'களுடன் போராடுகிறவன். இங்கே எங்கே வந்தேன்? ஏதோ நீங்கள் இருவரும் வந்திருப்பதால் நானும் பின்னோடு...''

எனக்குப் 'பகீர்' என்றது.

''மிஸ்டர் பிரதான்! சரியான பாதையில் தானே செல்கிறோம்?''

''எனக்கு எப்படித் தெரியும்? இந்தச் சுரங்கத்தின் மானேஜர் மிஸ்டர் பாய். அவர்களைத் தான் கேட்க வேண்டும்!''

இலேசாகத் தலையைச் சுற்ற ஆரம்பித்தது எனக்கு! அதே சமயத்தில் எங்கோ வெகு தூரத்திலிருந்து ஒலிக்கும் இடியோசையைச் செவியுற்றேன்.

''வெடி மருந்து வைத்து நிலக்கரிப் பாறையைத் தகர்க்கிறார்கள்!'' என்றார் சோமராஜு.

''வெடி மருந்தா?'' கையெழுத்துப் போட்ட நினைவு வந்தது எனக்கு! வயிற்றில் புளியைக் கரைத்தது!

'சதக்'கென்று ஒரு சத்தம். அகிலன் அவர்களுடைய கால் கருஞ் சேற்றில் புதையுண்டு போயிற்று. ''ஒன்றுமில்லை; ஒன்றுமில்லை'' என்று கூறி மேலே நடந்தார் அவர்.

''எதற்கும் ஜாக்கிரதையாகப் பார்த்து நடந்து செல்லுங்கள்'' என்றேன். அடுத்த கணம் எனது பார்வையை இழந்தேன். திடுக்கிட்டேன்!

எதிரே சில கொள்ளிவாய்ப் பிசாசுகள் தோன்றின; இங்குமங்கும் ஓடின; நர்த்தனமாடின!

'சீ! சீ! இது என்ன அசட்டுத்தனம்' என்று பகுத்தறிவு இடித்துக் காட்டவே கண்களை ஒரு முறை இறுக மூடித் திறந்து உற்று நோக்கினேன்.

(அடுத்த இதழில் முடியும்)



பரிசீலனைக்குப் பின் விநியோகம்

மோட்டார் உறுப்புகள் உற்பத்தியாளர் நம் நாட்டில் பலர். உறுப்புகள் விநியோகத்தை மேற்கொள்ளுமுன், நாங்கள் ஒவ்வொரு உறுப்பையும் தரம், நயம், உழைப்பு முதலியவற்றிற்கு பரிசீலனை செய்து, பின்புதான் ஏற்றுக்கொள்கிறோம். இக்காரணத்தினால்தான், "டிவிஎஸ் விநியோகிக்கும் உறுப்பு, உழைப்பில் சிறந்தது" என்பது பழமொழிபோல் உலவுகிறது.

நாங்கள் விற்பனை செய்யும் இந்தியாவில் தயாரித்த உறுப்புகளில் சில:

'ஸ்டாண்டர்ட்' பாட்டரி; 'அல்லெட்' பல்புகள்; 'பெரோடோ' பிரேக் லைனிங்; 'பென்னர்' பான் பெல்டுகள்; 'டபின் லேப்' சேஸிஸ் பாகங்கள்; 'எச் அண்ட் டி' பிரேக் டிரம்கள்; 'மைகோ' பியூயல் இஞ்செக்ஷன் பாகங்கள்: 'டிரான்கோ' (இந்தியன்) வால்வுகள்; 'கானரா' ஸ்பிரிங், லீவுகள்; QHL - RANE டை ராடு எண்டுகள் ; 'ஹெல்லா' ஹாரன்கள் (இந்தியன்)

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட்.
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்

TVS

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்-செகந்திராபாத்

மதராஸ் ஆட்டோ சர்விஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்

JWT/TVS-1499A



புது வெள்ளம்

அத்தியாயம் இருபத்தைந்து
ஏமாற்றுப் பயிற்சி



இயற்கையழகும் செயற்கை அழகும் நிறைந்துள்ள சென்னை நகரத்தில் வாழ்பவர்கள் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அதிர்ஷ்டசாலிகள். நேர்மையாளனின் நெஞ்சு போல் அவர்களுக்கு விரிந்து பரந்து விசாலமானதொரு கடற்கரை கிடைத்திருக்கிறது. அதன் மணலுக்கும், காற்றுக்கும், கதிரொளிக்கும் யாருமே காசு கொடுக்க வேண்டாம். ஏழைக்கு மாளிகைவாசி முதல், எலிவளைக்குள் வாழ்பவர் வரையிலும், அங்கு எல்லோருக்கும் ஒரே வித வரவேற்புத் தான். சமதர்மம் என்று சொல்கிறார்களே, அது அந்த ஓர் இடத்தில்தான் உண்மையாகவே நிலவிக் கொண்டிருக்கிறது.

கடற்கரையில் முருகையனிடம் நெடு நேரம் பேசிக் கொண்டிருந்த சுந்தரம் வீட்டுக்கு அவனையும் அழைத்துக் கொண்டு கிளம்பும் சமயத்தில் ஒரு பிச்சைக்காரனின் பாட்டைக் கேட்டுத் திரும்பினான்.

''கல்லைத்தான், மண்ணைத்தான், காய்ச்சித்தான், குடிக்கத்தான் வழி செய்தானோ? கடவுள் வழிசெய்தானோ?'' என்று ராகம் இழுத்துக்கொண்டே வந்து சுந்தரத்திடம் கையை நீட்டினான் பிச்சைக்காரன்.

''இந்தாப்பா நிறுத்து! காசைக் கொடுக்கிறேன். இனிமேல் இந்தப் பாட்டைப் பாடாதே!'' என்று சொல்லி ஒரு காலணாவை எடுத்து நீட்டினான் சுந்தரம். கொடுத்து விட்டுத் தானாகவே உல்லாசமாகப் பதில் பாட்டு பாடத் தொடங்கினான்.

''கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிப்ப தென்றால், அதையும்தான், கடையில்தான் வைத்துத்தான் காசு கேட்பான்! மனிதன் காசு கேட்பான்!'' பாடி முடித்துவிட்டு, "போடா, போ! கடவுளை ஏன் நொந்துக்கிறே?'' என்று சொல்லிக் கடகடவென்று சிரித்தான் சுந்தரம்.

சுந்தரத்தின் கவலையற்ற போக்கை நினைத்தவுடன் முருகையனுக்கு அவனுடைய ரயில் நண்பன் குருசாமியின் நினைவு வந்தது. ''அண்ணா! உங்களைப் பார்க்கும்போது எனக்கு நடிகன் குருசாமியின் நினைவு வருகிறது. அவனைக் கூட எனக்குத் தெரியும்'' என்றான்.

''நடிகர்கள் இரவு நேரத்தில் மேடையில் நடிக்கிறார்கள். இந்தப் பட்டணத்தில் பலர் பட்டப் பகலிலேயே பகல் வேஷம் போட்டுக் கொண்டு திரிகிறார்கள். நானும் ஒரு நடிகன்தான், முருகையா! வீட்டுக்கு வந்து பார், எல்லாம் விளங்கும்!''

முருகையனின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு கடற் கரையிலிருந்து கிளம்பிப் பல சந்து பொந்துகளைத் தாண்டி நடந்தான் சுந்தரம். திருவல்லிக்கேணியைச் சேர்ந்த ஒரு சின்னஞ் சிறு தெருவுக்குள்ளிருந்த பெரியதொரு வீட்டுக்குள் நுழைந்தார்கள் அவர்கள். மிக மிகப் பழமையான தோற்றமுள்ள மாடி வீடு அது.

'என்ன இருந்தாலும் அண்ணா சொன்னதுபோல் அரண்மனை மாதிரி வீடுதான்' என்று திருப்திப்பட்டுக் கொண்டான் முருகையன்.

வீட்டு முகப்பிலிருந்த ஓர் அறை பூட்டிக் கிடந்தது. அதைத் திறந்துவிட்டு முருகையனை ஒரு நாற்காலியில் உட்காரச் செய்தான் சுந்தரம்.



தன்னுடைய உடைகளைக் கழற்றிக்கொண்டே,

''முருகையா, உனக்குச்சரித்திரப்பாடம் நினைவிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''ஏன்?''

''இந்த வீடு சரித்திர காலத்தைச் சேர்ந்த வீடு. சென்னப்ப நாயக்கனுக்கு இந்தப் பட்டணம் சொந்தமாக இருந்த காலத்தில் இதை யாரோ கட்டியிருக்கிறார்கள். அடுத்தாற்போல் கிளைவ் பிரபு இங்கே இருந்தானே, அந்தக் காலத்தில் கடைசியாக இதை ரிப்பேர் செய்து வெள்ளை அடித்திருக்கிறார்கள். பிறகு யாருமே இதில் கை வைக்கத்

துணிந்ததில்லை; வீட்டுச் சொந்தக்காரருக்கே, எங்கே இதில் வெள்ளை யடிக்கப் போனால் சுவர் கீழே விழுந்து விடுமோ என்ற பயம்!''

சிரிக்காமல் சுந்தரம் பேசிக்கொண்டே முதலில் தன்னுடைய விலை உயர்ந்த கோட்டைக் கழற்றி மாட்டினான். கோட்டுக்குள்ளே யிருந்த சட்டையில் இரண்டு இடங்களில் ஒட்டுப் போட்டுத் தைத்திருந்தது. அதையும் கழற்றினான். உள்ளே கிழிந்த பனியன்.

திடுக்கிட்டு விழித்தான் முருகையன்.


''நடிகன் சுந்தரத்துக்குக் கோட்டு; குமாஸ்தா சுந்தரத்துக்குப் பனியன்'' என்றான் சுந்தரம். ''கோட்டையும் குழாயையும் மாட்டிக் கொண்டு ஆங்கிலத்தில் எதையாவது உளறிக் கொட்டினால்தான் இந்த ஊரில் சுமாராய்க் காலம் தள்ள முடிகிறது. என்ன செய்யச் சொல்கிறாய்?''

உடை மாற்றிக் கொண்டவுடன் வீட்டின் உட்புறம் முருகையனை அழைத்துக் கொண்டு சென்றான் சுந்தரம். மூன்று குடிகளைத் தாண்டி நான்காவது குடியாகக் கடைசியில் இரண்டு அறைகளில் அவனுடைய குடித்தனம் நடந்தது. நண்பனைப் பக்கத்து அறையில் இருக்கச் சொல்லி விட்டுப் பயந்தபடியே அடுப்படிக்குள் நுழைந்தான் சுந்தரம். அவனுடைய மனைவி மீனாட்சி பால்காரனுக்குக் கடன் கொடுப்பதற்கு அவன் பத்து ரூபாய் மொத்தமாக வாங்கிக் கொண்டு வரவில்லை யென்பதற்காக,





சோழவந்தான் பிராகுதார் திரு சிவராம சுப்பிரமணிய அய்யரின் புதல்வி சௌ. நீலாம்பாளுக்கும் திரு வேங்கடசுப்பிர மணியனுக்கும் விவாகம் நடந்தது.



திருத்துறைப்பூண்டி திரு ஏ. கே. சந்திர சேகரன் செட்டியார் அவர்களின் புதல்வி சௌ. ஹேமலாவுக்கும் திரு ராஜசேகர னுக்கும் திருமணம் நடைபெற்றது.

அவனையே சுடச்சுடக் காய்ச்சி எடுத்து விட்டாள்!

பிறகு இருவருக்குள்ளும் கசமுச வென்ற குரலில் ஏதோ ரகசியப் போர் நிறுத்த உடன்படிக்கை நிறைவேறியது. சுந்தரத்தின் சிரிப்பொலியும், சிங்காரப் பேச்சுக்களும் கேட்டன. சற்று நேரம் கழித்து, மிகவும் அடக்க ஒடுக்கத்தோடு சுந்தரத்தின் பின்னால் வந்து முருகையனுக்குக் கைகூப்பி வரவேற்பளித்தாள் மீனாட்சி. இதமாகச் சிரித்துக்கொண்டு நான்கு வார்த்தைகள் பேசினாள்.

''எல்லாம் இவர் சொன்னார். உங்களுக்கொரு வேலை கிடைக்கிற வரையிலே நீங்க இங்கேதான் தங்கணும். கொஞ்சங்கூட வித்தியாசமாக நினைக்கப் படாது'' என்றாள் மீனாட்சி.

சமையலறையிலிருந்து எழுந்த வேர்வையைக் கூடத் துடைத்துக் கொள்ளாமல், தலையை மட்டிலும் ஒதுக்கி விட்டுக்கொண்டு, வாயும் வயிறுமாக அந்தப் பெண்மணி வந்து நின்று பேசிய காட்சி முருகையனால் மறக்க முடியாத காட்சி. முருகையனின் கண்கள் கலங்கின. மீனாட்சியின் பேச்சில் தொனித்த உண்மையான அன்பு அவன் இதயத்தைத் தொட்டது.

மீனாட்சி உள்ளே போனவுடன், ''என்ன, திடீரென்று கோடையிடி போல் குமுறியவள் இப்படி மாறிவிட்டாளே என்று பார்க்கிறாயா? அது அவள் சுபாவம்'' என்றான் சுந்தரம். ''அவளுக்குக் கையாலாகவில்லையென்றால் கத்துவாள். பிறகு தவிர்க்க முடியாதென்றால் ஒத்துப் போய் விடுவாள். சண்டைகள் போட்டுக்கொள்வதும், சல்லாபங்கள் செய்து கொள்வதும் எங்களுடைய தினசரிக் காட்சி மாற்றங்கள்.''

''உண்மையைச் சொல்கிறேன். என்னை ஒரு நாளைக்குக்கூட உங்களால் வீட்டில் வைத்துப் பராமரிக்க முடியாது. குழந்தை குட்டிகளுள்ள பெரிய குடும்பம்; வருமானமோ பற்றாக்குறை. சிரமப்பட வேண்டாம், அண்ணா!'' என்றான் முருகையன்.

''இதோ பார்! முதலில் உன்னைக் கண்டவுடன் காப்பிச் செலவோடுதான் கைகழுவ நினைத்தேன். ஆனால் விஷயத்தைத் தெரிந்து கொண்ட பிறகு உன்னை விட்டு விட மனமில்லை. ஐந்து பேர்களோடு ஆறுவது பேராக இருந்தால் என்ன குறைந்து விடும்? பேசாமல் நான் சொல்கிறபடி கேள்: நாளைக்கே உன் சாமான்களை எடுத்துக்கொண்டு என் அறைக்கு வந்துவிடு. இல்லாவிட்டால் எனக்குக் கோபம் வந்துவிடும். நீயும் வேலைக்கு வேட்டையாடிப் பார். நானும் பார்க்கிறேன்.''

அவனுடைய 'தங்கை' சாந்தா குழந்தைப் பட்டாளத்துடன் வீடு திரும்பி, அந்தந்த வீட்டுக் குழந்தைகளை அந்தந்த வீடுகளுக்கு அனுப்பி வைத்தாள். சுந்தரத்துக்குப் பெண் குழந்தைகள் இரண்டு; ஆண் குழந்தைகள் இரண்டு. அடுத்தாற்போல் சில மாதங்களில் பிறக்கவிருந்த குழந்தை ஆணோ, பெண்ணோ....!

''சாந்தா இதே வீட்டுக்குள் அடுத்த அறைகளில் தாயாரோடும் தங்கையோடும் குடியிருக்கிறாள். அவள்தான் இந்த வீட்டுக் குடித்தனக்காரர்களின் பொதுநலத் தொடர்பு அதிகாரி. போலீஸ் வேலை, தோட்டி வேலை, நீதிபதி வேலை, குழந்தைகள் பராமரிப்பு எல்லாம் அவளுடையவைதான். மேலே மாடியில் குடியிருக்கும் மூன்று குடும்பங்களுக்கும் கீழே உள்ள நாலு குடும்பங்களுக்கும் இவளிடம் அன்பும் உண்டு; மரியாதையும் உண்டு.''



ஜினீவா ஐ. எல். ஓ. ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு பி. வி. கிருஷ்ணய்யரின் குமாரர் திரு வேங்கடேசுவரன் சௌ. ஹேமவதியை மணந்துகொண்டார்.



ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஓய்வு பெற்ற தலைமைக் காஷியர் திரு ராம கிருஷ்ணய்யரின் புதல்வி சௌ. சாரதா திரு சுப்பிரமணியனை மணந்தார்.

சுத்தமான காற்றுக்கும் ஓடியாடி விளையாடுவதற்கும் அந்த வீட்டில் இடமில்லையாதலால் பெரும்பாலும், அவள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு மாலை நேரங்களில் கடற் கரைக்குப் போய் விடுவாளாம். தாய் மார்களுக்கு இந்த ஓர் உதவியே பெரிய உதவியல்லவா?

சுந்தரத்தின் மூத்த பெண் கமலா ஓடி வந்து அவனுடைய கால்களைக் கட்டிக் கொண்டு பள்ளிக்கூடத்தில் தன்னோடு படிக்கும் மற்றப் பெண்களைப் பற்றிப் பெருமையோடு பேசினாள். சிலர் கார்களிலும் ரிக்ஷாக்களிலும் வந்து இறங்கினார்களாம். சிலரை வேலைக்காரர்கள் அழைத்துக் கொண்டு வந்தார்களாம். இவ்வளவையும் கூறிவிட்டுத் தனக்குப் புதுச் செருப்புகள் வேண்டுமென்பதை நயமாக எடுத்துச் சொன்னாள் அவள்.

அடுத்த பெண் மேகலாவோ, ''அப்பா! அப்பா! ராஜத்துக்கு மத்தியான டிபன் கொண்டு வருகிற வேலைக்காரன் தினமும் ஒரு ஆப்பிளை அவளுக்குக் கொடுக்கிறான் அப்பா!'' என்றாள், தனக்கும் அப்படி வேண்டுமென்று நேரடியாகக் கேட்காமல்.

''ராஜந்தானே? பாவம், அவளுக்கு உடம்புக்குக் காய்ச்சலாக இருக்கும். டாக்டர் கொடுக்கச் சொல்லியிருப்பார்'' என்று மழுப்பிய சுந்தரம், ''உனக்கெல்லாம் அது உடம்புக்கு ஒத்துக்காது கண்ணு! நீதான் ஆப்பிள் மாதிரி இருக்கிறியே, உனக்கு எதுக்கு ஆப்பிள்?'' என்று கேட்டுச் சமாளிக்கப் பார்த்தான்.

''போ, அப்பா! நீ சும்மாச் சும்மா என்னை ஏமாத்தறே!'' என்று செல்லக் கோபத்தோடு சொல்லி விட்டுத் தன் தாயாரிடம் சென்றாள் அவள். கமலாவும் புதுச் செருப்புப் பல்லவியை மற்றொரு தரம் பாடி விட்டு அவளைப் பின் பற்றினாள்.

''இருக்கிறவன் இல்லாதவனை ஏமாற்றுகிறான். இல்லாதவனோ தன்னை நம்பியிருக்கிற குழந்தை குட்டிகளை ஏமாற்றுகிறான். இப்படி ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டே காலத்தை ஓட்ட வேண்டியிருக்கிறது'' என்றான் சுந்தரம்.

''குழந்தைக்கு ஆப்பிள் கொடுப்பவர்கள் தனியே வீட்டில் வைத்துக் கொடுக்கக் கூடாதோ?'' என்றான் முருகையன்.

''அவர்கள்மேல் தப்பே இல்லை. நம்மைப் போல் மத்தியதர வர்க்கம் என்று சொல்லிக் கொள்ளுகிற இரண்டும் கெட்டான் வர்க்கத்துக்குப் பிறக்கும் குழந்தைகள் இந்தப் பருவத்திலேயே ஏமாறக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான் என் எண்ணம். கூழுக்கு இன்னும் வசதி கிடைக்க வில்லை இந்த நாட்டில். சாப்பாட்டுப் பொருள்களின் விலையோ விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் பட்டினத்துக் கடைகளில் குவிந்து கிடக்கும் ஆடம்பரச் சாமான்களைப் பார்!.... மனிதர்களை ஏமாற்றுவதற்கென்றே வளர்ந்துள்ள பொருளாதாரக் குழப்பத்தில் நாம் மாறக் கற்றுக் கொள்ளாவிட்டால் ஏங்கித்தான் சாக வேண்டும்!''

வெளிப் பார்வைக்கு வெகுளி போல் தோன்றிய சுந்தரத்தின் மனத்துக்குள் ஓர் எரிமலை கனிந்து கொண்டிருப்பதைக் கண்டான் முருகையன். அவனுடைய ஆதரவில் சில நாட்கள் வாழ்வது தவறில்லை என்று தோன்றியது. மறு நாள் காலையிலேயே பெட்டியோடு வந்து சுந்தரத்தின் வாசற்புறத்து அறைக்குள் தஞ்சம் புகுந்தான்.

அத்தியாயம் இருபத்தாறு

சாந்த சக்தி

நண்பனுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்த இரண்டு மூன்று நாட்களுக்குள் முருகையனுக்கு அது அவனுடைய சொந்த வீடு போல் ஆகி விட்டது. வெளியில் வேலைக்கு அலைந்து திரிந்த நேரம் போக, பெரும்பாலும் சுந்தரத்தின் வெளி அறையிலேயே தங்கினான். என்றாலும், வீட்டின் உட்பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அவன் கவனத்திலிருந்து தப்பவில்லை.

தண்ணீருக்குப் பஞ்சம், சுகாதார ஏற்பாடுகளுக்குப் பஞ்சம், இட நெருக்கடி, காற்றோட்டமின்மை, இவ்வளவு தொல்லைகள் அங்கே இருந்தும் கூட அந்த வீடு அமைதியாகவும், கலகலப்பாகவும்தான் இயங்கிக்கொண்டிருந்தது. எந்த நேரமும் வீடு பளிச்சென்று சுத்தமாக இருப்பதைக் கண்டான் முருகையன். கண்ட கண்ட இடங்களில், குப்பை கூளங்களைக் காணோம்; குறுக்கும் நெடுக்கும் கொடிகளில் துணிகள் அலங்கோலமாகத் தொங்குவதைக் காணோம். பார்க்கு மிடத்திலெல்லாம் ஓர் ஒழுங்கு, அழகு, கட்டுப்பாடு தென்பட்டன.

இவை யெல்லாவற்றுக்குமே மூலகாரணமாக விளங்கியவள் சாந்தா என்பதை இரண்டே தினங்களில் அறிந்து கொண்டான் முருகையன். அதிகாலையில் ஐந்து மணிக்கு முன்னரே எழுந்து அவள் பம்பரம் போல் அந்த வீட்டுக்குள் சுழன்று கொண்டிருந்தாள். எழுந்தவுடன் குளித்து முழுகி, நெற்றி நிறைய குங்குமத்தை வைத்துக் கொண்டு எட்டு மணிக்கெல்லாம் தன் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு விடுவாள். பிறகு வரிசையாகச் சுந்தரத்தின் வீட்டுக் குழந்தைகளும், மாடி வீட்டுக் குழந்தைகளும் குழாயடியில் வந்து நிற்பார்கள். அவர்களைக் குளிக்கச் செய்து துவட்டி விட்டு அனுப்பி வைப்பாள். பெரிய குழந்தைகளென்றால் அவர்களே தங்கள் துணிகளைத் துவைத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வீட்டுப் பகுதிக்கும் சிறியதொரு குப்பைத் தொட்டி இருந்தது. கண்ணெதிரில் காணும் குப்பைகளை, குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரையில் ஒவ்வொருவரும் குனிந்து எடுத்துத் தொட்டிகளில் போட்டார்கள். முறைப்படி ஒவ்வொரு வீட்டுக்காரர்களும் பொதுவான வசதிகளைப் பகிர்ந்து கொண்ட காட்சி முருகையனுக்கு வியப்பாக இருந்தது.

''வீடுகளைப் பார்த்தால் தேன் கூடுகள் என்று நினைக்கத் தோன்றுகிறதண்ணு! இவ்வளவு பேருக்கும் மத்தியில் நான் மட்டும் வேலையில்லாமல் உட்கார்ந்துகொண்டிருப்பது என்னவோ போலிருக்கிறது'' என்றான் முருகையன்.

''இரண்டு வருஷங்களுக்கு முன்னால் இதே வீடுகளைப் பார்த்தால் நீ பயந்து கொண்டே ஓடிப்போயிருப்பாய். காலையில் பாத்திரங்களோடு பாத்திரங்கள் மோதி இடி இடிப்பதைக் கேட்கலாம். குழாயடியில் பெண்கள் போட்டுக் கொள்ளுகிற சண்டைக் காட்சிகளைக் கண்டால் 'சன்யாசமே சன்மார்க்கம்' என்கிற எண்ணம் வந்துவிடும் நமக்கு. இந்த வீட்டுக் குப்பை அடுத்த வீட்டுக்கு முன்னாலும் அடுத்த வீட்டுக்குப்பை இந்த வீட்டுக்கு முன்னாலும் ஒதுங்கிக் கிடக்கும். மூக்கைப் பிடித்துக் கொண்டு, கண்களை மூடிக் கொண்டுதான் உள்ளே போய் விட்டு வெளியில் வர வேண்டும். நல்லவேளை, சாந்தா தன் தாயாருடன் இந்தப் புறாக் கூண்டுக்குக் குடிவந்தாள்; இதைத் தேன்கூடாக மாற்றினாள். ஆரம்பத்தில் அவளுக்குத்தான் இங்கே எத்தனை எதிர்ப்புக்கள், ஏச்சுக்கள், பேச்சுக்கள்! நானும் மீனாட்சியும்தான் முதலில் அவளுக்குத் துணையாக இருந்தோம். நாளடைவில் அவள் வெற்றி பெற்றுவிட்டாள்.

சாந்தாவைப் பற்றி மேலும் சில விவரங்களைக் கூறினான் சுந்தரம். செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள ஏதோ ஒரு கிராமத்தைச் சேர்ந்தவளாம் அவள். தன் தங்கை கல்யாணியின் படிப்புக்காகவும், வயதான தாயாரின் உடல் நலத்துக்காகவும் சென்னைக்கு வந்து குடியேறி யிருந்தாள். பூர்வீக சொத்தான நிலத்தி லிருந்து ஓரளவுக்கு அரைகுறை வருமானம் வந்து கொண்டிருந்ததாம். பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கு ஓய்வு நேரத்தில் பின்னல் வேலைகள் செய்து கொண்டு மற்ற வேலைகளுக்கும் நேரம் வைத்திருந்தாளாம்.

சுந்தரத்துக்கு அவனுடைய ஆபீஸ் வேலைகள் ஆபீஸ் நேரத்துடன் ஒழிவதில்லை. வீட்டுக்கும் கட்டுகளை எடுத்துக் கொண்டு வந்து, காலை நேரங்களிலெல்லாம் வேலையில் மூழ்கி யிருப்பான். அதனால் அவனுடைய குடும்பப் பொறுப்பில் ஒரு பகுதியைச் சாந்தாவே ஏற்றுக் கொண்டிருந்தாள். மார்க்கெட்டுக்குப் போய்க் காய்கறி வாங்கி வருவது, பங்கிட்டுக் கடையின் முன்னால் 'க்யூ' வரிசையில் காத்திருந்து ரேஷன் அரிசி வாங்கி வருவது இவையெல்லாம் அவள் செய்த உதவிகள்.


இப்பொழுதே திட்டமிடுங்கள்
தீபாவளிக்கு நாகரிக் மோஸ்தரில்
அணிவகுத்துச் செல்ல!
4.95—5.95
5.50
8.25—9.50
3.75—4.75
3.50—4.25
9.50—13.50
11.95—13.50
5.75—9.75
காலணிகளை திருப்திகரமாகத் தேர்ந்தெடுத்து வாங்க, சீக்கிரமே செல்லுங்கள். காலை நேரத்தில் வந்தால் ஸ்டோர் அலுவலாளர் கள் உங்களை பிரத்தியேகமாகக் கவனிப்பார்கள்.
Bata

''உங்களுக்கென்று தனியே நான் போகவில்லையே, அண்ணி! என் வீட்டுக்கு வாங்குவதோடு உங்களுக்கும் சேர்த்து வாங்குவதில் எனக் கென்ன கஷ்டம்?'' என்று மீனாட்சியிடம் வாதாடுவாள். ''குழந்தை குட்டிகளைச் சமாளிப்ப தற்கே உங்களுக்கு நேரமிருப்ப தில்லை. அண்ணாவோ ஆபீஸ் கட்டுகளை வைத்துக் கொண்டு சிரமப்படுகிறார். இது கூடவா நான் செய்யக் கூடாது?''

வெளியில் ஒரு வேலையும் கிடைக்காத முருகையன் ஒரு நாள் சாந்தாவின் வேலைகளுக்குப் போட்டி போட முன் வந்து விட்டான். ''இனிமேல் நான் தான் கடைகளுக்குப் போகப் போகிறேன்! சாந்தாவின் வீட்டுக்கும் சேர்த்து நானே வாங்கி வந்தால் என்ன?'' என்று பைகளை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

''உங்களுக்கு விலை கேட்டு வாங்கத் தெரியாது'' என்றாள் சாந்தா.

''நாலு கடைகளில் விசாரித்தால், தன்னால் தெரிந்து விடுகிறது'' என்றான் முருகையன்.

அன்றிலிருந்து சாந்தாவுக்கு ஒரு வேலை குறைந்தது. முருகையனுக்கும் கிடைத்த வேலை சிறிதாக இருந்தாலும் அதில் ஒரு மன நிறைவு ஏற்பட்டது! என்றாலும் 'நண்பனுக்குப் பாரமாக இருக்கிறோமே' என்ற எண்ணத்தை அவனால் முழுதும் விரட்ட முடியவில்லை.

அன்றைக்கு மாலையில் தனியே கடற்கரைக்குச் சென்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டே சிந்தனையில் மூழ்கினான் முருகையன். கிராமத்திலிருந்த அவனுடைய தகப்பனாரின் நினைவும், பாட்டியின் நினைவும் வந்தன. தகப்பனாருக்குத் தான் சுந்தரத்தின் வீட்டில் இருப்பதாகவும், விரைவில் வேலை கிடைக்கு மென்றும் எழுதி யிருந்தான். விரைவில் என்ன வேலை கிடைக்கும்?

அந்தச் சமயம் 'தேங்காய், மாங்காய், பட்டாணி, சுண்டல்' விற்பவர்களும், முறுக்கு, வடை, முந்திரிப் பருப்பு விற்பவர்களும், நிலக்கடலை, பொட்டுக் கடலை, காராமணி விற்பவர்களும் அவனைச் சுற்றி ஒரு முறை வட்டமிட்டு விட்டுச் சென்றனர். 'இவர்கள் எல்லோரும் யாரிடம் போய் வேலை தேடி அலைகிறார்கள்?'

'கல்லூரிப் படிப்புப் படித்தவன் கடற் கரையிலே தின்பண்டம் விலை கூறி விற்பதா? இது அவமான மில்லை?' பரம்பரை பரம்பரையாகப் போலித் தனமான மதிப்பிலே வளர்ந்துவிட்ட சமுதாயத்தின் நினைவுத் துளி ஒரு கணம் முருகையனையும் தயங்கச் செய்தது. முடிவுக்கு வராமல் குழம்பிக்கொண்டிருந்தான். அப்போது சாந்தாவின் குழந்தைக் கூட்டம் ஓடி வந்து அவனைச் சூழ்ந்து கொண்டு ஆடிப் பாடத் தொடங்கியது. சாந்தாவும் வந்து சேர்ந்தாள். அவள் கொண்டு வந்த சிறு பையில் குழந்தைகளுக்காக வாங்கிய சுண்டல் பொட்டலங்களும், கடலைப் பொட்டலங்களும் இருந்தன.

குழந்தைகளை உட்காரச் சொல்லி, ஆளுக்கு இரண்டாகப் பொட்டலங்களை நீட்டிவிட்டு முருகையனுக்கும் கொடுத்தாள். மறுக்காமல் வாங்கிக் கொண்டான் முருகையன். சாப்பிட்டுக் கொண்டே, ''எனக்கொரு யோசனை தோன்றுகிறது'' என்றான் அவன்.

''என்ன?''

''கடற்கரையில் கடலை விற்கலா மென்று பார்க்கிறேன்.''

''உண்மையாகத்தான் சொல்கிறீர்களா?'' என்று கேட்டாள் சாந்தா.

''உண்மைதான்.''

''மனப்பூர்வமாகச் செய்வதானால் தாராளமாக உங்கள் யோசனையை நான் ஆதரிக்கிறேன். அதைப் பாராட்டுகிறேன். — திருடினால் குற்றம், சுரண்டினால் குற்றம், பொய் சொன்னால் குற்றம். இது மானமுள்ள தொழில்தான். நியாயமான லாபம் வைத்துத் துணிவோடு செய்யுங்கள்.''

சாந்தாவின் பேச்சைக் கேட்டவுடன் புதிய தெம்பு வந்து விட்டது முருகையனுக்கு. ''நாளையிலிருந்தே தொடங்கப் போகிறேன்,சாந்தா!'' என்றான் அவன்.

''இப்போதே என் வாழ்த்துக்கள்!'' என்றாள் சாந்தா சிரித்துக்கொண்டே. அவள் சிரிப்பில் மயக்கும் கவர்ச்சியில்லை. குளுமையான சக்திக் கனல் குபீரென்று பொங்குவது போலிருந்தது.

அன்றைக்கு இரவில் முருகையனின் முடிவைக் கேட்ட சுந்தரம், அவனைப் பெருமையோடு தட்டிக் கொடுத்தான். ''போலிப் பெருமை பாராட்டும் முட்டாள்களின் கூட்டத்திலிருந்து கொண்டு நியாயமான எதையும் செய்வதென்றால்கூட அதற்கு அதிகமான நெஞ்சுத் துணிவு வேண்டும். மீனாட்சியிடம் சொல்லி நானே சுண்டல் போட்டுத் தரச் சொல்கிறேன். — ஒரே ஒரு விஷயம்; நீ விற்பனைக்குத் தயார் செய்யும் பண்டங்களை யெல்லாம் நம் வீட்டுக் குழந்தைகளுக்கே கொடுத்து வயிற்றைக் கெடுத்து விடாதே! உழைப்புக்கான லாபத்திலும் ஒரு கண் வைத்துக் கொள்!'' என்றார்.

மறு நாள் மாலையில் கணக்குப் போட்டுப் பார்த்து, அளவோடு பொட்டலங்களை மடித்துக் கட்டினாள் சாந்தா. அவளே காசு கொடுத்து முதன் முதவில் முருகையனின் வியாபாரத்தையும் தொடக்கி வைத்தாள். (தொடரும்)

மணிபல்லவம்

நா. பார்த்தசாரதி

20. புதிய மனமும் பழைய உறவுகளும்

முல்லையின் முகத்தையும், அந்த முகத்திலிருந்து பருகுவது போன்ற ஆர்வத்தோடு தன்னை இமையாமல் பார்த்துக் கொண்டிருக்கும் கண்களையும் எதிரே நேருக்கு நேர் நிமிர்ந்து காணத் தயங்கியவனாகத் தங்கள் இருவருக்கும் நடுவில் நின்றுகொண்டிருந்த மானின் கண்களை நோக்கியபடியே அவளோடு பேசினான் இளங்குமரன்.

"முல்லை! பூக்களைப் போல் சில பருவ காலங்களில் மலர்ந்து பொலிவதும் பின்பு வாடி உதிர்ந்து தளர்வதும் குறைவதும்தான் மனித உடம்பின், அழகு, கவர்ச்சி இவை எல்லாம். பூக்கள் பூப்பதற்குப் பருவம், நேரம், முதலியன காரணமாவது போல் இந்த உடம்பில் அழகு பூக்கும் பருவங்களும் சில உண்டு. உடம்பை வாகனமாகக் கொண்டு இயங்கும் நீண்ட வாழ்க்கைப் பயணத்தில் அழகும் கவர்ச்சிகளும் பூத்துப் பொலிகிற பருவங்கள் மிகவும் குறுகியவை. பூக்களுக்கும், நேரத்துக்கும் சேர்த்துத் தமிழில் ஒரே சொல்லாக வாய்த்திருப்பது 'போது' என்ற பதம். நேரத்தோடு மலரும் பண்பைக் குறிப்பதற்காகவே பூக்களுக்குப் போது என்று பெயரிட்டார்கள்போலிருக்கிறது. பவழ மல்லிகை இரவிலேயே பூத்து விடுகிறது. தாமரை கதிரவனைப் பார்த்த பின்பே முகம் மலர்கிறது. குமுதப் பூ மாலையில் தான் மலர்கிறது. ஒவ்வொரு மலரும் தன்னுடைய போது தவறாமல் பூக்கும் இயல்பை நினைத்துக் கொண்டு பார்த்தால்தான் இரண்டு பொருளுக்கும் உரியதாக வாய்த்த போது என்ற சொல்லின் அழகு புரியும். சமயம் அறிந்து, இடம் அறிந்து, பொருத்தம் அறிந்து மலரும் அறிவின் மலர்ச்சியைப் பூக்களுக்கு இணை சொல்வது இதனால்தான் முல்லை! உன்னைப் போன்ற பெண்களுக்கோ ஆசை நேரும்போதுதான் அறிவும் மலர்கிறது. ஆசையைச் சொல்வதற்கு வேண்டிய சொற்களை மட்டும்தான் நீங்கள் தேடுகிறீர்கள்......"

"அதை மறுப்பதற்குத் தேவையான அழகிய சொற்களைத் தேடாமலே தெரிந்து சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் நீங்கள்."

இப்படி வெடுக்கென்று உடனே அவனுக்குப் பதில் சொன்னாள் முல்லை. அவனுடைய சொற்கள் உணர்ச்சி வசப்பட்டுப் பிறந்ததைக் கண்டு இளங்குமரன் புன்முறுவல் பூத்தான். எதிரேயிருப்பவர் கூறிய கருத்து எதுவோ அதை உடனே மறுத்துவிட வேண்டுமென்ற அவசரமும் அவளுடைய இந்தச் சொற்களில் தொனித்தது. முல்லையின் மனத்தில் இப்போது இன்னொரு சந்தேகமும் ஏற்பட்டது. 'பூக்களைப் போல் சில பருவ காலங்களில் மலர்ந்து பொலிவதும் பின்பு வாடி உதிர்ந்து தளர்வதும், குறைவதும்தான் மனித உடம்பின் அழகு கவர்ச்சி இவை எல்லாம்' என்று இளங்குமரன் கூறியது தன்னைப் பற்றியா, அவனைப் பற்றியா எனச் சந்தேகத்தை இரண்டு கூறாகப் பிரித்து மனத்தைக் குழப்பிக் கொண்டாள் அவள். இந்தச் சந்தேகத்தை அவனிடமே கேட்டுப் புரிந்து கொள்ளலாம் என்றால் இதை அவனிடம் எப்படிக் கேட்பது என்றும் விளங்கிக் கொள்ள முடியாமல் பயந்தாள்.

இளங்குமரனே தன் எதிரே நிற்பவளுடைய பெண்இதயத்தின் எல்லா வேதனைகளையும் உணர்ந்திருந்தும் ஒன்றுமே உணராதது போல இளநகை தயங்கும் முகத்தினனாக நின்றான். அவன் இதழ்களிலும் முகத்திலும் தோன்றிய அந்தப் புன்னகையும் கூடப் பிறருடைய வேதனைகளுக்கு இரங்கும் அருளாளன் ஒருவனுடைய கருணை நகையாகவே இலங்கிற்று.

இவர்கள் இரண்டு பேரும் இப்படிப் பேசத் தயங்கி நின்ற சமயத்தில் இந்தக் குழப்பத்திலிருந்து இரண்டு மனங்களையுமே விடுவிக்க வந்தாற் போல் ஓவியன் மணிமார்பனும் அவன் மனைவியும் படைக்கலச் சாலைக்கு வந்து சேர்ந்தார்கள். இலவந்திகைச் சோலையில் வந்து தங்கியிருந்த ஓவியனை 'இந்திர விழா முடிகிறவரை நீ படைக்கலச் சாலையிலேயே வந்து தங்கிக் கொள்ளலாம்' என்று நீலநாகமறவர் வேண்டிக் கொண்டதற்கு இணங்கித் தன் மனைவியோடு அப்போது அங்கே புறப்பட்டு வந்திருந்தான் அவன். முல்லையின் கேள்விகளுக்கும், ஆசைகளுக்கும் மறுமொழி சொல்லியும், சொல்லாமலும் இரண்டு விதமான நிலைகளுக்கு நடுவே தவித்துக் கொண்டிருந்த இளங்குமரனுக்கு மணிமார்பனுடைய வரவு இப்போது நிறைந்த நிம்மதியை அளித்தது.

விலங்குகளை மாட்டிக் கொண்டு அவற்றால் பூட்டுண்டு கிடக்கும் கைகளை அவற்றைக் களைந்து கழற்ற முடியாமல் தவிக்கும்போது வேறு கைகள் வந்து கழற்றினாற் போலத் தன் மனத்தின் திண்மைகளை இளக்கும் நளினமான சூழ்நிலைகளோடு முல்லை எதிரே வந்து நின்றுகொண்டு ஒவ்வொரு வார்த்தையாலும் தன்னை வளைத்து இறுக்கிச் சொல் விலங்கு பூட்டிக் கொண்டிருந்த சமயத்தில் மணிமார்பன் வந்து விடுவித்ததாகத் தோன்றியது இளங்குமரனுக்கு. ஆனால் முல்லைக்கோ தன் மனத்தின் இரகசியங்களையெல்லாம் சொல்லித் தீர்த்து விடுவதற்கிருந்த கட்டுக் காவலற்ற சுதந்திரமான சமயத்தில் திடீரென்று யாரோ வந்து தன் மனத்துக்கும், நாவுக்கும் விலங்கு பூட்டி விட்டாற் போல இருந்தது. அழகிய கண்களைத் திறந்து மருள மருளப் பார்க்கும் அந்தப் புள்ளி மானையொப்ப இருந்தாற் போலிருந்து தானும் பேசத் தெரியாதவளாகவோ, பேச முடியாதவளாகவோ மாறி விட்டதாக உணர்ந்தாள் முல்லை. அவள் மனத்திலும் நாவிலும், நினைவாகவும், சொல்லாகவும் விளையாடிய தனிமை என்ற சுதந்திர உணர்வின் மேல் இப்போது கூச்சமும், பயமுமாகிய விலங்குகள் விழுந்து இறுக்கின.

ஓவியன் மணிமார்பனும், அவன் மனைவியும் அவர்களுக்கு மிக அருகில் வந்தார்கள்.

''பாதுகாப்பான இடத்துக்கு வந்து விட்டாய் மணிமார்பா! இனிமேல் இந்திர விழா முடிகிற வரையில் இந்த நகரத்தில் கவலையில்லாமல் இருந்து விட்டுத் திரும்பலாம்'' என்றான் இளங்குமரன்.

நான்கு பேரும் புல்தரையில் அமர்ந்து கொண்டார்கள். அங்கு உட்கார முல்லைக்கு விருப்பமில்லை என்றாலும் நீலநாக மறவரோடு போயிருக்கும் தன் தந்தை கடற்கரையிலிருந்து வந்தாலன்றித்தான் வீடு திரும்ப முடியாதென்ற காரணத்தால் வேண்டா வெறுப்பாக அங்கேயே உட்கார்ந்து கொண்டாள். புது மணப் பொலிவு குன்றாமல் திருமணத்துக்குப் பின் இன்னும் அதிகமாயிருந்த பேரழகோடு அருகில் உட்கார்ந்திருந்த மணிமார்பனின் மனைவியைப் பார்த்தாள் முல்லை. அப்படி அவளைப் பார்த்தவுடன் இன்னதற்கு என்று புரியாத எதற்காகவோ தான் அவள் மேல் பொறாமைப் படுவதற்கு இடமிருக்கிறதென்று தோன்றியது முல்லைக்கு. இந்த உலகத்தில் அழகிய நாயகனை மணந்துகொண்டு வாழும் அழகிய பெண்ணாயிருக்கும் எவளைப் பார்த்தாலும் அவள் மேல் தான் பொறாமைப் பட வேண்டியது நியாயந்தான் என்று நினைத்தாள் முல்லை. அவளுடைய மனக் குமுறலை முகமே கண்ணாடியாயிருந்து பிரதிபலித்தது. சிறிது நேரம் நால்வரும் என்ன பேசுவதென்று தோன்றாமல் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மணிமார்பன் அந்த மௌனத்தைக் கலைத்தான்.

''ஐயா! இன்று பகலில் உங்கள் பூம்புகார் நகரத்தின் துறைமுகத்துக்கு அருகிலுள்ள சில வீதிகளையும், யவனப் பாடியின் வளம் மலிந்த கடைத் தெருக்களையும் என் மனைவியோடு சுற்றிப் பார்த்தேன். சென்ற முறை நான் இந்த நகரத்துக்கு வந்திருந்தபோது கூட இவ்வளவு விரிவாய் இந்த நகரத்தை நன்றாகச் சுற்றிப் பார்க்கவில்லை. அப்போது இங்கே எனக்கு ஏற்பட்ட துன்ப அநுபவங்களால் நான் இந்த அழகிய நகரத்தின் ஒவ்வொரு பகுதியையும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப் படுவதற்குப் பதிலாக இங்கிருந்து எப்போது வெளியேறி என்னுடைய சொந்த ஊருக்குப் போவேனோ என்று முள்மேல் நிற்பதைப் போலத் தவித்துக் கொண்

டிருந்தேன். இந்த முறை வந்த போது தான் உங்கள் நகரத்தை ஒரு கலைஞனுடைய கண்களால் பார்த்து நான் அநுபவிக்க முடிந்தது. யவனர்கள் கடைத் தெருவில்தான் எத்தனை எத்தனை நுணுக்கமான பொருள்கள்? எங்கெங்கிருந்தோ கடல் கடந்து வந்து உங்கள் சோழ நாட்டு மண்ணில் பரவி விளங்கும் கலைகளைப் பார்த்தால் எனக்குத் திகைப்பே ஏற்படுகிறது. பாண்டி நாட்டின் தலைநகரமாகிய எங்கள் மதுரையில் கூட வேற்று நாட்டுக் கலைகளும், பண்பாடுகளும், இவ்வளவு ஆழமாக வேரூன்றவில்லை ஐயா!'' - என்று மணிமார்பன் வியந்து சொல்லிக் கொண்டே வந்தபோது இளங்குமரன் அவன் பேச்சில் குறுக்கிட்டுச் சில வார்த்தைகள் சொன்னான்.

''மணிமார்பா! உன்னுடைய கருத்துக்களில் ஒரு பகுதியை மட்டும் நான் மறுக்கிறேன். இந்த நகரத்திலுள்ள யவனப்பாடியின் செழிப்பு மிக்க கடைவீதிகளையும் அங்கு மலிந்துள்ள பிறநாட்டுக் கலைகளின் வளத்தையும் பார்த்து நீ வியப்பது இயல்புதான். ஆனால் வேற்று நாட்டு கலைகள் இந்த நகரத்தில் வந்து வேரூன்றி யிருப்பதாக நீ சொல்வது தான் பிழை. நியாயமாகப் பார்த்தால் எந்தக் கலையும் தான் தோன்றிய மண்ணில் வேரூன்றுவதைப் போல இன்னொரு நாட்டில் வேரூன்ற முடியுமா என்பது சந்தேகம்தான். மிக உன்னதமானதொரு கலை எந்த நாட்டிலும் போய்ப் பரவலாம். ஆனால் அதனுடைய ஆணி வேர் அது பிறந்த மண்ணில்தான் ஊன்றிக் கொண்டிருக்க முடியும் என்று பெரியவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.''

''அந்தத் தத்துவம் எல்லாம் எனக்கு விளங்காது, ஐயா! கிழக்குக் கடலின் தென்பகுதியில் நாவலந் தீவுக்கே நுழைவாயில் போல் அமைந்திருக்கிறபடியால் பூம்புகாரின் வீதிகளில் பல நாட்டுக் கலை வளத்தையும், மொழி வழக்கையும் காண முடிகிறது. எங்கள் மதுரை நகரம் தமிழகத்தின் நடுநகரமாக அமைந்து விட்டதனால் இதற்கு வாய்ப்பில்லை. மேலும் இந்திர விழாவைப் போல இவ்வளவு பெரிய விழா எதுவும் எங்கள் நகரத்தில் நடைபெறுவதில்லை. பங்குனி மாதத்தில் வில் விழா என்று ஒன்று நடைபெறும். காமனுக்காகக் கொண்டாடப் படுகிற அந்த விழாவில் மதுரை மாநகரத்து இளைஞர்களின் உற்சாகத்தை மட்டுமே காணலாம்....''

''காமனுக்கென்று தனியாக விழா எதற்கு மணிமார்பா? இளைஞர்களும், முதியவர்களுமாக உயிர் வாழும் மனிதர்களுடைய மனத்தில் ஆசைகள் அளவற்றுப் பொங்கும் ஒவ்வொரு விநாடியும் காமனுக்குத்தான் கொண்டாட்டம்! காமனுக்குத் தான் திருவிழா. ஆசைகளின் முடிவுதான் காம தகனம். வைராக்கியம் வாய்ந்த மனம் இருந்தால் அந்த மனத்துக்கு உரியவன் எவனோ அவன் ஒவ்வொரு விநாடியும் தன் மனத்தில் மேலெழுந்து நிற்கும் ஆசையைத் தன்னுடைய வைராக்கிய நெருப்பினால் தகனம் செய்து விட்டு வெற்றிப் பார்வை பார்க்கலாம்'' என்று சிரித்தபடியே தத்துவம் சொன்னான் இளங்குமரன்.

அப்போது படைக்கலச் சாலையின் வாயிற் பக்கமிருந்து சிரிப்பும் ஆரவாரமுமாக நாலைந்து இளைஞர்களோடு கதக்கண்ணன் அங்கே வந்து சேர்ந்தான். அவர்கள் யாவரும் அருகில் வந்தபோது தான் கதக்கண்ணனோடு உடனிருந்தவர்கள் தன்னுடைய பழைய பூம்புகார் நண்பர்கள் என்பது இளங்குமரனுக்குப் புரிந்தது. அவர்களை எப்படி வரவேற்பது என்று அவன் அப்போது திகைக்க நேர்ந்தது.

கூட்டமாக ஆடவர்கள் வருவதைப் பார்த்ததும் பெண்கள் இருவரும் எழுந்து விலகி நின்று கொண்டார்கள். தன் தமையன் கதக்கண்ணனைப் பார்த்தவுடன் முல்லைக்கு ஒரு விதத்தில் ஆறுதல் பிறந்தது. நீலநாக மறவரோடு பேசிக் கொண்டே உலாவப் போயிருக்கும் தன் தந்தை திரும்பி வருவதற்குச் சிறிது தாமதமானாலும் தான் தன் அண்ணனோடு வீடு திரும்பி விடலாமென்று எண்ணிக் கொண்டாள் முல்லை. புதிய சிந்தனைகளோடு கூடிய தன் மனத்தைக் கொண்டு பழைய நண்பர்களிடம் எப்படி எதை உள்ளம் திறந்து பேச முடியுமென்ற தயக்கம் அப்போது இளங்குமரனுக்கு ஏற்பட்டது.

21. மயானத்தில் நடந்தது

ஆலமுற்றத்துக் கடற்கரையில் நடந்தவாறே மிக முக்கியமான செய்திகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள் வளநாடுடையாரும் நீலநாகமறவரும். வளநாடுடையார் ஆத்திரமாக மீசை துடிதுடிக்கப் பேசலானார்:

''ஒவ்வொரு கணமும் நீங்கள் அந்தப் பிள்ளைக்குக் காவலா யிருக்க வேண்டும்


இன்னமும் தனிப்பட்ட ‘பாதுகாப்பளிக்கும் டிரெட்’

உங்களுக்கு அதிக பாதுகாப்பை — நீடித்த காலத்திற்கு அளிக்கிறது

நீங்கள் **பயர்ஸ்டோன்**

Firestone

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்களைப் பொருத்தி ஓட்டும்போது



பயர்ஸ்டோன் நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்களிலுள்ள ஆயிரக்கணக்கான, வழுக்குவதைத் தடுக்கக்கூடிய கோணங்கள், நீங்கள் நினைத்தபடி மோட்டாரை ஓட்டவும் நிறுத்தவும் தேவையான பிரேக் கண்ட்ரோலைக் கொடுக்கின்றன. மேலும், நீடித்து நிலைக்கும், தேய்வு பெறாத பயர்ஸ்டோன் டிரெட் ரப்பர் உங்களுக்கு நீடித்த காலத்திற்குப் பாதுகாப்பளிப்பதற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

பயர்ஸ்டோன்

பொருத்துங்கள்

இன்று சிறந்தவை.....
நாளை மேலும் சிறந்தவை

வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டவர்கள் உங்கள் உதவிகளைக் கோருகின்றனர்



பிரதம மந்திரியின்

தேசீய நிவாரண நிதிக்கு

தாராளமாக நன்கொடை அளியுங்கள்

நன்கொடைகளை காரியதரிசி, பிரதம மந்திரியின் தேசீய நிவாரண நிதி, பிரதம மந்திரியின் செக்ரடேரியட், தெற்கு பிளாக், புது டில்லி என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள். செக்குகளில் "பிரதம மந்திரியின் தேசீய நிவாரண நிதி" என்று எழுத வேண்டும்

ஐயா! நாளங்காடியில் இன்று காலையில் நடந்த சூழ்ச்சியை நினைத்துப் பார்த்தால் இப்போது கூட என் மனம் கொதிக்கிறது. நடந்தவற்றை ஒவ்வொன்றாக இணைத்துத் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது இவற்றுக்கெல்லாம் காரணமாக ஏதோ ஒரு வலிமையான சூழ்ச்சி பின்னாலிருந்து இயங்குவதாகத் தெரிகிறது.''

''வலிமையாவது? சூழ்ச்சியாவது? 'நான்தான் உன்னுடைய எதிரி!' என்று நேர் எதிரே முன்னால் வந்து நின்று கொண்டு கையை ஓங்குவதற்குத் துணிவில்லாத வலிமையும் ஒரு வலிமையா? சூழ்ச்சியை நாடி அதற்குள்ளே தன்னை மறைத்துக் கொண்டு தான் செயற்பட முடியுமென்று இருந்தால் அந்த வலிமைக்கு அதுவே பலவீனம் அல்லவா, வளநாடுடையாரே? தன் கைகளின்மேல் தனக்கே நம்பிக்கையில்லாமல் எவளோ ஒரு காபாலிகையின் கைகளில் அந்த வலிமை இருப்பதாக நம்பிக் கொண்டு அவளைத் தூண்டி விடுகிற சுய பலமில்லாத எதிரியை என்ன செய்ய முடியும்?'' என்று நீலநாகர் கேட்டதும் வளநாடுடையார் இந்தச் செய்தியில் தொடர்புபடுத்திக் கூறப்படும் காபாலிகை யார் என்று அறிந்து கொள்ளும் ஆவலினால் தூண்டப் பெற்றவராக அவரை வினவினார்:—

''அது யார் ஐயா காபாலிகை?''

''யாரா? அவள் தான் வளநாடுடையாரே இந்தச் சூழ்ச்சி நாடகத்தில் புதிய கதாபாத்திரம்'' என்று தொடங்கி முன் நாள் இரவில் இளங்குமரனை ஏமாற்றி அழைத்துக் கொண்டு போய் அந்தக் காபாலிகை சுடுகாட்டுக் கோட்டத்துக்குப் போகிற வழியிலே வைத்து அவனைக் கொலை செய்ய முயன்றதையும் பின் தொடர்ந்து சென்ற தான் தக்க சமயத்தில் உதவி அவனைக் காப்பாற்றி அழைத்துக்கொண்டு வந்ததையும் வளநாடுடையாருக்கு விவரித்துச் சொன்னார் நீலநாகர்.

''எப்படியோ, இந்த வைகாசி விசாகம் வரை இளங்குமரனைக் காப்பாற்றுங்கள். வைகாசி விசாகத்துக்கு முன்னால் இளங்குமரனை அழைத்துக் கொண்டு நான் மணிபல்லவத்துக்கு யாத்திரை போகத் திட்டமிட்டுள்ளேன். அதற்கு அப்பால் எல்லாத் துன்பங்களுக்கும் விடிவு பிறந்து விடும்.''

''விடிவு எங்கிருந்து பிறக்கும்? இன்னதென்று புரியாமல் எங்கோ, எப்போதோ, தொடங்கிய மூலமான துன்பம் புரிகிறவரை இதற்கு விடிவு இல்லை வளநாடுடையாரே!''

''புண்ணிய பூமிகளை மிதித்து அந்த மண்ணின் மேல் நடப்பதனாலேயே தீயினில் தூசு போலச் சில துன்பங்கள் விலகும் ஐயா! மணிபல்லவம் அப்படிப்பட்ட புண்ணிய பூமி'' என்று இளங்குமரனைத் தான் மணிபல்லவத்துக்கு அழைத்துச் செல்லும் அந்தரங்க நோக்கத்தை இந்தப் பொதுவான தத்துவத்தில் மறைத்துக்கொண்டுபேசினார் வளநாடுடையார்.

''இப்போதுதான் நினைவு வருகிறது வளநாடுடையாரே! நான் இன்றிரவு



தனியாகப் புறப்பட்டுப் போய்ச் சுடுகாட்டுக் கோட்டத்தில் அந்தக் காபாலிகையைச் சந்தித்துச் சில உண்மைகளை அறிய வேண்டுமென்று திட்டமிட்டிருந்தேன். நீங்கள் வந்து பேசிக் கொண்டிருந்ததில் அது மறந்து விட்டது. வாருங்கள். உங்களைப் படைக்கலச் சாலையில் கொண்டு போய் விட்டு விட்டுச் சிறிது நேரம் கழித்து நான் சக்கரவாளக்கோட்டத்துக்குப் புறப்பட வேண்டும்.''

''செய்யுங்கள்! காபாலிகர்கள் முரட்டுக் குணம் கொண்டவர்கள். நயமாகவும், பயமாகவும் வார்த்தைகளைக் கூறி உண்மையை அறிய முயலுங்கள்.''

''வார்த்தைகளுக்குக் கட்டுப்படுகிறவர்கள் சான்றோர்கள் மட்டும் தான். கயவர்களையும், வெறும் முரடர்களையும் வார்த்தைகளால் கட்டுப்படுத்த முடியாது. கரும்பை அறைத்துப் பிழிவது

போல் அறைந்து பிழிந்தால்தான் கயவர்களிடமிருந்து பயன் கொள்ள முடியும் வளநாடுடையாரே! சுடுகாட்டுக் கோட்டத்துக் காபாலிகையிடம் போய் நயமான வார்த்தைகளைப் பேசி இரகசியத்தை வரவழைக்க முடியாது. கயமை நிறைந்த மனிதர்களிடம் வாயால் பேசிப் பயனில்லை. கைகளால் பேச வேண்டும். அதைத்தான் இன்று செய்யப் போகிறேன் நான்'' என்று ஆவேசத்தோடு பேசினார் நீலநாகமறவர்.

பேசிக் கொண்டே அவர்கள் இருவரும் ஆலமுற்றத்துக் கடற்கரையிலிருந்து படைக்கலச் சாலைக்குத் திரும்பிய போது இருட்டியிருந்தது. முல்லையைத் தம்மோடு அழைத்துக் கொண்டு இல்லத்துக்குத் திரும்பினார் வளநாடுடையார். மணிமார்பனும் அவன் மனைவியும் படைக்கலச்சாலையின் ஒரு பகுதியில் தங்கி ஓய்வு பெறச் சென்றார்கள். நீண்ட காலத்துக்குப் பின்பு முதல் தடவையாகச் சந்தித்த காரணத்தினால் கதக்கண்ணன் முதலிய நண்பர்கள் மட்டும் நெடுநேரமாகியும் பிரிந்து செல்வதற்கு மனமின்றி இளங்குமரனோடு பேசிக் கொண்டிருந்தார்கள். உரையாடலில் இளங்குமரனை நோக்கி அவர்கள் கூறிய வார்த்தைகள் அதிகமாகவும் அவர்களை நோக்கி இளங்குமரன் கூற நேர்ந்த வார்த்தைகள் குறைவாகவும் இருந்தன.

நிலா உச்சி வானத்துக்கு வந்திருந்தது. இளங்குமரனோடு நண்பர்கள் பேசிக் கொண்டிருந்த குரல் ஒலிகளையும் மிக அருகில் இருந்த காரணத்தால் கடலின் அலை ஓசையையும் தவிரப் படைக்கலச்சாலையும் சுற்றியிருந்த தோட்டமும் அமைதி யடைந்தாயிற்று. குறிப்பிட்ட இந்த அமைதியையே எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது போல் நீலநாகர் தமது இருக்கையிலிருந்து புறப்படுவதற்கு எழுந்தார். தலைப்பாகையைக் கழற்றி வைத்தார். மூலையில் குவித்திருந்த படைக்கலங்களின் குவியலில் இருந்து நீண்ட ஈட்டி ஒன்றை எடுத்துக் கொண்டு இரவில் தாம் அங்கிருந்து வெளியேறிச் செல்லுவது பிறரறியத் தெரியாமலிருப்பதற்காகத் தம்முடைய பாதக் குறடுகளையும் கழற்றிவிட்டு நடந்தார். இயல்பாகவே அவருடைய கால்களுக்கு வேகம் அதிகம். எஃகினாற் செய்தவை போன்று நீண்டு வைரம் பாய்ந்து இறுகிய அந்தக் கால்களில் பாதக் குறடுகள் என்ற சிறிய சுமையும் இல்லாமற் போகவே இப்போது இன்னும் வேகமாக நடக்க முடிந்தது. முடியை மறைத்திருந்த தலைப்பாகையைக் கழற்றியிருந்ததால் உற்றுப் பார்த்தாலன்றி முதல் பார்வையிலேயே அடையாளம் கண்டு கொள்ள முடியாத தோற்றத்தோடு இப்போது விளங்கினார் அவர். நிலா ஒளியின் கீழே இருட்டு மலை ஒன்று தன் வலிமை சிதறாமல் விரைந்து பாய்வது போல் சக்கரவாளக் கோட்டத்துப் பாதையில் அவர் சென்று கொண்டிருந்தார். அவருடைய வலது கரத்தில் அந்த ஈட்டியை அவர் பற்றியிருந்த அலட்சிய பாவத்திலேயே, 'இது எனக்கு ஓர் ஆயுதமல்ல! இதைப் பற்றியிருக்கும் வலிமை வாய்ந்த என் கைதான் எனக்கு இதை விடப் பெரிய ஆயுதம்' என்பது போன்ற திடமான எண்ணத்தின் உறுதி தெரிந்தது.



'ஒரு காபாலிகை மட்டுமென்ன? இந்தச் சக்கரவாளக் கோட்டத்து வன்னி மன்றத்திலுள்ள காபாலிகர் குலத்தையே வேரோடு அழிக்க என்னுடைய ஒரு கை போதும் எனக்கு.'—இப்படிப் பெருமிதமான நினைவுகள் அவருடைய மனத்திலும் கால்கள் கரடு முரடான மயானத்து மண்ணின் மேலும் புகுந்து நடந்து கொண்டிருந்தன. உயிருடனிருப்பவர்களை மயானத்துக்குக் கொண்டு வரும் கூற்றுவனே தன் தொழில் சுதந்திரமாக நிகழ்கிற பூமியில் தற்பெருமையோடும் மதத்தோடும் புகுந்து நடக்கிறாற் போல்

விருப்போடு நடந்துபோய்க் கொண்டிருந்தார் நீலநாகர். தன் எல்லையில் புகுந்து நடக்கிற போது பொதுவாக மனிதர்களுக்குத் துணிவு மிகும் என்பார்கள். நீலநாகருக்கோ தம் எல்லை அல்லாத இடத்தில் புகும் போதும் துணிவு பெருகிய மன நிலையே இருக்கும்.

அடர்ந்து பின்னி முட்கொடி படர்ந்த வன்னி மரங்கள் தென்பட்டன. காபாலிகர்களின் வெறிக் குரல்கள் நெருங்கிக் கேட்டன. முடை நாற்றம் நாசியைத் துளைத்தது. ஆள் நடந்து வருகிற அரவத்தால் கலைந்த இரவுப் பறவைகளின் குரல் மேலே மரக் கிளைகளிலிருந்து ஒலித்தது. கிழிந்த துணியால் போர்த்தியிருந்த ஊன் தொகுதியைப் போல வன்னி மரங்களின் அடர்த்திக்கிடையே அங்கங்கே நெருப்பு எரிவது துண்டு துண்டாகத் தெரிந்தது.

அந்த இடம் நெருங்கியதும் அன்று இளங்குமரனை ஏமாற்றி அழைத்துப் போய்க் கொல்ல முயன்ற காபாலிகையின் தோற்றத்தையும், முகத்தையும் நினைவுக்குக் கொண்டு வர முயன்றார் அவர். கரிய பாறைகளுக்கிடையே வாய்த்த குகையின் சிறிய வாயிலைப் போன்ற வன்னி மன்றத்துப் புதரின் வழியில் தம்முடைய உடம்பைக் குறுக்கிக் கொண்டு குனிந்து நுழைந்தார் நீலநாகர். தாங்கள் உபாசனை செய்து கொண்டிருக்கிற பயங்கரத் தெய்வமே திடீரென்று தங்களுக்கு எதிரே தோன்றினாற் போலிருந்தது. அங்கே மூலைக்கொருவராகத் திரிந்து கொண்டிருந்த காபாலிகர்களுக்கு, வந்து நிற்கும் மனிதரின் ஆகிருதியையும் வலிமையையும் தோற்றத்திலேயே கண்டு உணர்ந்தவர்களாகப் பயந்தபடியே ஒவ்வொருவராக மெல்ல அருகில் வந்தார்கள். சிலர் அருகில் வராமல் விலகியே நின்றார்கள். அவர்களில் ஒருவனிடம் தாம் தேடி வந்தவளைப்



பற்றிய அடையாளங்களைச் சொல்லிக் கேட்டார் நீலநாகர். அவரால் கேட்கப்பட்ட காபாலிகன் அவருக்கு உடனே மறுமொழி கூறாமல் தன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மற்றொரு காபாலிகனுடைய முகத்தைப் பார்த்தான். அவன் வேறொருவனுடைய முகத்தைப் பார்த்தான். நீலநாகர் பொறுமையிழந்தார். சீற்றம் அடைந்தார்.

''அவள் எங்கேயிருக்கிறாள் என்று சொல்! சொல்லப் பயமாயிருந்தால் இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டு. இரண்டும் முடியா விட்டால் உன் கழுத்தைக் காட்டு. அப்படியே பனங்காய் பறிப்பது போலத் திருகிக் கீழே வைக்கிறேன்'' என்று நீலநாகர் சீறிய குரல் வன்னி மன்றத்தையே அதிரச் செய்தது.

முன்பு இயற்கையிலேயே பயமாயிருந்த அந்த இரண்டு காபாலிகர்களின் முகங்களும் இப்போது இன்னும் பயமாகமாறின. நீலநாகருடைய வலது கை சுட்டியைப் பிடித்திருந்த பிடி இறுகுவதைப் பார்த்தபோது அவர்கள் பயம் அதிகமாகிப் பின்னுக்கு நகர்ந்தனர். ஓடவும் சித்தமாயினர்.

இதற்குள் பக்கத்தில் செடிகொடிகள் பின்னிப் புதரைப் போலிருந்ததொரு குடிசைக்குள்ளிருந்து பைரவியே தலையை நீட்டி எட்டிப் பார்ப்பதை நீலநாகர் கண்டு விட்டார். அவளும் அவரைப் பார்த்து விட்டாள். முதற் பார்வையில் அவரை அவளுக்கு அடையாளம் புரிய வில்லையாயினும், தன்னைக் கண்டவுடன் அடித்துக் கொல்ல வரும் வேங்கைப் புலி போல அவர் சுட்டியை ஓங்கிக் கொண்டு பாய்ந்து வருவதைக்கண்டு ஆள் யாரென்று இனம் புரிந்து கொண்டு விட்டாள். தூக்கம் கலைந்து விழித்த அவள் கண்கள் இரத்தப் பழங்களாகச் சிவந்திருந்தன. நீலநாகரிடமிருந்து தப்புவதற்காக அந்த இடத்தின் பின்புறத்து வழியாக வன்னிப்புதரை நோக்கி விழுந்தடித்துக் கொண்டு ஓடத் தலைப்பட்டாள் பைரவி. இதே மனிதர் முன் தினத்தில் தன் கழுத்தைப் பற்றி விழி பிதுங்கிட நெரித்த வலி இன்னும் நினைவிருந்தது அவளுக்கு. அவள் ஓடியபோது புதரில் பதியெடுத்துக் காத்திருந்த நரி ஒன்று படு வேகமாகப் பாய்ந்து அவள் முழங்காலின் ஆடு சதையைக் கவ்வியது. வலி பொறுக்க முடியாது பைரவி குரூரமாக அலறினாள். நரியிடமிருந்து காலை விடுவித்துக் கொண்டு குருதி சிந்திய வாறே மேலும் ஓடினாள். நீலநாகரும் விடவில்லை. அவள் ஓடாமல் நின்றிருந்தால் எவ்வளவு கொதிப்படைந்திருப்பாரோ அதைப் போல் நான்கு மடங்கு கொதிப்போடு இப்போது அவளைத் துரத்திக்கொண்டு பாய்ந்தார். (தொடரும்)



ரா. வீ.

வெகு காலத்துக்கு முன் ஒரு நகரத்தில் சமரசிம்மன், அமரசிம்மன் என்று இரண்டு சகோதரர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் இருவரும் ராஜ புத்திரர்கள். வாள் வித்தை — வில் வித்தைகளை அவர்கள் நன்கு கற்றுத் தேர்ந்திருந்தனர்.

ஒரு நாள் அண்ணன் தம்பியைப் பார்த்து, ''அமரசிம்மா! இந்த நகரத்தில் நம் வாழ்க்கையை ஓட்ட முடியாது போலிருக்கிறது. மங்களபுரி மன்னரின் அவைக்குச் சென்று அவரது படையில் சேர்ந்து விடுவோம்!'' என்ருன்.

''சரியான யோசனை, அண்ணு!'' என்று சொல்லித் தம்பி உடனே புறப்படத் தயாராகி விட்டான்.

அவ்விரு சகோதரர்களும் இடுப்பிலே வாளைச் செருகிக் கொண்டு வழியில் பசித்தால் சமைத்து அருந்தவென்று கொஞ்சம் உணவுப் பொருளையும் எடுத்துக் கொண்டு மங்களபுரிச் சாலையில் கால் நடையாகவே புறப்பட்டார்கள்.

நடந்து நடந்து அவர்கள் வெகுதூரம் சென்று விட்டார்கள். கடைசியில் ஒரு காட்டின் சமீபத்தில் வந்தார்கள். அச் சாலை காட்டு வழியே புகுந்து சென்றது. அவர்கள் இருவரிடமும் வாட்கள் இருந்தன. அதோடு நெஞ்சுரமும் உறுதுணையாக இருந்தது. எனவே, அச்சந் தவிர்த்து அவ்வழியே முன்னேறினுர்கள்.

காட்டு வழியிலே அவர்கள் கொஞ்ச தூரம்தான் சென்றிருப்பார்கள். எதிர்ப் பக்கத்திலிருந்து ஒரு சாமியார் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடி வந்து கொண்டிருந்தார். அவர் ஓரேயடியாகப் பயந்து போயிருந்தார். தலைதெறிக்க ஓடி வந்தவராகவே தோன்றியது. ஒரு வேளை ஏதாவது காட்டுமிருகம் அவரைத் துரத்தியதோ, என்னவோ? இல்லா விட்டால் அவர் அப்படி அடித்துப் புரண்டு கொண்டு ஓடி வருவானேன்?

அவர் அருகில் வந்ததும் இரு சகோதரர்களும், ''சாமியாரே! எதற்காக இவ்வளவு வேகமாக ஓடி வருகிறீர்கள்? என்ன விசேஷம்?'' என்று கேட்டார்கள்.

சாமியார் நின்ருர். மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது அவருக்கு. ''குழந்தைகளே! இந்தச் சாலையில் இன்னும் கொஞ்சம் முன்னே போனுல் ஓர் இடத்திலே பேய் கிடக்கிறது. நான் அதைப் பார்த்து விட்டுத்தான் உளறி யடித்துக்கொண்டு ஓடி வருகிறேன். நீங்களும் திரும்பி விடுங்கள். அந்தப் பக்கம் போகாதீர்கள். அந்தப் பேய் உங்களை அழித்து ஒழித்து விடும்!'' என்ருர்.

''பேயா? பேய் என்று ஒன்று உண்டா, சாமியாரே! கதை — கட்டுரைகளைத் தவிர வேறு எங்கும் பேய் பிசாசு கிடையாது. தெரியுமல்லவா?'' என்ருன் சமரசிம்மன்.

அமரசிம்மனும் எள்ளிநகையாடினுன். 'இந்தச் சாமியார் படு முட்டாளாயிருப்பார் போலிருக்கிறதே! விஷயம்இல்லாத விஷயத்தையெல்லாம் போய் இப்படி நம்புகிருரே! யாராவது பெண் பிள்ளை—கிண்பிள்ளை தண்ணீர் — கிண்ணீர் எடுத்து வரக் குடத்தை எடுத்துக் கொண்டு போயிருப்பாள். அதைப் பார்த்து விட்டு இந்தச் சாமியார் மிரண்டிருக்கிருர்!' என்று எண்ணினுன்.

சாமியார் அவர்கள் பேச்சைக் கேட்கவில்லை. அவர்களும் சாமியார் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. சாமியார் திரும்பவும் அவர்களை மேலே போக வேண்டாம் என்று தடுத்துப் பார்த்தார். ஆனுல் அவர்கள் கேட்டால் தானே? போகத்தான் போவோம் என்று பிடிவாதமா யிருந்தார்கள். ''இந்தச் சாமியார் அப்பொழுதே சொல்லாமல் போய் விட்டாரே என்று பின்னுல் என்னைத் தூற்றுதீர்கள். நான் சொல்வதைச் சொல்லி விட்டேன்!'' என்று சொல்லிக் கொண்டே சாமியார் திரும்பவும் ஓட்டம் பிடித்தார்.

இரு சகோதரர்களும் வாள் பிடியிலே கையை வைத்துக் கொண்டு முதுகிலே மூட்டைகளைச் சுமந்து கொண்டு தங்கள் பயணத்தைத்தொடர்ந்தார்கள்.

அவர்கள் சிறிது தூரம்தான் போயிருப்பார்கள். நடுவழியிலே அவர்களுக்கு ஒரு பட்டுப் பை கிடைத்தது. அதை எடுத்தார்கள்; மிகவும் கனமாயிருந்தது. திறந்து பார்த்தார்கள். ஆயிரம் மோகராக்கள் அதிலே கண்ணைப் பறிக்கும் பிரகாசத்துடன் கணகண வென்று ஒலித்தவாறு பளிச்சிட்டன. அவர்களது விழிகள் வியப்பினுல் விரிந்தன. முகமும் மனமும் மகிழ்ச்சியினுல் மலர்ந்தன.

அப்பொழுது இரு சகோதரர்களும் ஒருவரை யொருவர் முந்திக் கொண்டு சொன்னுர்கள்: ''கண் இமைக்கும் நேரத்துக்குள்ளே நாம் எவ்வளவு பெரும்

பணக்காரர்களாகி விட்டோம்! இவ்வளவு மோகராக்களையும் கொண்டு நாம் வீடு மட்டுமா கட்டுவோம்? வாழ்நாள் முழுதும் ஆனந்தமாக உண்டு உடுத்தி, கஷ்டம் என்பது என்னவென்று தெரியாமலே வாழலாமே!''

உடனே அவ்விருவர் மனக் கண்ணெதிரிலும் சாமியார் தோன்றினார்.

சகோதரர்கள் இருவரும் வாய்விட்டு உரக்கச் சிரித்தார்கள். ''சாமியார் எத்தனை பெரிய படு முட்டாள்! இந்த மோகராப் பையைப் பார்த்து விட்டுப் பேய் என்று எண்ணிக் கொண்டல்லவா வேகமாக ஓடியிருக்கிறார்!'' என்று பேசிக் கொண்டனர்.

பிறகு இருவரும் பையை எடுத்துக் கொண்டு திரும்பினார்கள். மங்களபுரியை நோக்கி முன்னேறவில்லை. ஆமாம், எதற்காக முன்னேற வேண்டும்? எந்த நோக்கங்கொண்டு அவர்கள் மங்களபுரிக்குப் புறப்பட்டார்களோ, அதுதான் நடுவழியிலேயே நிறைவேறி விட்டதே! ஆயுள் முழுவதும் ஓடாக உழைத்தாலும் அவர்களுக்கு ஏக காலத்தில் இவ்வளவு பொன் கிடைக்குமா? வழி நெடுகிலும் தங்கள் அதிர்ஷ்டத்தைத் தாங்களே புகழ்ந்து கொண்டார்கள்.

சிறிது தூரம் சென்றதும் அவர்களுக்குப் பசிக்கத் தொடங்கியது. ஓர் ஆற்றங்கரையை அடைந்து ஒரு மரத்தினடியிலே அவர்கள் தங்கினார்கள். முதுகிலே சுமந்து சென்றிருந்த மூட்டைகளை அவிழ்த்தார்கள். கற்களைத் தேடி எடுத்து அடுப்புக் கட்டினார்கள். இங்குமங்கும் சென்று விறகு பொறுக்கி வந்து அடுப்புப் பற்ற வைத்தார்கள். பிறகு அடுப்பில் பானையை ஏற்றிப் பொங்கல் பொங்கத் தொடங்கினார்கள்.

பொங்கல் முக்கால் பாகத்துக்குமேல் வெந்ததும், ''அமரசிம்மா! போய்க் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா!'' என்றான் அண்ணன் சமரசிம்மன்.

பொங்கல் தளதளவென்று பொங்கிக் கொண்டிருந்த பொழுது, சமரசிம்மனின் கண்கள் மோகராப் பையிலே போய் நிலைத்தன.

திடீரென்று அவன் மூளையிலே ஓர் எண்ணம் பளிச்சிட்டது. 'அநாவசியமாகத் தம்பி அமரசிம்மனைப் பின்னோடு ஏன் அழைத்து வந்தோம்? நாம் மட்டும் தனியாக வந்திருந்தால், இந்த மோகராக்கள் அனைத்தும் நமக்கே அல்லவா கிடைத்திருக்கும்?'

மோகராக்களிடம் எழுந்த மோகம் அவன் வெண்ணெய் போன்ற மனத்தைத் திரித்துக் கெடுத்துவிட்டது. அமரசிம்மனையே வேலை தீர்த்து விட்டால் என்ன என்றுகூட அவன் எண்ணினான்.

இவ்வெண்ணம் வலுப்படவே, அவன் தன் மடியில் வைத்திருந்த விஷத்தை எடுத்துப் பொங்கலோடு கலந்து விட்டான். போரிலே காயம் - ஈயம் பட்டு அவதிப்பட நேர்ந்தால், அதை உண்டு உயிரை மாய்த்துக் கொண்டு விடுவது என்ற முன்யோசனையுடன் வைத்திருந்த விஷம் இப்பொழுது அவனுக்குக் கை கொடுத்து உதவியது.

பிறகு மனக் கவலையை அகற்றிவிட்டு அமரசிம்மனின் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கலானான்.

அங்கே ஆற்றிலே நீர் மொண்டு கொண்டிருந்த அமரசிம்மனின் உள்ளத்திலும் இதே போன்ற எண்ணம் தோன்றியது. 'அநாவசியமாக அண்ணனையும் ஏன் கூட அழைத்து வந்தோம்? தனியாக வந்திருந்தால், கிடைத்துள்ள மோகராக்கள் அத்தனைக்கும் நாமே உரிமையாளனாக ஆகியிருக்கலாம் அல்லவா......?'

பேராசைப் பேயிடம் வசமாக மாட்டிக் கொண்டு விட்ட அவன், திரும்பிச் சென்றதும் முதல் காரியமாகச் சமரசிம்மனைத் தன் வாளுக்கு இரையாக்குவது என்று முடிவு செய்து கொண்டான்.

அவன் மெதுவாகப் பூனை போல் அடி எடுத்து வைத்துப் பேச்சு மூச்சு காட்டாமல் சமரசிம்மனுக்குப் பின்னால் போய் நின்றான். வாளை உருவி ஒரே வீச்சில், அவன் தலையைச் சீவி இளநீர் எனத் தரையில் உருளச் செய்தான். ஒரு கணம் துடித்து விட்டுச் சமரசிம்மனின் சடலம் குளிர்ந்து அடங்கிவிட்டது.

அவன் சடலத்தை ஆற்றிலே இழுத்து விட்டு விட்டு அமரசிம்மன் கைகால்களைக் கழுவிக் கொண்டு கரையேறி வந்தான், கூடிய விரைவில் வீடு போய்ச் சேர வேண்டும் என்ற நினைப்புடன்.

அப்பொழுதுதான் பதமாகி யிருந்த பொங்கல் அவன் கண்களில் பட்டது. இவ்வளவு சிரமப்பட்டுச் சமைத்த பொங்கலைச் சாப்பிடாமல் விட்டுச் செல்வது உசிதமல்ல என்று அவனுக்குத் தோன்றியது. இனி மேல் அவன் தானே அத்தனை மோகராக்களுக்கும் உரிமையாளன்? அதில் பங்கு கேட்கக் கூடியவன் தான் உலகத்தைவிட்டே ஒழிந்து விட்டானே! இனி வீடுபோய்ச் சேர அவசரப் படுவானேன்? உண்டு களித்து விட்டு ஆற அமரப் போனால் போயிற்று!

சப்பணம் கொட்டி உட்கார்ந்து கொண்டு பொங்கல் சாப்பிடலானான்.

பொங்கலிலோ விஷம் கலந்திருந்தது.

ஐந்தாறு கவளங்கள்தான் சாப்பிட்டிருப்பான். அவன் உடல் நலம் கெட்டு விட்டது. விஷம் தன் வேலையை வேகமாகச் செய்து விட்டது. உடல் ஒன்றுக்கும் பயனின்றித் தரையிலே உருண்டது.

தரையிலே கிடந்த பையில் கட்டுண்டிருந்த பேய் அட்டகாசச் சிரிப்பொன்று சிரித்தது! [ஆதாரம்: ஹிந்திக் கதை]



தொலைபேசி மணி கணகணத்தது.

"உனக்கு என்னடா மானேஜர் அறையிலே ஸீட். எங்களைமாதிரி கும்பலிலே கோவிந்தா போடுகிற ஆசாமியா?" என்று ராமச்சந்திரன்மீது கண் போட்டவர்கள் மற்றச் சகாக்களில் எத்தனையோ பேர்கள் இருந்தனர்.

"மானேஜர் பன்னிரண்டு மணிக்கு வந்து சேருகிறவரை அவர்தானே தனிக் காட்டு ராஜா!" என்று குத்தலாகப் பேசியவர்கள் எத்தனையோ பேர்.

டெலிபோன் மணியடித்தால் ராமச்சந்திரன் குடு குடு வென்று ஓடிப்போய், மானேஜருக்குப் பதிலாகப் பேசிச் சமாளிக்கும் காட்சியை வெறும் வார்த்தைகளினால் மட்டும் விவரித்துவிட முடியுமா?

வருடத்தில் பன்னிரண்டே முறைகள் வரும் பொன்னாட்களில், அன்று ஒரு நாள். ஆம். சம்பளம் கொடுக்கும் நன்னாள். அப்போதுதான் கற்றையாக ஒரு ரூபாய் நோட்டுக்களாக – 'காஷியர்' கொடுத்திருந்த சம்பளத்தை எண்ணித் தன் பையில் வைத்துக் கொண்டான் ராமச்சந்திரன்.

தொலைபேசி மணி கணகணத்தது.

"அடசட்! மாசத்திலே ஒரு நாள் மனுஷன் கையிலே காசு சரியாக இருக்கான்னு எண்ணிப் பார்க்கக்கூட முடியல்லே! இந்த டெலிபோன் மணியடிச்சுத் தொலைக்கிறது..., இந்த டெலிபோன் அடிக்கடி நம்மை அலைய வைக்கிற தொல்லைக்காவது இந்த மானேஜர் சீக்கிரம் வந்து தொலையப்படாதோ?'

மணி பதினொன்றேகால் ஆகியும் மானேஜர் மார்த்தாண்டம் இன்னும் ஆபீஸ் வரவில்லை. அவரைப் பொறுத்தவரை அவருக்குச் சம்பளத் தேதியோ, சாதாரணத் தேதியோ எல்லாம் ஒன்றுதான்! அதாவது ஆபீசுக்கு மணி பன்னிரண்டுக்குத்தான் வந்து சேருவார்.

தொலைபேசி மணி கணகணத்தது.

ராமச்சந்திரன் குஷியுடன் இருந்ததால் தொலைபேசிக் குழலைக் கையிலெடுத்துத் தன் மானேஜர் பேசுவது போலவே, "மானேஜர் ஹியர்" என்றான். இப்படிச் செய்வதில் அலாதி இன்பம் கண்டான் அவன். மானேஜரின் அறைக்குள்ளேயே அவன் மேஜையும் போடப்பட்டிருந்ததால், அவன் அவரைப் போலவே பேசுவதை மற்ற யாரும் காண முடியாததால், அடிக்கடி இப்படியே தைரியமாக இரவல் குரல் செய்யச் சௌகரியமாகப் போய் விட்டது.

"ஹலோ...மானேஜர் சாரா?" என்றது குழல் மூலம் வந்த குரல்.

"மானேஜர் இன்னும் வரவில்லை. ஏதாவது விஷயம் இருந்தால் சொல்லுங்கள். அவர் வந்தவுடன் அவருக்குத் தெரிவிக்கிறேன். இது ராமச்சந்திரன்."

"உங்க ஆபிஸ் ராமச்சந்திரனுடைய அண்ணா பேசறேன். என் தம்பி ராமச்சந்திரனுக்கு ஒரேயடியாக ஜுரம். 105 டிகிரிக்கு மேலே அடிக்கிறது. இப்பக்கூட அவனுக்கு மருந்து வாங்க வந்த 'பார்மஸி'லேயிருந்துதான் பேசறேன். அவனுக்கு இரண்டு நாட்கள் லீவு கொடுக்க வேணும்."

ராமச்சந்திரனுக்குக் கிர்ரென்று தலையைச் சுற்றியது. தொலைபேசியின் குழல் கை நழுவப் பார்த்தது. ஒரு சில விநாடிகள்தான் இப்படித் தடுமாறினான் அவன். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்ட அவன், "அட பாவி.....! கோபாலா பேசறது?" என்றான்.

"ஆமாம்.. யாரு ராமுவா பேசறது ஏண்டா, இன்னிக்கு ஆபீஸ் போயிட்டியா? பின்னே எதுக்குடா இன்னிக்கு டெலிபோன் பண்ணச் சொல்லி முந்தா நாள் சனிக்கிழமை என்னிடம் சொன்னே?" என்றான் எரிச்சலுடன்.


"அப்பா, புண்ணியவானே! உன்னை அடுத்த திங்கட்கிழமை அதாவது எட்டாம் தேதி டெலிபோன் பண்ணச் சொல்லிச் சொன்னா, இன்னிக்கே பண்ணிட்டியா? நல்ல வேளை. மானேஜர் இன்னும் வரவில்லை. என் வேலை பிழைச்சது. தப்பியது தலை! இன்னிக்கு முதல் வேலையா எங்க தெரு பிள்ளையாருக்கு மூணு சூர்த் தேங்காய் விடவேணும்."



முன் ஜாக்கிரதை மிக்க எனக்கு அந்த சினிமாக் கொட்டகையை விட்டுக் கும்பலால் உந்தப்பட்டு வெளியே வருவதற்குள் உடம்பெல்லாம் வியர்த்து விட்டது! ஜிப்பாவுக்குள் இருந்த பர்ஸை ஒரு கையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே மூச்சையும் பிடித்துக் கொண்டு முன்னேறி மெள்ளப் பஸ் ஸ்டாண்டை அடைந்தேன். அப்பாடா! ஒரு கண்டத்திலிருந்து தப்பியாகி விட்டது. அடுத்த கண்டம் தான் மிகவும் பெரியது. இன்று வரை பஸ்ஸில் பர்ஸைப் பறிகொடுக்காத எனக்கு அந்த அனுபவம் அன்று ஏற்பட்டு விடுமோ என்று நினைத்தவுடன் என் அங்கங்கள் பதறின. அவமான உணர்ச்சியும், பயப்பிராந்தியும் சேரவே தலை 'கிர்' என்று சுற்றியது. நாக்கு வறண்டது!

பஸ் ஸ்டாண்டில் இருந்தவர்கள் எண்ணிக்கை நாற்பதானதும்தான் ஒரு பஸ் வந்து நின்றது. "ஐந்தே ஐந்து பேர்" என்று கண்டக்டர் பஞ்சசீலத்தைக் கடைப்பிடித்து வலது கையை மலரத் திறந்து அபயஹஸ்தம் காட்டினார்! இந்தக் கண்டக்டராவது பஞ்ச பாண்டவர்களுக்குத் தன் பஸ்ஸில் நிற்க இடம் தருகிறேன் என்கிறார். வரப்போகும் பஸ்களில் நிலைமை எப்படியிருக்குமோ? என்னை ஒரு கணம் அர்ஜுனனாக நினைத்துக்கொண்டு இரண்டு கைகளாலும் கும்பலை வீசி விலக்கிக் கொண்டு காண்டீபம் போன்று சற்று வளைந்திருந்த இரும்புக் கம்பியைப் பிடித்து புட்போர்டில் தாவி பஸ்ஸுக்குள்ளும் புகுந்து விட்டேன்! அந்த ஒரே ஒரு கணத்தில், நடக்கத் தகாதது நடந்து விட்டது. "என் பர்ஸ் போயே போய் விட்டது! எந்தப் பாவியோ அதை எடுத்து விட்டானே!" என்று கூச்சல் போட்டுச் சகபிரயாணிகளுடைய அனுதாபத்தைப் பெற நான் விரும்பவில்லை. என் பர்ஸைத் திருடிவிட்ட அந்த அப்பாவிக்காகத்தான் நான் மௌனமாக என் மனமார்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பித்துக் கொண்டேன். அந்தப் பர்ஸ் பார்க்க ஆடம்பரமாக இருந்தாலும் அதில் ஒன்றுமில்லை. அதை எவனுவது திருடி விட்டு ஏமாந்து போகப் போகிறானே என்ற கவலையும் கழிவிரக்கமும் தான் எனக்கு ஆரம்பத்திலிருந்து ஏற்பட்ட உணர்ச்சி.

"ஸார் டிக்கெட்!" என்ற கண்டக்டரிடம், ஜிப்பாவின் மற்றொரு ஜேபியிலிருந்த நயா பைசாக்களைத் திரட்டி, "ஒரு பதின்மூன்று நயா பைசா டிக்கெட் கொடு" என்றேன்!



சிந்தனையை வளர்க்கும் சித்திரப் போட்டி

குழந்தைகளின் மனோதர்மத்தையும் கற்பனையையும் வளர்ப்பதற்கென்றே வருடா வருடம் சங்கர்ஸ் வீக்லி ஸ்தாபனத்தினர் நடத்தும் குழந்தைகள் சித்திரப் போட்டி உலகப் பிரசித்தி பெற்றதாகி விட்டது. **1949-ம்** ஆண்டு இந்தியக் குழந்தைகளுக்கு மட்டுமே ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போட்டி **1950** லிருந்து உலகத்துக் குழந்தைகளெல்லாம் கலந்து கொள்ளும் ஒரு கோலாகலப் போட்டியாகி, சென்ற ஆண்டு **74** நாடுகளிலிருந்து **70,000** படங்களும் **3000** கட்டுரைகளும் வந்து குவிந்திருக்கின்றன என்றால் இதன் பெருமையைப்பற்றி வேறு என்ன சொல்வது?

மிகச் சிறந்த சித்திரத்துக்கு ஜனாதிபதியின் தங்கப் பதக்கமும், மிகச் சிறந்த இலக்கியக் கட்டுரைக்கு உபஜனாதிபதியின் தங்கப் பதக்கமும், சிறந்த படங்கள் கட்டுரைகளுக்குப் பிரதம மந்திரியின் விசேஷப் பரிசுகளும் இவை தவிர நானூறுக்கும் அதிகமான பரிசுகளையும் வழங்கி வருங்காலச் செல்வங்களின் சிந்தனாசக்தியை வளர்க்க ஊக்க மூட்டி வருகிறார்கள்.

இந்தப் போட்டியில் இவ்வருஷம் (**1961**) நம் இந்தியக் குழந்தைகள் இன்னும் அதிகமாகக் கலந்து கொண்டு நம் பாரதத்தின் பெருமையை உயர்த்த வேண்டும்.

1961-ம் வருஷப் போட்டிக்குப் படங்களையும் இலக்கியப்படைப்புக்களையும் நவம்பர் **30-ந்** தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும். இப்போட்டி சம்பந்தமான முழு விவரங்களையும் அறிய வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்:

Shankar's International Children's Competition, Odeon Building, P.O. Box No. 218, New Delhi.



தமிழ் கூறும் நல்லுலகம்

நாட்டியம் நாடகம், சங்கீதம், கதாகாலட்சேபம் இவைகளின் வளர்ச்சிக்காகப் பூனாவில் ஆர்ட்ஸ் அகாடமி அருந்தொண்டாற்றி வருகிறது. அக்டோபர் 7-ந் தேதி எம். ஈ. எஸ். ரெக்ரியேஷன் ஹாலில் குமாரி செல்லம் அவர்களின் பரதநாட்டியம் முதன் முதலாகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீமதி தில்பகதூர் ராய் இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்தார். தேஹூ ரோடில் உள்ள உயர்தர ராணுவ அதிகாரிகளும், அவர்களது குடும்பத்தினரும் பொது மக்களும் குமாரி செல்லத்தின் நடனத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

*

அக்டோபர் 8-ந் தேதி ஆமதாபாத் தமிழ் மன்றத்தினர் பாரதி விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடினர். உயர்திரு சி. ஆர். ரகுநாத் அவர்களின் தலைமையில் நடந்த இவ்விழாவில் ஸ்ரீமதி லக்ஷ்மி சுப்பிரமண்யம், திருவாளர்கள் பா. சுப்பிரமணியம், வி. ராமன், தி. நெடுமாறன் முதலியோர் சொற்பொழிவாற்றினர். அன்று நடந்த இசை நிகழ்ச்சிகளில் ஸ்ரீமதி பாக்கியம் கிருஷ்ணன், ஸ்ரீமதி ஜானகி விசுவநாதன், திருவாளர்கள் ர. வே. துரை, ஆர். கிருஷ்ணமூர்த்தி, த. க. அம்பிகாபதி முதலியோர் கலந்து கொண்டனர்.

*

புஷாவல் தென்னிந்தியக் கழகத்தின் ஆதரவில் மனிதன் என்ற நாடகம் சென்டிரல் ரயில்வே ஸீனியர் இன்ஸ்டிட்யூட் ஹாலில் அக்டோபர் 7-ந் தேதி நடைபெற்றது. இந்த நாடகத்துக்கு விஜயம் செய்த ஜலகான் கலெக்டர் திரு எம். சுப்பிரமணியம் அவர்கள் இந்தக் கலை நிகழ்ச்சியைச் சிறப்புற நடத்திய தென்னிந்தியக் கழகத்தைப் பாராட்டினார். ஸ்ரீமதி சரோஜா சுப்பிரமணியம் அவர்கள் நாடகத்தில் பங்கு கொண்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்.

இலங்கை மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம், இப்பகுதி மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் வளர்ச்சிக்காக, பரவலான முறையில், பேச்சுப் போட்டி ஒன்றையும் கட்டுரைப் போட்டி ஒன்றையும் சமீபத்தில் நடத்தி முடித்தது. பேச்சுப் போட்டிக்கு ஸ்ரீமதி கங்கேஸ்வரி கந்தையா, திருவாளர்கள் வி. குமாரசாமி, வித்வான் கமலநாதன் ஆகியோர் நீதிபதிகளாக இருந்து பேச்சாளர்களைத் தெரிவு செய்தனர். இவ்விரு போட்டிகளிலும் வாகை சூடிய மாணவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களையும், அறிவு நூல்களையும், சான்றிதழ்களையும் அள்ளி வழங்கியது. அத்துடன் நில்லாது இந்த விழாவினை ஒரு முத்தமிழ் விழாவாகவும் நடத்தி முடித்தது.

மட்டக்களப்பு சுகாதாரத் துறைத் தலைவர் டாக்டர் கே. சிவஞானரத்தினம் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினர். செல்விகள் சாரதா நவரத்தினம், லலிதா நவரத்தினம் இருகுரலிசையில் தமிழ் மொழி வாழ்த்துப் பாட, மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு ரீ. பாக்கிய நாயகம் அவர்கள் வரவேற்புரை வழங்கினர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கியவர் மட்டக்களப்புப் பகுதி உதவிக் கல்வி அதிபதி திரு ஏ. ராஜகாரியர் அவர்கள்.

இவ்விழாவில் பாரதி நினைவு மலரான 'மலரும் தளிரும்' வெளியீட்டைத் திரு திமிலைத் துமிலன் தலைவரிடம் வழங்கினர். மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றப் பாடசாலை மாணவிகளின் நடன விருந்தும், செல்விகள் பிரேமளா தேவி, சரோஜினி தேவியாரின் யாழிசையும் இடம் பெற்றன. அதோடு இலங்கை எழுத்தாளர்கள் பங்கு பற்றிய 'பண்ணையார் மகன் பண்ணையார்' என்ற நகைச்சுவை நாடகமும் நடைபெற்றது. செயலாளர் திரு எப். ஜீ. ஜெயசிங்கம் நன்றி நவில விழா இனிது நிறைவேறியது.

இலங்கை மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம் நடத்திய முத்தமிழ் விழாவில் திரு பாக்கிய நாயகம் உரை நிகழ்த்துவதையும், வீணைக் கச்சேரி வழங்கியவர்களையும், திரு திமிலைத்துமிலன் பாரதி நினைவு மலரைத் தலைவரிடம் வழங்குவதையும் காணலாம்.







பாலில் தண்ணீர் கலப்பதைத் தடுக்க நீங்கள் தண்ணீருக்கு வர்ணம் கொடுப்பீர்களா ?

பாலில் தண்ணீர் கலக்கப்பட்டால் பால்காரனைத்தான் குறை கூறுவீர்களே ஒழிய தண்ணீர் அளிக்கும் முனிஸிப்பாலிட்டி மீது நீங்கள் குற்றம் சாட்டமாட்டீர்கள் ! பாலில் தண்ணீர் கலப்பதைத் தடுப்பதற்காகத் தண்ணீருக்கு வர்ணம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தவும் மாட்டீர்கள் !

ஆனால் இதைப் போன்ற நெய் கலப்படம் விஷயத்தில் மாத்திரம் சில பேர்கள், நெய்யில் வனஸ்பதி கலப்படம் செய்வதைத் தடுக்க வனஸ்பதிக்கு வர்ணம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள்.

இரக்கமற்ற மனிதர்கள் நெய்யில் கலப்படம் செய்வதற்கு அநேகவித பொருள்களை உபயோகிக்கிறார்கள் ... வனஸ்பதி ஒன்றை மட்டும் அல்ல ! வர்ணம் கொடுப்பதன் மூலமோ அல்லது இதர முறையிலோ கலப்படம் செய்வதற்கு வனஸ்பதியை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்க முடிந்தால்கூட, நெய்யில் கலப்படம் செய்வதற்கு மினரல் எண்ணெய்களும், மிருகக் கொழுப்புகளும் இருக்கவே இருக்கின்றன. இவைகள், பரிசுத்தமற்றவை, அருவருப்பு உண்டாக்கக் கூடியவை; மற்றும் மனித ஆரோக்கியத்திற்கே கெடுதி விளைவிக்கக் கூடியவை !

கலப்படத்தைத் தடுக்க இரு வழிகள்

வனஸ்பதிக்கு வர்ணம் கொடுப்பதில் அர்த்தமில்லை. ஏனென்றால் முக்கியமாக நெய் கலப்படத்தைத் தடுக்க கீழே கொடுக்கப்பட்டுள்ள இரு சிறந்த வழிகள் உள்ளன.

1. வனஸ்பதி ஸீலிட்ட டின்களில் விற்கப்படுகிறது. சில நகரங்களில், பால் முதலிய உணவுப் பொருள்களும் ஸீலிட்ட டின்களிலும், பாட்டில்களிலும் விற்கப்படுகின்றன. அம்மாதிரி, நெய்யும் ஸீலிட்ட டின்களில் விற்கப்பட வேண்டும்.

2. கலப்படம் செய்பவர்கள் மீது உணவு சம்பந்தமான சட்டப்படி கடுமையான நடவடிக்கைகள் எடுத்தல். நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை அரைகுறை நடவடிக்கைகள் போதா !



வனஸ்பதியைப் போன்ற கொழுப்புச் சத்துக்கள் உலகம் பூராவும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன


அமெரிக்கா-அயர்லாந்து-அர்ஜெண்டினா-அல்பேனியா-அல்ஜீரியா - ஆஸ்திரேலியா-ஆஸ்திரியா - இங்கிலாந்து - இத்தாலி - இந்தியா - இஸ்ரேல் - ஈராக் - ஈரான் - எத்தியோப்பியா - ஏமன் - கானடா - கிரீஸ் - செக்கோஸ்லவேகியா-டென்மார்க்-துருக்கி-தென் ஆப்பிரிக்கா யூனியன் - நார்வே - நெதர்லாண்ட்ஸ் - நைஜீரியா - பர்மா - பல்கேரியா - பாகிஸ்தான் - பிரான்ஸ் - பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்கா - பிரேஜில் - பின்லாந்து - பெல்ஜியம் - போர்ச்சுகல் - போலந்து - மத்திய ஆப்பிரிக்கா பெடரேஷன் - மலாயா - மெக்ஸிகோ - மொராக்கோ - யுனைடெட் அரபு ரிபப்ளிக்-யூகோஸ்லேவியா-ரஷ்யா - ருமேனியா - லிபியா - ஜப்பான் - ஜெர்மனி (கிழக்கு-மேற்கு)-ஸவூதி அரேபியா-ஸ்விட்ஜர்லாந்து-ஸ்வீடன்-ஹங்கேரி

அதிக விவரங்களுக்கு இந்த விலாசத்துக்கு எழுதுங்கள் :

தி வனஸ்பதி மான்யுபாக்சரர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா

இந்தியா ஹவுஸ், போர்ட் ஸ்டிரீட், பம்பாய்-1

JWT-VMA2692



பாங்க் தொழில்

நாட்டின் செல்வத்தைப் பெருக்குகிறது



பஞ்சாப் நேஷனல் பாங்க் நாட்டின் தொழிலுக்கும், விவசாயத்திற்கும், வாணிபத்திற்கும் பணி யாற்றுகிறது



எல்லாவித பாங்க் பணிகளும் அளிக்கிறது.



தி பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட்.

ஸ்தாபிதம் 1895

தலைமைக் காரியாலயம்: புது டில்லி.

உங்கள் சருமத்தை சுத்தமாக வையுங்கள்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தால் முகப் பருக்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும், வழவழப்பாகவும் மாசு மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள், கட்டிகள் செந்நிறத் தழும்புகள், மேலாகப் பரவும் படை, படர்தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும் பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழித்தாலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப்பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் அது இருக்கச் செய்யும். என்ற பூர்ண நம்பிக்கையுடன் நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள்.

நீங்கள் உறங்கும்போதே ஆஸ்துமா சளிகரைகிறது

மூச்சுத் திணறல், இருமல், சிரமப்பட்டு மூச்சு விடுதல், சுவாசம் தடைப்படுதல், ஆஸ்த்மா, ப்ராங்கைடீஸ், ஜலதோஷம், குளிர் சுரம் முதலிய உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இப்பொழுது மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டு நிவாரணம் அடையலாம். இந்த நவீன விஞ்ஞான அமெரிக்க மருந்து, இரத்தத்தின் மூலமாக சுவாசப் பைகள் சுவாசக் குழாய்கள் மற்றும் மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் மற்றும் சிரமப்பட்டு மூச்சு விடுதல் இல்லாமல் சுகமாகச் சுவாசித்துக் குழந்தைபோல் தூங்கலாம். பூரண திருப்தி உங்களுக்கு அது நிச்சயமாக அளிக்கும்.

சுசீந்திரம் தாணுமாலயன்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

"உலகங்கள் எல்லாவற்றையும் இறைவன் உண்டாக்குகிறான். கொஞ்ச காலம் நிலை பெறச் செய்கிறான்: பின்னர் அவைகளை அழிக்கிறான்; இது அவனுக்கு விளையாட்டு. இந்த விளையாட்டானது காலத்தால் ஒரு தொடர்ச்சியாகவும், இடத்தினால் எங்கும் வியாபித்ததாயும் நடக்கிறது. நம்முடைய செயல் ஒவ்வொன்றும் அந்த விளையாட்டுக்குள் அடங்கியுள்ளதுதான். அவனே நமக்குத் தலைவன். நமக்குப் புகலிடமும் அவனுடைய சரணங்களே' என்று விளக்கமாகக் கம்பன் ராமாவதாரம் என்னும் பார காவியம் எழுதத் தொடங்கும் முன்னே பரம்பொருள் வணக்கம் செய்கிறான்.

உலகம் யாவையும்
 தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும்
 நீக்கலும் நீங்கலா
அலகிலா விளை
 யாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்
 கேசரண் நாங்களே.

என்பது அவனது பாட்டு. இதிலிருந்து உலகுக்கு எல்லாம் ஒருவனே இறைவன் என்பதை அறிகிறோம். அவனேயே சிருஷ்டித் தொழில் செய்யும்போது பிரமன் என்கிறோம், காத்தல் தொழில் செய்யும்போது விஷ்ணு என்கிறோம்; அழித்தல் செய்கிறபோது சிவன் என்கிறோம். இவர்களில் சிவன் விஷ்ணுவாக மாறுவதையும், விஷ்ணு சிவனாக மாறுவதையும் இருவரும் இணைந்து ஒரே கோலத்தில் இருப்பதையும் சில தலங்களில் முன்பே பார்த்திருக்கிறோம். ஆனால் சிவன், விஷ்ணு, பிரம்மா மூவரும் ஒன்றாக இணைந்து நிற்கும் கோலத்தை — சிருஷ்டி, திதி, சங்காரம் என்னும் முத்தொழில் செய்பவர்கள் மூவரும் இணைந்து நிற்கிற கோலத்தை - நாம் இது வரையில் காணவில்லை. அந்தத் தாணு, மால், அயன் மூவரும் இணைந்து நிற்கும் கோலத்தைக் காண்பதற்குச் சுசீந்திரம் என்ற தலத்துக்குச் செல்ல வேண்டும்.

சுசீந்திரம் செல்லத் திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து முதலில் நாகர்கோவில் செல்ல வேணும். அங்கிருந்து கன்யாகுமரி செல்லும் பாதையில் நாகர்கோவிலிலிருந்து மூன்று மைல் சென்றால் சுசீந்திரம் வந்து சேரலாம். கார் வசதி உள்ளவர்கள் காரிலேயே செல்லலாம். இல்லையென்றால் பஸ்ஸிலேயே செல்லலாம். பழையாறு என்ற ஆற்றின் கரையில் இருக்கிறது சுசீந்திரம். ஆற்றின் தென்கரையிலிருந்து முந்நூறு அடி தூரத்தில் கோயில் இருக்கிறது. கோயில் வாயில் செல்லுமுன்பே கோயிலுக்கு உட்புறம் உள்ள தெப்பக் குளத்தைப் பார்க்கலாம். அங்கு இறங்கிக் கால் கைகளையெல்லாம் சுத்தம் செய்து கொள்ளலாம். கையில் காமரா இருந்தால் கோயில் கோபுரத்தையும் குளத்தையும் சேர்த்து ஒரு படம் பிடித்துக் கொள்ளலாம். நல்ல அழகான படமாக அது அமைவதைத்தான் பார்த்திருக்கிறோமே. கோயில் வாயிலில் நூற்று முப்பத்தி நான்கு அடி உயரமுள்ள கோபுரம் கம்பீரமாக எழுந்து நிற்கும். இங்கேயுள்ள கோபுரத்தின் முன்னால் உள்ள மண்டபத்தின் மேல் முகப்பில் சுதையால் செய்த சிலைகள் உண்டு. நடுவில் சிவபெருமான் இடபாரூடராய் தேவியோடு எழுந்தருளியிருக்கிறார்: மற்றொரு பக்கத்தில் மகாவிஷ்ணு கருடாரூடராய்க் காட்சி அளிக்கிறார். இனி மண்டபத்துள் நுழையலாம். இது 132 அடி நீளமும் 32 அடி அகலமும் 24 அடி உயரமும் உள்ள பெரிய மண்டபம். பெரிய பெரிய தூண்கள் மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. தூண்களின் மேல், பாயும் சிங்கங்கள் இருக்கின்றன. மண்டபத்தின் மேற்குக் கோடி கூரைக்குக் கீழே பார்வதி, லட்சுமி, சரஸ்வதி மூவரும் சேர்ந்து தவக் கோலத்தில் இருக்கும் சிலை ஒன்று இருக்கிறது. தேவியர் மூவரும் ஏன் தவம் செய்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளத் தல வரலாற்றைக் கொஞ்சம் திருப்பவேணும். அத்திரி முனிவர் தம் மனைவி அனசூயாதேவியுடன் இங்குள்ள வனத்தில் வாழ்ந்திருக்கிறார். அனசூயை கற்பொழுக்கத்தில் சிறந்தவளாக இருந்திருக்கிறாள். அவளை ஆசிரமத்தில் விட்டு விட்டு அத்திரி இமய மலைக்குத் தவம் செய்யப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். இச்சமயத்தில் நாரதர் கலகம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். இருப்புக் கடலைகளைக் கொண்டு வந்து பார்வதி, லட்சுமி, சரஸ்வதி மூவரிடமும் கொடுத்து வேக வைத்துத் தரச் சொல்லியிருக்கிறார். அவர்கள் அது இயலாது என்று சொல்லவே அந்த இருப்புக்



''தேர்தல் வருது. உங்க வோட்டை நிச்சயம் எனக்குத்தான் போடணும்.''

''கவலைப்படாதீங்க! அப்படிக் கிழிச்சுப் போட்டாலும் உங்க பொட்டியிலேதான் போடுவேன்!''

''நம்பலாமா?''

''? ? ? ?''



அனுமார்

கடலைகளை அனசூயையிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். அந்த அம்மையார் தமது கற்பின் மகிமையால் வேக வைத்துக் கொடுக்கிறார். இதைப் போய் தேவியர் மூவரிடமும் சொல்லி வைக்கிறார். அவர்கள் ஏவிய வண்ணமே தேவர்கள் மூவரும் அனசூயையின் கற்பைப் பரிசோதிக்க வருகின்றனர், அத்திரி ஆசிரமத்துக்கு. அதிதிகளாக வந்தவர்களை உபசரித்து உணவு பரிமாற அனசூயை முனைகிறபோது, தேவர்மூவரும் அவள் பிறந்தமேனியாகவே தங்களுக்கு அன்னம் பரிமாற வேண்டும் என்கின்றனர். அனசூயையோ தன் கற்பின் மகிமையால் தேவர் மூவரையுமே மூன்று குழந்தைகளாக்கி அவர்களுக்குச் சோறூட்டுகிறாள். நாரதர் மூலம் விஷயம் தெரிகிறார்கள் மூவரும். உடனே மூவரும் அனசூயையிடம் வந்து தங்கள் கணவர்கள் சுயரூபம் அடையத் தவம் கிடக்கின்றனர். அனசூயை தேவர் மூவரையும் பழைய உருவங்களைப் பெறும்படி அருளுகிறாள். அவள் வேண்டிக்கொண்டபடியே தேவர் மூவரும் இணைந்து ஒரே உருவத்தில் அந்தத் தலத்தில் தங்கி விடுகின்றனர் என்பது கதை.

தேவியர் தவம் செய்த காரணத்தைத் தெரிந்து கொள்ள முனைந்த நாம், தாணு மால் அயன் மூவரும் இணைந்து நிற்கும் காரணத்தையுமே தெரிந்து கொண்டோம். இனி கோயிலுள் நுழையலாம். வாயிலைக் கடந்ததும் ஊஞ்சல் மண்டபம் இருக்கிறது. இம்மண்டபம் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே மன்மதன், ரதி, அர்ச்சுனன், கர்ணன் முதலியோரது சிற்ப வடிவங்கள் இருக்கின்றன. ஊஞ்சல் மண்டபத்திலிருந்து வெளிப் பிராகாரத்துக்கு வந்து கிழக்குச் சுற்றுக்குச் சென்றால் அங்கே தட்சிணாமூர்த்தி சந்நிதி இருக்கிறது. தெற்குப் பிராகாரமும் கிழக்குப் பிராகாரமும் சந்திக்கும் இடத்தில் மடைப் புறை இருக்கிறது. தெற்குப் பிராகாரத்தின் ஆரம்பத்தில் வசந்த மண்டபம் உண்டு. அந்தப் பிராகாரத்தில்தான் நீலகண்ட விநாயகர், கங்காளநாதர், கைலாசநாதர் முதலியோர் உள்ளனர். தெற்குப் பிராகாரத்தில் மேலக் கோடியில் ஐயனார் சந்நிதி. அதை ஒட்டியே ராமஸ்வாமி கோயில். ராமரும் சீதையும் வீற்றிருந்த கோலத்தில் காட்சி தருகிறார்கள். லட்சுமணரும் அநுமாரும் கோயில் வாயிலில் நிற்கின்றனர். இந்த வடக்குப்பிராகாரத்திலே தான் சுப்பிரமணியர், காலபைரவர் எல்லாம். சங்கீதத் தூண்கள் வேறே இருக்கின்றன. இப்பிராகாரத்தில் வட கோடியில் சித்திர சபை. சித்திரசபையின் சுவரை ஒட்டிய பிராகாரத்திலே பெரிய ஆஞ்சநேயர் நிற்கிறார். கிட்டத்தட்ட பதினெட்டு அடி உயரத்தில் சிறந்த சிலை உருவில் கம்பீரமாக நிற்கிறார் அவர். சித்திர சபை ஆறடி உயரம் உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட நாற்பத்திரண்டடி சதுரம் உடையது இம்மண்டபம். இங்கு கங்காளநாதர் காளி முதலியோர் கற்சிலைகளாக நிற்கின்றனர். இம்மண்டபத்தில் உள்ள சந்நிதியில் ஒரு கண்ணாடி வைக்கப்பட்டிருக்கிறது. அதுவே நர்த்தன மூர்த்தியாகக் கருதப்படுகிறது.

ஊஞ்சல் மண்டபத்துக்குப் பின்னால் தாணுமாலயன் சந்நிதியை நோக்கி நந்தி இருக்கிறது. பன்னிரண்டு அடி உயரமுள்ள நந்தி சுதையால் அமைக்கப்பட்டதே. சந்தாசாகிபு இந்தப் பக்கம் வந்து இக்கோயிலில் உள்ள சிலைகளைப் பங்கப்படுத்தியபோது இந்த நந்தி அவன் கொடுத்த வைக்கோலைத் தின்று சாணம் போட்டது என்றும், அதன் பின்னரே அவன் சிலைகளை உடைப்பதை நிறுத்தினான் என்றும் கர்ணபரம்பரை கூறுகிறது. நந்திக்குப் பக்கத்திலே கொன்றை மரத்தின் அடியிலே ஒரு லிங்கம். அனசூயையின் வேண்டுகோளுக்கிணங்கி மும்மூர்த்திகளும் இங்கே லிங்கவடிவில் இருக்கின்றனர் என்பர். இந்தத் தலத்தின் தல விருட்சமும் கொன்றை மரம் தான். கொன்றை அடிநாதர் சந்நிதிக்குப் பக்கத்திலே கருடாழ்வார் சந்நிதி. இவற்றையெல்லாம் தரிசித்தபின்னரே துவஜ ஸ்தம்ப மண்டபத்தையும் கடந்து தாணுமாலயன் சந்நிதிக்கு வரவேணும். தாணுமாலயன் சந்நிதிக்குத் தென்புறமே விஷ்ணுவின் சந்நிதி. இங்கேதான் இங்குள்ள மண்டபங்களில் எல்லாம் பெரிய செண்பகராமன் மண்டபம் இருக்கிறது. இம்மண்டபத்தை முப்பத்திரண்டு தூண்கள் தாங்குகின்றன. அத்தனை தூண்களிலும் அழகு அழகான சிற்பங்கள். செண்பக ராமன் மண்டபம், உதயமார்த்தாண்ட மண்டபம் எல்லாம் கடந்தே தாணுமாலயனைத் தரிசிக்க வேணும். கருவறையில் தாணுமாலயன் லிங்க வடிவில் இருக்கிறார். திருமஞ்சனக் காலம் தவிர மற்றைய நேரத்தில் கவசத்தால் மூடப்பட்டே யிருக்கும்.



தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றைச் சுவைத்து ஆவி போன்ற அதன் சத்து குணமளிக்க வேலை செய்வதை உணருங்கள். வலியைக் குறைக்கவும், தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமாகிய கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது. பெப்ஸ் உடனடி நிவாரணம் அளித்து விரைவில் குணமடையச் செய்கிறது.



பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

PPY-34-TAM

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

சோல் ஏஜண்டுகள்:
தாதா & கோ., 86, முனியப்ப நாயக் தெரு, சென்னை-




40 ரகங்களில்

EV/C/

அழகூட்டும்

எல்டீ

வெல்வெட்டுகள்



கோயிலும் குளமும்


இங்கு அபிஷேகம் செய்யும் எண்ணெய் பூமிக்குள் சென்று, கன்னியாகுமரி தீர்த்தத்தில் கலந்து விடுவதாக நம்பிக்கை. இங்குள்ள கருவறையைச் சுற்றியே துர்க்கை, சங்கர நாராயணர் எல்லாம் இருக்கின்றனர்.


பக்கத்திலுள்ள வீரபாண்டியன் மண்டபத்தைக் கடந்தால் மகாவிஷ்ணுவின் சந்நிதிக்கு வருவோம். அவன் நின்ற கோலத்தில் காட்சி கொடுக்கிறான். எட்டு அடி உயரமுள்ள கம்பீரமான வடிவம். இந்த விஷ்ணு, சிவ சந்நிதிகளுக்குப் பின்னுள்ள சுவரில் பள்ளி கொண்ட பெருமாள் வேறே இருக்கிறார். அவரையே அமர புஜங்கப் பெருமாள் என்பர். செண்பக ராமன் மண்டபத்துக்கு வடபுறம் இருக்கும் கோயில்தான் அறம் வளர்த்த அம்மையின் கோயில். இவள் செப்புச்சிலை வடிவில் இருக்கிறாள். தாணுமாலயனைத் தரிசிக்கப் பள்ளியறை நாச்சியார் என்ற வேளாள மாது தன் மகளுடன் வந்ததாகவும் அந்தப் பெண்ணைத் தாணுமாலயன் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டதாகவும் அவளையே அறம் வளர்த்தாள் என்று பிரதிஷ்டை செய்திருப்பதாகவும் வரலாறு. ஒவ்வொரு வருஷமும் மாசி மகத்தன்று தாணுமாலயருக்கும் அறம் வளர்த்தாளுக்கும் ஊஞ்சல் மண்டபத்தில் திருக்கல்யாண உத்ஸவம் நடக்கிறது.

கோயிலை எல்லாம் நன்றாகச் சுற்றிப் பார்த்து விட்டோம். இனி வெளியே வரலாம். ஆமாம், இக்கோயிலிலுள்ள மூர்த்தி தாணுமாலயன் ஆயிற்றே. இத்தலம் மட்டும் சுசீந்திரம் என்று பெயர் பெறுவானேன் என்று கேள்வி எழும் நம் உள்ளத்தில். அகலிகைக் கதை நமக்குத் தெரியும். கௌதமரின் மனைவியான அகலிகையைக் கள்ளத்தனமாக இந்திரன் புணர்கிறான். அதை அறிந்த கௌதமர் அகலிகையைக் கல்லாகவும், இந்திரன் உடல் முழுவதும் யோனியாகவும் ஆகும்படி சபிக்கிறார். பின்னர் தேவர்கள் பிரார்த்தித்தபடி தேவேந்திரன் உடல் எல்லாம் கண்களாகும்படி சாபத்தை மாற்றுகிறார். அந்த இந்திரன் இத்தலத்துக்கு வந்து தவம் கிடந்து சாப விமோசனம் அடைகிறான். அவன் உடலும் சுத்திகரிக்கப்பட்டுப் பழைய உருவை அடைகிறான். இந்திரன் சுசி பெற்ற தலம் 'சுசி இந்திரம்' என்ற பெயரோடு வழங்குகிறது. இங்குள்ள தாணுமாலயனை ஒவ்வொரு இரவும் தேவேந்திரனே பூஜை செய்கிறான் என்று ஒரு நம்பிக்கை. இங்கு அர்த்தசாம பூஜை கிடையாது. ஆதலால் பூஜா திரவியங்களைச் சேகரித்து வைத்து விட்டு அர்ச்சகர்கள் நின்று கொள்வர். அர்த்தஜாம பூஜை அமராபதியில் நடப்பதால் மாலை பூஜை செய்தவர் மறுநாள் காலை கடை திறக்கக் கூடாது என்பது கட்டளை. இது காரணமாக இங்கு பூஜைக்கு இருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். காலையில் கடை திறக்கும்போது 'அகம் கண்டது புறம் கூறேன்' என்று சத்தியம் செய்தே வாயில் திறக்க வேணும் என்பது உத்தரவு. தேவேந்திரன் கட்டளையிட்டபடியே மயன் இங்கு தாணுமாலயருக்கு, இக்கோயிலைக் கட்டினான் என்பது கர்ணபரம்பரை. சேர மன்னர் பலர் இக்கோயிலை விரிவாக்கியிருக்கின்றனர். மண்டபங்கள், கற்சிலைகள் இக்கோயில் எல்லாம் விஜயநகர நாயக்க மன்னர்களால் மேலும் விரிவாக்கப்பட்டிருக்க வேண்டும். இத்தலத்தில் தங்கள் புனிதத்தன்மையை நிலை நிறுத்தக் கொதிக்கும் நெய்யில் கை முக்கும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. இவ்வழக்கத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருவாங்கூரையாண்ட சுவாதித் திருநாள் ராம வர்ம ராஜாவே நிறுத்தியிருக்கிறார். இச் சுசீந்திரம் தாணுமாலயர் கோயில் திருவாங்கூர் மன்னர் ஆட்சியிலே இருந்து வந்திருக்கிறது. நாஞ்சில் நாடு தமிழ் நாட்டோடு இணைந்த போதுதான் இக்கோயிலும் தமிழகத்தோடு இணைந்திருக்கிறது. அது காரணமாகவே நாமும் இக்கோயிலுக்குச் சென்று தாணு, மால், அயன் மூவரும் இணைந்த திருக்கோலத்தைக் கண்டு வணங்கும் பேற்றைப் பெறுகிறோம். கோயிலை விட்டு வெளியே வரும் போது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பாடிய சுசிந்தை மாலைப் பாடலையும் பாடிக் கொண்டே வரலாம்.

திங்கள் உன் கருணை காட்டும்
    தீக்கண் உன் வெகுளி காட்டும்
கங்கை உன் பெருமை காட்டும்
    கடுவும் உன் ஆண்மை காட்டும்
சிங்கம் நுண் இடையைக் காட்டச்
    சிறையனம் நடையைக் காட்டும்
மங்கையோர் பாகா! தாணு
    மாலயா சுசிந்தை வாழ்வே!

என்பது பாடல். பாடலைப் படிக்கப் படிக்கச் சுவையாக இருப்பதில் வியப்பில்லையே!


PS (F) 6
Why tell him its processed — he's convinced its fresh!
PRINCE
ஸ்பென்ஸரின்
பதம் செய்யப்பட்ட பழங்களுடன்
விருந்தை
மேலும் சிறப்புறச் செய்யுங்கள்
புதிது என அவர் நம்பும்போது பதம் செய்தது என ஏன் சொல்ல வேண்டும்.
Spencer's
Cocktail
Spencer's
LITCHIES
MANGO SLICES
எப்போதும் புத்தம்புதியதாகவே இருக்கின்றன. பதம் செய்யப்பட்ட பழங்கள்!
உங்களுக்குப் பிடித்தமானதைத் தேர்ந்தெடுக்க
ஸ்பென்ஸரின் புரூட்காக்டெயில்ஸ், செர்ரிஸ் மாம்பழத் துண்டுகள், லிச்சிஸ், அன்னாசிப்பழத் துண்டுகள், திராட்சைப்பழம் முதலியன
எப்பொழுதும் ஸ்பென்ஸரின் உயர்தர தயாரிப்புக்களையே கேளுங்கள்
Processed by SPENCER & CO. LTD. IN THEIR MODERN PROCESSING PLANT AT KANPUR U.P.
ஸ்பென்ஸர் கம்பெனிக்காக கான்பூரிலுள்ள நவீன இயந்திர சாதனத்தில் பதம் செய்யப்படுகின்றன



குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் நல்லது



கிருமி நாசினியான வேப்ப எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்டதும், மனோகரமான மணம் தருவதுமான மார்கோ மிக மெல்லிய சருமமுடையவர்களுக்கும் உத்தமமானது. மார்கோ சோப்பின் இளகும் சத்துநிறைந்த நுரை சரீரத்தின் துவாரங்களில் ஆழமாகப் புகுந்து சென்று, சருமத்திலுள்ள எல்லா அழுக்கினையும் போக்கி சுத்தப்படுத்துகிறது. இதன் தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் சோதிக்கப்பட்டுள்ள மார்கோ சோப் உங்களுக்கு அதிக சுகத்தையும், நாள்முழுதும் அதிகத் தூய்மை உணர்ச்சியையும் அளிக்கிறது.

மார்கோ சோப்

குடும்பத்துக்கு உத்தமமான சோப்

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட், கல்கத்தா-29

தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, மதராஸ்

"மூலம் தீராத வினையன்று"

பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்-புதிய நிவாரணி அரிப்பு, எரிச்சல் மற்றும் வலியிலிருந்து குணமளிப்பதுடன் மூலத்தையும் சுருக்குகிறது.



உலகப் பிரசித்தமான ஆராய்ச்சிக் கூடமொன்று மூலத்தைச் சுருக்குவதுடன், வலியற்றமுறையில் குணப்படுத்தக்கூடிய புதிய பொருள் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறது. அப்பொருள் சில நிமிடங்களிலேயே அரிப்பையும் வலியையும் போக்குவதுடன் பாதிக்கப்பட்ட தசைநார்களையும் குணப்படுத்துகிறது. உண்மையாகவே, சுருக்கமும் ஏற்படுகிறது. டாக்டர்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளும்–10, 20 வருஷங்களான கேஸ்களில்கூட–இதை நிரூபித்தன. மேலும் வியக்கத்தக்கதென்னவென்றால், இந்த நல்ல முன்னேற்றம் பல மாதங்களுக்கு நீடித்திருந்தது. உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்கள், இதனால் அடைந்த பூரணக் குணத்தைக் கண்டு வியந்து "மூலம் தீராத வினையன்று" எனக்கூறினார்கள். இவ்வளவு பலன்களும், எந்த விதமான போதை தரும் மருந்துகளோ, அல்லது துவர்ப்பு பொருள்களோ, மயக்க மருந்துகளோ, உபயோகிக்காமல் அடையப் பெற்றவை. இரகசியம் என்னவென்றால், இந்த விசேஷமான புதிய நிவாரணி (பயோ-டைன்*) புண்ணான இடத்தைச் சீக்கிரத்திலேயே குணப்படுத்தி, மறுபடியும் ஆரோக்கியமான தசை துரிதமாக வளர உதவுகிறது. இப்பொருள் களிம்பு வடிவத்தில் ப்ரிப்பரேஷன் H * என்ற பெயரில் கிடைக்கிறது. உண்மையாகவே மூலத்தைச் சுருக்குவதுடன்–ப்ரிப்பரேஷன் H*, வழவழப்பாக்குவதன் மூலம் கழிவுப் பொருள் வெளியேறும் போதுள்ள வலியைக் குறைக்கிறது. அது மூலத்தின் முக்கிய காரணமான இரணம் பரவுவதையும் தடுக்கிறது.

இப்பொழுது இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:

ஜாப்ரே மானேர்ஸ் & கம்பெனி லிட்.

டிரேட்மார்க் உரிமையாளர்கள்:

ஒயிட்ஹால் லாபரட்டரீஸ், U.S.A.

ப்ரிப்பரேஷன் H *

களிம்பு

* டிரேட் மார்க்.



ஓர் உயிர்

தாமரை மணாளன்

சமீபத்தில் புயலாலும் மழையாலும் இயற்கையன்னை தன் சீற்றத்தைக் காட்டியதில் ஆயிரக்கணக்கான மனிதர்கள் பாதிக்கப்பட்டதாகச் செய்தி. அந்தக் கணக்கில் ராக்கப்பனும் சேர்த்தியா என்று எனக்குத் தெரியாது. ஆனால் மற்றவர்கள் ஒப்புக் கொள்வார்களோ மாட்டார்களோ, சிருஷ்டி அமைப்புப்படி ராக்கப்பனும் மனிதன்தான் என்பதாலும் புயல் பிரதேசத்தில் வசித்து வந்ததாலும் அவனும் பாதிக்கப்பட்டது என்னவோ உண்மை. ஆனால் பாதிப்பின் தன்மைதான் மற்றவர்களிடமிருந்து சிறிது வித்தியாசமானது. அது அவனுக்கு நன்மையா, தீமையா என்று எனக்குக் கூறத் தோன்றவில்லை. ஆனால் அவன் சம்பந்தப்பட்ட வரையில் அன்றைய நிகழ்ச்சி அவன் வாழ்வில் ஒரு திருப்பம் என்றுதான் சொல்ல முடியும்.

அவன் தன் செல்வத்தை இழக்க வில்லை; காரணம் ஏற்கனவே அவனிடம் அப்படிப்பட்டது எதுவும் கிடையாது-அவன் பிச்சையெடுக்கும் பாத்திரத்தையும் ஒரு கந்தல் மூட்டையையும் தவிர. அவன் தனி இருப்பிடத்தையும் இழக்கவில்லை. அதற்குக் காரணம் அவன் இருப்பிடம் அவ்வளவு உறுதியானது. கிட்டத்தட்ட அரை லகரச் செலவில் அந்த இடம் கட்டப்பட்டது.

ஆமாம், அந்த நகரத்தில் ராக்கப்பனுடைய ஜாகைதான் ரொம்பப் பெரிய இடம். அறுபதடி உயரமான மணிக் கூண்டைத் தாங்கிக் கொண்டிருக்கும் பத்தடி உயரத் திண்ணையென்றால் சாதாரணமானதா?

அந்த இடம் ராக்கப்பனுடைய குடியேற்றத்தை உத்தேசித்துக் கட்டப்பட்டதாகக் கூற முடியாது. அந்தக் காலத்தில் யாரோ ஒரு வெள்ளைக்கார ராஜாவின் ஞாபகார்த்தமாக உள்ளூர்ப்பிரமுகர் ஒருவர் கட்டியதாம். அது எப்படியிருந்தாலும், தற்சமயம் அது ராக்கப்பனின் வில்லங்கமற்ற சுவாதீனத்தில் இருந்து வருவது நிதரிசனமான உண்மை.

அந்தப் பத்தடி உயரத் திண்ணையில் மூன்றடி உயரத்தில் குகை போன்று உள் வாங்கிய பொந்துத் திண்ணையொன்று; சுவரில் பதித்திருக்கும் மாடக்குழி போல. அந்தப் பொந்துத் திண்ணைக்குள் ஒரு நபர் உட்கார, படுக்கப் போதுமான வசதியுண்டு. ஆதியில் சுமைதாங்கியாகப் பயன்படத்தான் அந்தப் பொந்துத் திண்ணையைக் கட்டியிருக்கலாம். ஆனால் அது இப்பொழுது ராக்கப்பன் என்ற உயிர்ச் சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த இடம் ராக்கப்பனின் ஆக்கிரமிப்புக்குட்பட்டது ஒரு ரசமான விருத்தாந்தம். ராக்கப்பனுக்கு முன் வேறொரு குடும்பம் அந்தத் திண்ணைக்கு உள்ளும் புறமுமாகக் குடியிருந்தது. அவர்களும் ராக்கப்பன் இனத்தைச் சேர்ந்த பிச்சைக்காரர்கள்தாம். ஆனால் அவர்களுக்கில்லாத ஒரு விசேஷமான தகுதி ராக்கப்பனிடம் இருந்தது. அதைக் கொண்டுதான் அவனால் அந்த இடத்தைக் கைப்பற்ற முடிந்தது. அதுதான் அவன் உடம்பில் இருந்த ரோகம், வியாதிகளுக்கெல்லாம் தலைமை தாங்கக் கூடிய தகுதிபெற்ற 'பெரிய வியாதி!'

அந்தத் திண்ணையருகே அவன் காலடி எடுத்து வைத்தபோது அவன் வரவுக்குப் பலத்த ஆட்சேபம் தெரிவித்து எதிர்த்தனர் பழையவாசிகள். ஆனால் ராக்கப்பன் விடாப்பிடியாகத் தன் மூட்டையை இறக்கித் தன் ஜாகையை ஊன்றினான்.

அவ்வளவுதான்; பத்தே நிமிஷங்களில் அந்த இடத்தைக் காலி பண்ணி விட்டுச் சற்றுத் தொலைவிலிருந்த புளிய மரத்தடிக்குப் போய் விட்டது பழைய குடும்பம்.

போகும்போது அந்தக் கூட்டத்திலிருந்த கிழவியொருத்தி, ''மிருகப் பய! ஒடம்பெல்லாம் ரோகமிருக்கே, குஞ்சும் குளுவானுமாயிருக்கிறவங்க பக்கத்திலே குந்துகிறோமென்னு கொஞ்சமாவது ஒச்சை இருக்கா?'' என்று வயிற்றெரிச்சலுடன் முணுமுணுத்தாள்.

''ஏய் கிழவி, வாயைக் கிழிச்சிருவேன்! எனக்கு ஒடம்பெல்லாம் ரோகம்தான். அதனால்தான் உங்களை நிமிட்டிலே விரட்டி விட்டேன். இனிமேல் இந்தப் பக்கம் வந்தீங்களோ, தொலைச்சிடுவேன்!'' என்று அட்டகாசமாகத் தன் வெற்றியின் சூட்சமத்தைப் புலப்படுத்தியவாறு புது மனை புகுந்தான் ராக்கப்பன்.

அன்று முதல் இதுவரை கிட்டத்தட்ட ஒரு வருஷமாவது ஆகியிருக்கும். இந்த ஒரு வருட காலமும் அந்த இடம் அவனுடைய ஆட்சியில்தான் இருக்கிறது. யாரும் அவனிடம் நெருங்க வில்லை; நெருங்க முடியவில்லை என்பதுதான் நிலை.

கோவில் வாசலில் பிச்சையெடுப்பது. அங்கேயும் அவனுடைய வியாதியின் கௌரவத்தை உத்தேசித்துக் கொடுக்கப்பட்ட தனியிருப்புதான். தொழில் முடிந்ததும் தன் குகை வீட்டுக்குள் போய் முடங்கிக் கொள்வது. இவைதான் அவனுடைய நித்திய வாழ்க்கை தர்மங்கள். பொழுது போக்கு? அதுவும் உண்டு. யாரையாவது வம்புக் கிழுத்துக் கூச்சல் போட்டுக் கத்துவதுதான் அவன் பொழுதுபோக்கு.

அவனுடைய வம்புவிவகாரம் ஒரு புது ரகம்.

எவராவது தன் விஷயத்தில் குறுக்கிட்டால் அவர் மீது ஆத்திரப்படுவது மனித இயற்கை. ஆனால் ராக்கப்பன் தன்னை ஏறெடுத்துப் பார்க்காதவர்களைத்தான் வம்புக்கு இழுத்துத் திட்டுவான்.

வழிப்போக்கர்களில் யாராவது மணிக் கூண்டு வழியாக அவனைக் கவனிக்காமல் போனால் போதும். ''என்னய்யா, பொணத்தைக் கண்டவன் மாதிரி முகத்தைத் திருப்பிக் கொண்டு போறே, ஏதாச்சும் குடுத்துட்டுப் போய்யா! ஆள் இருக்கிறது, தெரியலையா?'' என்று பொந்துத் திண்ணைக்குள்ளிருந்து கத்து

வான். இது போதாதா சராசரி மனிதன் ஒருவனின் ஆத்திரத்தைக் கிளறிவிட? வழிப் போக்கன் ஏதாவது அலட்சியமாக அல்லது கோபமாகப் பேசுவான். ராக்கப்பன் அதற் காகத்தான் காத்திருந்தவன் போல் கத்து வான். இப்படிப்பட்ட ரகளைகள் அவன் வர வுக்குப் பின் மணிக்கூண்டுப் பக்கம் ரொம்ப சகஜம். அது அவன் திமிரா அல்லது மனக் குறையா? அவனுக்கே தெரியுமோ என்னவோ?

சமயங்களில் புளிய மரத்தடிக் குடும்பத் தைச் சேர்ந்த அதாவது பொந்துத் திண்ணையி லிருந்து குடிபெயர்ந்த குடும்பம்-சிறிசு ஏதா வது அவன் இருப்பிடத்தருகே வரும். அந்தக் குழந்தை அவனை நோக்கி நெருங்க நெருங்க ஏனோ அவன் முகம் பரபரப்படையும். அதில் இனம் புரியா ஆர்வம் தோன்றும்.

சிறிசு அவன் அருகில் வந்திருக்கும்; அந்தச் சமயம், "இந்தாறே, அந்தக் குஷ்டரோகி பண்டே போவாதே!" என்று புளிய மரத் தடியிலிருந்து அதட்டல் குரல் கேட்கும். சிறிசு பயந்து ஓடிப் போய் விடும். சட்டென்று ராக்கப்பனின் முகமும் விகாரமாகி விடும். "ஏய், பசங்களா! யாராச்சும் இங்கே வந் தீங்கன்னு கொன்னு போடுவேன், கொன்னு" என்று கத்துவான். அந்தக் கத்தல் நிலையற்ற மனத்தின் குரங்கு விளையாட்டா, அல்லது கொதித்து வரும் பால் சிறு உப்புக் கல்லால் இரிந்து விடுவது போன்ற உணர்ச்சிகளின் விசித்திரக் காரணார்த்தமான குமைச்சலா?... மனமே புதிர் தான்!

எவ்வளவோ காலத்துக்குப் பிறகு அன்று தான் புயலும் மழையும் இரவு நேரத்தில் வன்மத்துடன் படையெடுத்துக்கொண்டிருந்த போது, ஓர் உருவம் ராக்கப்பனின் பொந்து வீட்டை நோக்கித் தைரியமாகச் சென்றது.

அந்த உருவத்திடம் யாருமே, "அவன் குஷ்டரோகி; பொல்லாதவன். அவனிடம் போகாதே!" என்று புத்திமதி சொல்ல வில்லை. அப்படியே சொல்லியிருந்தாலும், அந்த உருவம் அந்த அறிவுரைகளை மதித்திருக் கும் என்று சொல்ல முடியாது; காரணம், அது மனிதர்களின் கோபதாபத்தையும், வெறுப்புணர்ச்சியையும் புரிந்துகொண்டு நடக் கத் தெரியாத அற்ப மிருகம்; ஒரு வெள் ளாடுதான்!

மழைக்கு ஒதுக்கிடம் தேடித்தான் அது ராக்கப்பனின் பொந்துத் திண்ணையருகே வந் தது. ஆடு வந்ததை ராக்கப்பன் முதலில் கவ னிக்க வில்லை. அவன் அப்பொழுது மழைக்கும் புயலுக்கும் பயந்து அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருந்த புளியமரத்தடிவாசிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

தள்ளாடித் தள்ளாடி ஓடிக் கொண் டிருந்த கிழவியைப் பார்த்து, "என்ன, கெழவி, மழைக்குப் பயந்து ஓடறயா? வேணும்னு நம்ப திண்ணைக்கு வர்ரியா?" என்று எக்காளமாகக் கேட்டான்.

"நாசமாப் போறவனே, கேலியா பண்ணறே! உன்னை இந்தப் புயலு வாரிக் கிட்டுப் போவாதா? மழையிலே விழுந்து செத்தாலும் சாவேனே தவிர உன்னண்டை வருவேனு?...தோ, நிக்குதே வெள்ளாடு, அது கூட உன் முகத்திலே விழிக்காது" என்று ஏசிவிட்டுத் தூரத்தில் தெரிந்த ஒரு வீட்டுத் தாழ்வாரத்தை நோக்கி ஓடினாள் கிழவி.

அப்பொழுதுதான் ராக்கப்பனுடைய பார்வை வெள்ளாட்டின் மேல் விழுந்தது. அது அவனுடைய திண்ணையை ஒட்டி நின்று கொண்டிருந்தது.


"கிழட்டுப் பொணம் சொல்லி விட்டுப் போவுது. இந்த ஆடுகூட என் முகத்திலே விழிக்காதாமே. ஒரு சனியனும் என் மூஞ்சி யிலே முழிக்க வேணும். நானும் அவுங்க மூஞ்சியிலே முழிக்க வேணும்" என்று முணு முணுத்துக் கொண்டு, "த்தா, ஹை!" என்று ஆட்டை நோக்கிக் கத்தினான் ராக்கப் பன். அவனுடைய கத்தல் ஆட்டின் முன் எடுபட வில்லை. அது அவனை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்தது. பின் தன் தலையை வளைத்து முகத்தை உடம்பில் தேய்த்த வாறு திண்ணையோடு இன்னும் கொஞ்சம் ஒட்டிக் கொண்டு நின்றது.

"ஹை! சனியன் ஓடிப் போறயா, இல் லையா?" என்று பொந்துக்குள்ளிருந்து மிரட் டினான் ராக்கப்பன். அவனுடைய மிரட்ட லைப் பொருட்படுத்தாமல் காதுகளையும் வாலை யும் சுவாரசியமாக ஆட்டிக் கொண்டு மழையை வேடிக்கை பார்த்தது ஆடு.

ராக்கப்பனுக்குச் சரியான கோபம். நியா யம்தானே! மனிதன்கூட அவனுக்குப் பயப் படுவான். அந்த அற்ப மிருகம் எவ்வளவு அலட்சியமாக நிற்கிறது!

அவன் ஆத்திரத்தைக் கிளறி விடும் அடுத்த நடவடிக்கையில் இறங்கியது ஆடு. ஒரே தாவலில் ராக்கப்பனின் திண்ணைக்குள் ஏறி யது. அவ்வளவுதான்; அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டது. ஓங்கி ஓர் அறை அறைந்து அதை வெளியே தள்ளினான்.

வெளியே குதித்து ஓடிய ஆடு சிறிது தூரம் சென்றதும், நின்று ராக்கப்பனைப் பார்த்தது. ஒரு விநாடிக்குள் அது சொட்டச் சொட்ட நனைந்து விட்டது.



மழையின் வேகம் தாங்காமல் அது மீண்டும் திண்ணையை நோக்கித் தயங்கியவாறு வந்தது. சற்று முன்னால் நின்ற அதே இடத்தில் திண்ணையோரமாக நின்று கொண்டு ராக்கப்பனைப் பரிதாபமாகப் பார்த்தது.

ஆட்டின் பார்வையில் ராக்கப்பனுக்குச் சற்றுப் பெருமைதான். முன்னால் அவனுடைய மிரட்டலுக்குக்கொஞ்சமும் மசியாமல் நின்று கொண்டிருந்த ஆடு, இப்பொழுது அவனுக்குப் பயந்து பயந்து தானே நின்று கொண்டிருக்கிறது!

தன்னிடம் அதற்கு உண்மையாகவே மரியாதை தோன்றியிருக்கிறதா என்று சந்தேகத் துக்கிடமில்லாமல் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவனுக்கு ஆசை ஏற்பட்டு விட்டது. ராக்கப்பன் எந்தப் பள்ளிக்கூடத்திலும் ஜீவகாருண்யத்தைப் பற்றிப் படித்ததில்லை. எனவே அவனுக்கு அந்த விஷயங்களெல்லாம் தெரிந்திருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அவன் தன் சொந்த மனப் போக்குக்கிணங்கவே ஆட்டிடம் தன் விவகாரத்தை ஆரம்பித்தான்.

அவன் வேண்டுமென்றே தன் கோபத்தை வரவழைத்துக் கொண்டு 'ஹே, ஓடிப் போ!' என்று கையை ஓங்கியவாறு மீண்டும் ஒரு மிரட்டல்—இப்போது அது போலி மிரட்டல்—போட்டான்.

அவன் கையை ஓங்கியதுமே ஆடு ஓடி விட்டது. அடி வாங்கியது மறந்து விடுமா?

தன் அதிகாரம் ஆட்டின் மேல் வெற்றிகரமாக அமுலாவதில் ராக்கப்பனுக்கு ரொம்பத் திருப்தி ஏற்பட்டு விட்டது.

இரண்டாவது தடவையும் விரட்டப்பட்டு விட்டதால் ஆடு மழையிலேயே திகைத்து நின்றது. ஆனால் அதன் பார்வை ராக்கப்பனின் திண்ணைமீதுதான்.

ராக்கப்பனுக்கும் சற்று மனமிளகி விட்டது. ஆரம்பத்தில் சண்டித்தனம் பண்ணினாலும், பின் தன் கட்டளைக்குப் பணிந்து நடக்கும் தன் திகர் பிரஜை மீது அவனுக்கு அக்கறை ஏற்பட ஆரம்பித்தது. பயம் மட்டுமின்றி, அவன் மீது அதற்கு அன்பும் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. அவன் விரட்டி விட்டாலும் திரும்பவும் அவனையேதானே நோக்குகிறது. கிழவி என்னவோ சொன்னளே, அவளைப் போல் அது அந்த வீட்டுத் தாழ்வாரத்துக்கு ஓடவில்லையே!

ஆட்டின் பார்வை ராக்கப்பனுக்கு வியப்பை அளித்தது. அவனை இதுவரையில் யாருமே உற்றுப் பார்த்ததில்லை. அப்படியே யாராவது பார்த்தாலும், மறுவிநாடியே சொல்லொணுக் கொடுமையுடன் முகத்தைச் சுளித்துக் கொண்டு சரேலெனத் திரும்பி ஓடி விடுவார்கள். அவனுக்குப் பிச்சையிடுகிறவர்கள்கூட அவனை அனுதாபத்தோடு பார்த்ததில்லை; அருவருப்போடுதான் பார்த்தார்கள். ஆட்டின் அதிசயப் பார்வை ராக்கப்பனுக்கு விளங்காத புதிராயிருந்தது; இதுவரையில் அவன் வாழ்நாளிலேயே நுகர்ந்தறியாத ஒரு புது அநுபவமாகவும் இருந்தது. அன்பையோ, அனுதாபத்தையோ, ஆதரவான சொல்லையோ என்றுமே அறியாதவன் ராக்கப்பன். இதுவரையில் மனித இனத்தின் கொடுஞ் சொற்களுக்கும், அருவருப்பான உணர்ச்சிக்குமே ஆளாகிவந்த ராக்கப்பன் இன்று முதன் முதலாக ஒரு ஜீவராசியின் பார்வைக்கு இலக்காகி யிருக்கிறன். அவனைத் தவிர மற்றவர்களுக்கு இதைப் பற்றி என்ன சொன்னாலும் விளங்காது. இந்த அபூர்வ நிகழ்ச்சி ராக்கப்பனின் மரத்துப் போன உள்ளத்தை ஓரளவு இளக வைத்து விட்டது.

எவ்வளவு நேரம்தான் ஆடு மழையில் நிற்கும்? மனிதனின் கொடுமைக்குப் பயப்படுவதைவிட இயற்கையின் கொடுமைக்கு அதிகமாகப் பயந்து பழகி விட்ட ஜீவன் அது. மீண்டும் திண்ணையருகே வந்தது. சிறிது நேரம் திண்ணையருகே நின்று ராக்கப்பனையே பார்த்தது.

ராக்கப்பன் ஒன்றும் சொல்லவில்லை. ஆட்டுக்குக் கொஞ்சம் தைரியம் ஏற்பட்டிருக்க வேண்டும். மெல்லத் திண்ணை மீது ஏறியது. முதலில் அவனுக்குப் பயந்து திண்ணையின் விளிம்பருகே ஒட்டிக் கொண்டு நின்றது. அப்பொழுதும் ராக்கப்பன் அதை விரட்டவில்லை. ஆகவே அது சுதந்திரமாகத் திண்ணையின் உட்புறத்தில் நுழைந்து கொண்டது.

வெளியே மழை 'விர் விர்' என்று வேகம் கொண்டு பெய்தது. பொந்துத் திண்ணைக்கும் சரசர வென்று தூவானம் அடித்தது.

வெளிப்புறத்தை நோக்கிக் கொண்டிருந்த ஆடு தன் முகத்தைத் திருப்பி மறைவிடத்துக்காக ராக்கப்பனின் கன்னங்களில் உரசியவாறு அவனுடைய தோள்பட்டைகளில் தன் தலையைப் புதைத்துக் கொண்டது.

இது என்ன மாயமா, மந்திரமா? ஆட்டின் ஸ்பரிசம் பட்டதும் அந்த முரட்டு ராக்கப்பனின் கண்கள் ஏன் இப்படிப் பாசக் கிளர்ச்சியில் துடிப்பவை போல் பளபளக்கின்றன? அவனுடைய கோபம், விளையாட்டு எல்லாம் எங்கே? எல்லாமே செயற்கைதானே?

சிறிது நேரம் பித்தன்போல் ஆட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்



'' என்ன சார் இது ! மாப்பிள்ளை, பெண் ரெண்டுபேருமே இந்த ஊஞ்சல் அயிட்டம் வேண்டியதில்லேன்னு அபிப்பிராயப்படறுளே ?''

ராக்கப்பன். திடீரென்று அந்தச் 'சிடுமூஞ்சி முரடன்' தான் போர்த்தியிருந்த துணியை ஆட்டின் முதுகிலும் சேர்த்துப் போர்த்தி அதைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு 'ஹோ'-வென்று கதறி அழுது விட்டுப் புலம்ப ஆரம்பித்து விட்டான்.

''இந்த உலகத்திலே நீ மட்டும்தான் என்னைப் புரிஞ்சிக்கிட்டிருக்கே! உனக்கு மட்டும் தான் நான் வேணும். இனிமே நீ மட்டும்தான் எனக்கு வேணும்'' என்று அவன் புலம்பியதை ஆடு புரிந்துகொண்டதோ என்னவோ, அது அவனுடைய முகத்தோடு தன்னுடைய முகத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டது.

மழையின் வேகம் வர வர அதிகரித்தது. தூவானம் இழிசல் போர்வையையும் மீறி அவர்கள் இருவரையும் தாக்கியது. ஆடு வெடவெட வென்று நடுங்கியது.

சிறிது நேரம் ராக்கப்பன் யோசித்தான்: பின் இருவருக்கும் மூடியிருந்த துணியை எடுத்து ஆட்டின் மேல் இடைவெளியில்லாமல் போர்த்தினான். ஆட்டைத் தன் முதுகுப்புறமாக நிறுத்தி அவன் திண்ணையின் முன் பக்கமாகத் தள்ளி உட்கார்ந்து கொண்டான். அவன் உட்கார்ந்திருந்தது ஆட்டின் மீது மழைத் துளி விழாதவாறு அமைப்பாக இருந்தது. இனி ஆட்டின்மீது மழைத் துளிகள் படவேண்டுமானால் அவன் உடம்பை ஊடுருவி அடித்தால்தான் உண்டு.

இட நெருக்கடி. திண்ணையின் வெளியோர விளிம்பில் கரங்களை ஊன்றியவாறு குந்திக் கொண்டிருந்தான் ராக்கப்பன். ரோகத்தால் மக்கிப் போன சொத்தைக் கரங்களின் பலத்தில்தான் அவன் உடம்பு உட்கார்ந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த உயிரிலோ அசாதாரணத் தீரம்!


வெளியே உலகத்தையே உருட்டிப் புரட்டி விடுவது போல் மழையும் புயலும் பேய்க் கூத்து ஆடின. உள்ளே பின்புறத்தில் அஞ்சி ஒடுங்கி ஒதுங்கிக் கொண்டிருந்தது உலகத்தின் கண்களுக்கு அற்பத்திலும் அற்பமான ஒரு ஜீவன். நடுவில் வாழ்வு, அறிவைப் பற்றிய சிந்தனையைக் கடந்த நிலையில் வீறு கொண்டு போராடிக் கொண்டிருந்தது ஓர் உயிர்.

விடியும் வரையில் ஊழிக் கூத்து ஆடி ஓய்ந்தது மழை.

விடிந்தது. இரவின் பெரும் பகுதி வரை உணர்ச்சிப் பெருக்குடன் உறவாடிக் கொண்டிருந்த இரு உயிர்களில் ஓர் உயிர் திண்ணையிலிருந்து குதித்தது. சிறிது நேரம் மழை நீரில் நனைந்து, சகதியில் கிடந்த தன் துணையை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தது.

சடசட வென்று வண்டிச் சத்தம் கேட்டதும் வாழ்ந்து கொண்டிருந்த உயிர், வாழ்ந்து முடித்து விட்ட தன் துணையை விட்டுத் தயங்கித் தயங்கிச் சென்றது.

வெகு காலமாகப் பிணமாக வாழ்ந்து, பின் ஒரே ஒரு இரவு மட்டும் மனிதனாய் வாழ்ந்து விட்ட திருப்தியில் மடிந்து விட்ட அந்தச் சடலத்தை எடுத்துப் போட்டுக் கொண்டு, நகர்ந்தது நகரசபை வண்டி.



கயிற்றுத் தளவிரிப்புகள்

(COIR CARPETS)

உபயோகித்து உங்கள் வீடுகளை அழகுமிக்கதாக ஆக்குங்கள்

கயிற்றுத் தளவிரிப்புகள் விரிக்கப்பட்ட அறைகளில் வசிப்பது மனமகிழ்ச்சி ஊட்டுகிறது. கயிற்றுத் தளவிரிப்புகள் கவர்ச்சிகரமானவை. நீடித்து உழைப்பவை. கண்கவர் வர்ணங்களில் கிடைக்கின்றன. ஒரு கயிற்றுத் தளவிரிப்பிற்காகச் செய்யப் படும் முதலீடு லாபகரமானது. உங்கள் பணத்திற்குரிய சிறந்த பயனை நீங்கள் பெறுகிறீர்கள்.

உங்களுக்கு அருகிலுள்ள காயர் போர்டு ஷோரூமில் உள்ள உன்னத ரகங்களைப் பார்வையிடுங்கள்.

காயர் போர்டு

ஷோரூம் & ஸேல்ஸ் டிபோ

- 5, ஸ்டேடியம் ஹவுஸ், சர்ச்கேட், பம்பாய்.
- 16-A, ஆசப் அலி ரோடு, புது டெல்லி-1. போன்: 26988
- 1/155, மவுண்ட் ரோடு, மதராஸ்-2 போன்: 85787.
- 1-A, மஹாத்மா காந்தி ரோடு, பெங்களூர்-1. போன்: 70216.
- 22, லவுடன் தெரு, (வாசல் பார்க் தெருவில்) கல்கத்தா-16. போன்: 44-5287.

காயர் போர்டு (இந்திய அரசாங்கம்) ஊறுகுமை

EP

படித்துப் பாருங்கள்



வாண்டுமாமாவின் குழந்தை நூல்கள்: பேசும் கிளி

வாண்டு மாமாவின் வானவில் கோஷ்டியைப் பேசும் கிளியில் சந்திக்கிறோம். குழந்தைக் குலத்தின் கோடானு கோடி குணதிசயங்களுக்கெல்லாம் பிரதிநிதிகளாக விளங்குகிறார்கள் வானவில் கோஷ்டியினர். அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் ஜிம்மி, சடையன் என்ற நாய்க்குட்டிகளும், கதைக்குப் பெயர் தந்துள்ள பேசும்கிளியும் இதைப்படிக்கும் குழந்தைகளின் பாச எல்லையை வெகு தூரத்துக்கு விரிவுபடுத்துகின்றன. அன்றாட நடப்புக்களிலும், விளையாட்டுக்களிலும், அவ் விளையாட்டுகள் விளையாவதிலும் இளம் உள்ளங்கள் காணும் பிரத்தியேக உலகை அழகாக வடித்துக் காட்டும் 'பேசும் கிளி' யின் விலை ஒரு ரூபாய்.

பரங்கிமலைப் பாதுஷா

பரங்கிமலைப் பாதுஷா சாதாரண நிகழ்ச்சிகளிலிருந்து, அசாதாரணச் சம்பவங்களுக்குத் தாவுகிறது இந்த வானவில் கோஷ்டி. அலாவுத்தீனின் அற்புத மோதிரம் என்ன ஆயிற்று என்பதை இதில் தெரிந்து கொள்ளலாம். வானவில் கோஷ்டியோடு வான மண்டலத்தைக் கடந்து வைகுண்டத்துக்குப்போகலாம்; கால வெள்ளத்தைக் கடந்து இராமபிரானின்காலத்துக்கும் போகலாம். ராமனிடமும், கண்ணபிரானிடமும் வானவில் சிறுவர்கள் அளக்கும் அளப்புகளும், அமெரிக்காவிலும், கல்தான் பட்டாபிஷேகத்திலும் (ஆமாம். இந்தக் கதையில் எங்கெங்கெல்லாமோ சென்று யாருடனெல்லாமோ அளவளாவுகிறோம். ரேஷன் காலத்தில் சர்க்கரைப் பண்டம் கொண்டுதர அந்த அலாவுத்தின் பூதத்தாலும் முடியாதது; கலப்பட எண்ணெய் பட்சணம் சாப்பிட்ட கிருஷ்ண பெருமான் தீபாவளிக்கே தீபாவளி ஸ்நானம் செய்ய எண்ணுவது. இவை போன்ற நகைச் சுவை ததும்பும் பல நிகழ்ச்சிகள் கொண்டது 'பரங்கிமலைப் பாதுஷா. விலை ரூ. 1.25.

எறும்பு உலகம்

சின்னஞ்சிறிய இந்த எறும்புகளின் பிரபஞ்சத்தில் தான் எத்தனை பெரிய பெரிய வித்தைகளெல்லாம் அடங்கியுள்ளன! எறும்புகளில் எண்ணாயிரம் வகையாம். இவற்றின் உடலமைப்பில் எத்தனையோ அதிசயங்கள். வாழ்முறை அதைவிட ஆச்சரியம். சிப்பாய் எறும்பு, 'நர்ஸ்' எறும்பு, 'பால்' தரும் மாட்டெறும்பு, வேலைக்கார எறும்பு, உழவு செய்யும் எறும்பு, தச்சனுர் எறும்பு என்று பலப்பல இனுசுகளைப் பற்றிய பல அற்புதங்களைச் சுவைபடக் கூறுகிறது இப்புத்தகம்.

அகேஷிய எறும்பு, அமேசான் எறும்பு, மனிதனைச் சில நிமிஷங்களில் எலும்புக்கூடாக அரித்துப் பிடுங்கி விடும் சாலமான் எறும்பு என்று இப்படி அனேக ருசிகரமான விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. குழந்தைகள் மட்டுமின்றிப் பெரியவர்களும் கூடப் பல அதிசய உண்மைகளைக் கதை போல நயம்படக் கூறும் எறும்பு உலகத்தின் விலை ரூபாய் ஒன்றுதான்.

காட்டுச் சிறுவன் கந்தன்

செயற்கரிய சாதனைகளின் மூலம் மட்டுமே டார்ஜான் மக்களைக் கவர்ந்திருக்கிறான்; ஆனால் காட்டுச் சிறுவன் கந்தனோ, அரிய பல செயல்கள் செய்த போதிலும், தனது சீரிய குணநலன் மூலமே நம்மை வசியம் செய்து கொள்கிறான். காட்டு விலங்குகளெல்லாம் அவன் சீட்டிக்குக் கட்டுப்படும்போது குழந்தைகளுக்குக் கேட்பானேன்? பின்னர் சத்தியானந்தரை ஒழிப்பதற்காக, அவர் தம்பி தூமகேது வகுத்த சதித் திட்டங்களை அந்த அநாதைப் பிள்ளை எப்படித் தவிடுபொடியாக்கினுனென்பது ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எழுதப்பட்டிருக்கிறது. எனினும் கடைசி வரையில் அவன் தூமகேதுவைக் காட்டிக் கொடுக்காமலே இருப்பது அவனது உயர்ந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. விறுவிறுப்பான சம்பவங்கள் நிறைந்த இந்தப் புத்தகத்தின் விலை இரண்டு ரூபாய்.

அதிசய வீணை

அஞ்ஞாத வாசம் செய்துகொண்டே அந்த





வீணை ஒரு துப்பறியும் கதையை மீட்டி விட்டிருக்கிறது என்றால் அதை அதிசய வீணை என்று ஏன் சொல்லக் கூடாது? வழக்கம் போலவே வாண்டுமாமாவின் வாண்டுப் பாத்திரங்கள்தாம் சிக்கல்களை அவிழ்த்து விடுகின்றனர். ராமு, விச்சு, சரசு, சகுந்தலா, கோபு, சேகர், இவர்களைப் பிஞ்சு நெஞ்சங்கள் என்றும் மறக்க முடியாது. இதன் விலை ரூபாய் ஒன்று.

சர்க்கஸ் சுந்தரி

புலியையும் சிங்கத்தையும் கூட ஆட்டி வைக்கும் அந்தச் சர்க்கஸ்காரர்களையும் ஆட்டிவைக்கிறார் கம்பெனி மானேஜர் கஜபதி. கடைசியில் அந்தப் பொல்லாத கஜபதியையும் ஓர் ஆட்டு ஆட்டி வைத்துத் திருத்தி விடுகிறாள் சிறுமி சுந்தரி.

பார் நிபுணன் ராஜாவுக்கும் சுந்தரிக்குமிடையேயுள்ள பேரன்பும், நாய்க்குட்டி ரோஸிக்கும் அந்தக் குழந்தைகளுக்குமுள்ள தோழமையும் உள்ளத்தைத் தொடும் வகையில் சித்திரிக்கப்பட்டுள்ளன. இக் கதையில் வரும் துரை, கோமாளி, சங்கரராம் தாத்தா யாவரும் உயிருள்ள மனிதர்களாகவே இளம் இதயங்களுக்குத் தோன்றுவார்கள். 'சர்க்கஸ் சுந்தரியின் விலை ரூ. 1.50.

ஆறு புத்தகங்களும் சிறுவருக்கேற்ற அருமையான கதைகள். வாண்டுமாமாவுக்கே உரிய லாகவத்துடன் குழந்தைகளின் கவனத்தை இழுக்கக்கூடிய இந்த ஆறு புத்தகங்களும் ஓர் அரிய பரிசாகும்.

பிரசுரம்: அருணோதயம், ராயப்பேட்டை, சென்னை - 14.

1. ஸ்தோத்ரமாலை
2. சகல கார்ய சித்தியும் ஸ்ரீமத் ராமாயணமும்

ஸ்தோத்திரமாலை என்ற நூலில் ஸம்ஸ்கிருத மூலத்திலுள்ள பல ஸ்தோத்திரங்கள் தமிழ் எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. நாம ராமாயணமும் அஷ்டோத்தரசத நாமாவளிகளும் ஆலய வழிபாட்டுமுறைகளும் நவக்கிரகக் கோலங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஸம்ஸ்கிருத எழுத்தில் மூலத்தை வாசிக்கத் தெரியாதவர்களுக்குப் பூஜா காலங்களில் இந்நூல் பேருதவியாயிருக்கும்.

இராமாயணத்தில் உள்ள குறிப்பிட்ட சில பகுதிகளைப் பக்தியுடன் படித்தால் படிப்பவர்களின் குறைகள் நீங்கி நினைத்த பயன் கைகூடும்என்றும் வாயு புராணம் கூறுகிறது. அதற்கிணங்கப் பாராயணம் செய்வதற்குரிய பகுதிகளை எளிய தமிழ் நடையில் கீர்த்தனாசாரிய வி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காருடைய மொழிபெயர்ப்பிலிருந்து தொகுத்து 'சகல காரிய சித்தியும் ஸ்ரீமத் ராமாயணமும்' என்ற நூலில் வெளியிட்டிருக்கின்றனர். இதில் ஸ்தோத்திர மாலையும் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

பிரசுரம்: தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை - 17; இரண்டும் விலை ரூ. 3.

பிள்ளையார் லட்சுமி. அன்புப்பிரியாள்

இவை சென்னை அமுத நிலையம் வெளியிடும் சமய நூல் வரிசையைச் சேர்ந்த மலிவுப் பிரசுரங்கள்.

'பிள்ளையார்' எனும் நூலில் பி. ஸ்ரீ. கூறுவதுபோல் மாறுதல்களை எங்கும் காண்கிறோம். பழையன கழிந்து புதியன புகுவது காலப் போக்கில் இன்றியமையாதது. எனினும் கால வெள்ளத்தையும் புரட்சி வெள்ளத்தையும் எதிர்த்து நிற்கும் உண்மைகளும் உண்டு. அப்படிப்பட்ட உண்மைகளின் பொக்கிஷங்களாக இந்நூல்கள் மிளிர்கின்றன. பிள்ளையார் பூஜை, வரலட்சுமி விரதம், கௌரி பூஜை முதலிய பண்டிகைகளை ஆண்டுதோறும் கொண்டாடுகையிலும், பிற வழிபாட்டுக் காலங்களிலும் இந்நூல்களைத் திரும்பத் திரும்பப் படித்தால் அனைவரும் பெரும் பயனை அடையலாம். அளவற்ற ஆத்ம சம்பத்து இந்தப் பழைய கதைகளில் பொதிந்து கிடக்கின்றன.

பிரசுரம்: அமுதநிலையம் சென்னை-18. விலை ஒவ்வொன்றும் 30 காசுகள். —அண்ணா

தர்மகர்த்தா (நாடகம்)

ஜோசியத்தை நம்பக் கூடாது என்பது இந்த நாடகாசிரியர் கருத்துப் போலும். இதை வலியுறுத்துவதாக நினைத்துக்கொண்டு, வலுவில்லாத ஒரு கதையை, ஒழுங்கில்லாத காட்சி அமைப்பின் மூலம் சொல்ல முயல்கிறார் ஆசிரியர். நாடகத்தின் தொடக்கத்தில் குமரவாத்தியார், தன் மகளைப் பற்றி எழுதப்பட்ட ஜோசியர் குறிப்பைப் படித்துவிட்டு, ''மீனாட்சி நீ வேசை!'' என்று அலறுவதும், அதை அவருடைய மாணவி மீனாட்சி கேட்டு விட்டு எல்லாரிடமும் சொல்லுவதும், அந்தப் பெண்ணின் தந்தை குமரன் மீது 'கேஸ்' போடுவதும், வழக்கின் போது குமரன்தான் அந்தப் பெண்ணைப் பலாத்காரம் செய்ததாகப் பொய் சொல்லுவதும், அதை நம்பி நீதிபதி. ''உன்னைப் பீரங்கி வாயில் வைத்துச் சுக்குநூறாக்கி இருப்பேன். போனால் போகிறது என்று பத்து ஆண்டுகள் கடுங்காவல் விதிக்கிறேன்'' என்று தீர்ப்பளிப்பதும், எல்லாம் ஒரே கேலிக் கூத்தாக இருக்கின்றன.

நாடகத்தின் கதையோ அல்லது சம்பாஷணைகளின் தரமோ ஒருபுறம் இருக்கப் பல ஆட்சேபகரமான கருத்துக்களும் பிரசாரங்களும், மலிந்திருப்பது விரும்பத் தக்கதாக இல்லை. ஒரு பிரபல தினசரியின் பெயர் அநாவசியமாக இழுக்கப் பட்டிருக்கிறது. (பக்கம் 81) இதிகாச புராணங்கள் கொளுத்தப்பட வேண்டும், மனு பரிமேலழகர் போன்றவர்களை வம்புக்கிழுக்க வேண்டும், கடவுளைக்கூட இலேசாக அங்கங்கே கேலி செய்ய வேண்டும் இவைதான் இந்த நாடகாசிரியரின் நோக்கமோ? புத்தகத்தின் தலைப்பைத் தர்மகர்த்தா என்பதற்குப் பதில் அதர்ம கர்த்தா என்று வைத்திருக்கலாம். —மகரம்

எழுதியவர்: ஏ. பி. சண்முகம், நாச்சியார் கோவில், தஞ்சை மாவட்டம், விலை: ரூ. 1.25.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.


தூய, மெல்லிள
லக்ஸ் சோப்புக்கு
வானவில்லின் 4 வித
வண்ணங்கள்
தவிர, நமதருமை வெண்மையும் உண்டு
LUX
பச்சை
நீலம்
LUX
LUX
Pink
இளஞ்சிவப்பு
மஞ்சள்
LUX
'அழகழகான
வண்ணங்களாம்; ஆசைக்
கினிய வண்ணங்களாம்!'
குமாரி வைஜயந்திமாலா
புதுமையோ புதுமை! வண்ணவண்ணக் கோல
மும் வாகான மேலுறையும் புனைந்து வருகுது
லக்ஸ். வெண்ணிறந்தானே? உண்டு. உண்டு.
நேயமுடன் நம்மோடு பழகிவிட்ட அதே லக்ஸ்...
எந்த வண்ணமும் நமக்கே சொந்த வண்ணம்,
எழிலோங்குதலே திண்ணம், திண்ணம்!
LUX
சினிமா நட்சத்தி
ரங்களின் தூய,
மெல்லிளம் அழகு
சாதன சோப்.
இந்துஸ்தான் லீவர் தயா
LTS. 86-X52 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon